# "பித்அத்"துக்கு
## உண்மையின்
# சவுக்கடி

**(பாகம் 1 & 2)**

*நூலாசிரியர்*

**ஷெய்ஹுல் முப்லிஹீன்**

**M.S.M. அப்துல்லாஹ் (ரஹ்)**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல்: manimekalai1@dataone.in
இணைய தளம்: www.tamilvanan.com

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Bithathuku Unmain Savukadi** |
| Author | : | **Seyhul Mufliheen<br>M.S.M.Abdullah (Rah)** |
| Subject | : | ***The Change of Truth of Bid-ath*** |
| Language | : | **Tamil** |
| First Publication in Tamilnadu | : | **2012** |
| Copy right | : | **All Ceylon Thareekathul Mufliheen** |
| Publisher | : | **All Ceylon Thareekathul Mufliheen<br>Colombo Branch Sri Lanka** |
| Paper Used | : | **70 Gsm Bank** |
| Paper Size | : | **A5** |
| Size of the Book | : | **1/8** |
| Type used for Text | : | **Kalaham** |
| Number of pages | : | **140** |
| ISBN | : | **955-1212-05-3** |

**Printed By :**

**PARANAN ASSOCIATES PRIVATE LIMITED**

403 1/1, Galle Road, Wellawatta, Colombo - 06.

T.P: 2507932, 2551241 Hotline : 077-7370292.




# என்னுரை

இஸ்லாமிய பெருங்குடிமக்களே!

அஸ்ஸலாமுஅலைக்கும்!

இந்நூல் என்னால் எழுதப்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் என்பதனை மனப்பூர்வமாக அறிகிறேன். உலமாக்கள் புத்திஜீவிகள் உட்பட அதிகமானோர் இவ்வாறான ஓர் புத்தகத்தை நான் வெளியிட வேண்டுமென்று என்னை வேண்டிக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளையும், அவாவையும் பூர்த்திசெய்யும் நோக்குடனும், உண்மையை உலகறியச் செய்யவேண்டும் என்ற நன்நோக்குடனும் இதனை வெளியிடுகிறேன்.

இந்நூல் உங்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று அல்லாஹ்வை பிராத்திக்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் கலிமத்துத்தையிபாவின் உண்மையை உணரவைத்து உண்மைத் தௌஹீதை நஸிபாக்கித் தருவானாக.

ஆமீன்.

குறிப்பு:

A. அப்துல் றஊப் அவர்களின் புரட்டல்களை அம்பலப்படுத்துவதற்காக அவரால் எழுதப்பட்ட சில சாட்சிகளை இந்நூலின் கடைசியில் பிரசுரித்துள்ளேன். இவரை உரைத்துப்பார்க்க அச்சாட்சிகள் உங்களுக்கு பெரிதும் உதவுமென நம்புகிறேன்.

இவ்வண்ணம்

ஆசிரியர்

# “பித்அத்”துக்கு
# உண்மையின்
# சவுக்கடி

**(பாகம் 1 & 2)**

*நூலாசிரியர்*

**ஷெய்ஹுல் முப்லிஹீன்**
**M.S.M. அப்துல்லாஹ் (ரஹ்)**



بسم الله الرحمن الرحيم

ஆதாரமின்றியே ஆற்றலுடைய அல்லாஹ்வுக்கே சர்வபுகழும். உலக மக்களின் ஒளிவிளக்கான எமது வழிகாட்டி றசூலேகரீம் (ஸல்) அவர்களுக்கும், அவர்களைப் பின்பற்றிய எல்லா மக்களுக்கும் அல்லாஹ் சாந்தியையும் சமாதானத்தையும் நல்குவானாக, ஆமீன்.

அன்பிற்குரிய அறிவுடைய முஸ்லீம் பெருமக்களே!

01-06-87இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ. அப்துல் றஊப் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட ‘ஹமவோஸ்த்’ என்ற நூலை நான் பல கண்ணோட்டங்களோடு பார்வையிட்டேன். இது விஷயமாய்ச் சிலமக்கள் நேரடியாகவும், சிலமக்கள் கடிதங்கள் வாயிலாகவும் என்னை விசாரித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் பதில் கூறுவது மிகச்சிரமம் என்பதால் அவர்கள் அனைவருடைய சந்தேகங்களையும் கேள்வி, பதில் என்ற முறையில் விளக்குவதே நல்லதெனக் கண்டேன். ஆகையால் தான் இச்சிறுநூலை எழுதுகிறேன்.

இத்துடன் 1984ஆம் ஆண்டில் எமக்கும் அப்துல் றஊபுக்குமிடையில் நடந்த கடிதத்தொடர்பு மூலமாகவும், அப்துல் றஊபுடைய பொது மேடைப்பேச்சுக்கள் மூலமாய் மக்களிடையே தோன்றிய வாக்குவாதங்களுக்கு விடையளிக்கும் நோக்கமாகவும், எமது மாணவர்களுக்கு நான் எழுதிய ஒரு நீண்ட கடிதத்தின் ஒரு சிறு பகுதியையும் இத்துடன் இணைத்துள்ளேன். வாசித்து விளங்கித் தெளிவு பெறுவீர்களாக.

1ஆவது கேள்வி

'ஹமவோஸ்த்' என்ற நூலில் 21ஆவது பக்கத்தில் உருவமில்லாத ஒன்றை எம்மால் பார்க்கமுடியாது என்பதை விளக்குவதற்காக காற்று, ஒலி, ஒளி போன்றவற்றை உதாரணமாகத் தரப்பட்டுள்ளன. மேலும் காற்றை இதுவரை யாரும் கண்டதாக வரலாறே கிடையாது என்றும், அவை உருவமற்றிருப்பதால் சூட்சுமமானவையே என்றும் கூறப்பட்டுள்ளது. இது சரியான உண்மையான விளக்கம்தானா?

பதில்

*கருத்தை விட்டுவிட்டுச் சொல்லழகில் மூழ்குபவர் களுக்கெல்லாம் கேடுதான்* என்று றசூல் (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸ் இருக்கிறது. உருவமில்லாததைப் பார்க்கமுடியாது என்பதை விளக்குவதற்காக றஊபால் கையாளப்பட்ட உதாரணத்தை நாம் முழுமனதோடு ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், தௌஹீதுக்கும் இவ்விஷயத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதால் இதன் உண்மையை இப்போது ஓரளவு விளக்குவோம். பௌதீகம் என்பதைத் திண்மம், திரவம், வாயு என்று மூன்று பகுதிகளாகக் கொள்ளலாம். காற்றைப் பிரித்துத் தனித்தனியாய் எத்தனையோ வாயுக்களை விஞ்ஞானம் கண்டறிந்திருக்கிறது. ஒலி, ஒளி என்பதும் அடர்த்தி குறைந்த பௌதீகப் பொருட்களேதான். இவை சூட்சுமப் பொருட்களல்ல. காற்று, ஒலி, ஒளி என்பவற்றை நீளம், அகலம், கனம் என்ற முப்பரிமாணங்களில் கட்டுப்படுத்தலாம். ஒலி, ஒளி, வாயு போன்றவற்றைப் பௌதீகப் பொருட்கள் என்று ஏன் கூறுகிறார்கள்? இவை பௌதீகப் பொருட்களால் தடைப்படவும் திசைமாறவும் கூடியன. அதுமட்டுமல்லாமல் இவை செல்வதற்கு ஊடகங்களும் தேவையாகின்றன. சூட்சும வஸ்துக்களுக்கு அவசியமல்ல. சூட்சுமம் எவ்விதத் தடையுமில்லாமல் திசைதிரும்பாமல் பௌதீகத்தை ஊடுருவிச் செல்லக்கூடியது. ஆகையால்தான் காற்று, ஒலி, ஒளி போன்றவை பௌதீகம் என்று கூறப்படுகிறது. இந்த



வஸ்த்துக்களுக்கு நிறை, காலம், இடம், நிறம், சுவை போன்ற பல பண்புகளும் உண்டு. தற்கால O/L, A/L வகுப்பு மாணவர்களின் பாடநூற்களைக் கொண்டே இவ்வுண்மையை உணரலாம். மேலும், 'என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா' போன்ற கலைக்களஞ்சியங்கள் வாயிலாகவும் விபரமாக அறியலாம்.

மனிதனுடைய பார்வை, கேள்வி, பேச்சு, மூச்சு, ஸ்பரிசம் போன்ற வெளிப்புலன்களும் ஒலி, ஒளி இனத்தைச் சேர்ந்த பௌதீகப் பொருட்களேதான். இந்த ஐம்புலன்களும் பௌதீகப் பொருட்களால் தடைப்படக் கூடியனவே. ஆனால் மனிதனுடைய சூட்சுமப் புலன்களை எந்த ஒரு ஜடப் பொருளாலும் தடைப்படுத்த முடியாது. திசைதிருப்பவும் முடியாது. இந்தப் புலன்களைக் கொண்டுதான் பெரியார்கள் சூட்சும உலகின் விஷயங்களைக் கிரகிக்கிறார்கள், அறிகிறார்கள். றப்பைக் காணுதல் என்பதும் இப்புலன்களைக் கொண்டேயன்றி வெளிப்புலன்களைக் கொண்டல்ல. வெளிப்புலன்களால் பெற்றுக்கொள்ளப்படுவது பொய்க்காட்சியே. அவ்லியாக்கள் காணும் காட்சிகளை 'ஹிஸ்லி, கியாலி' என்றும், பொய்க்காட்சி, உண்மைக்காட்சி என்றும் வகுத்திருப்பது இந்த அடிப்படையைக் கொண்டுதான். அதாவது, கண்ணை மூடினாலும் விழித்தாலும் தெரியக்கூடிய காட்சியைத்தான் றூயா (முஸாஹிதா) என்றெல்லாம் கூறப்படுவது, மற்றவை கற்பனையான பொய்க்காட்சிகளே. இதை ஏன் இவ்வளவு விபரித்தேன் என்றால் நான் தரப்போகின்ற உண்மையான விளக்கங்களுக்கு இது உதவியாய் அமையும் என்பதற்காகத்தான்.

2ஆவது கேள்வி

'ஹமவோஸ்த்' என்ற நூலின் 30ஆவது பக்கத்தில் உருவம் உண்டு என்பதற்கு இரு வஸ்துக்கள் அவசியமில்லையென்றும் ஒரே வஸ்த்துவைக் கொண்டே உருவம் உண்டு என்று கூறமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது அறிவுக்கு மாறான கூற்றல்லவா?

பதில்
ஆம். இக்கூற்றுக்கு எவ்வித தர்க்கரீதியான ஆதாரங்களோ அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயங்களோ கிடையாது. ஒரு பொருள் காட்சிதருவதற்கு அதாவது உருவத்தைக் காண்பிப்பதற்கு பல புறச்சாதனங்கள் அவசியமாகின்றன. இடம், காலம், ஒளி, பொருள், பார்வை, பார்ப்பவன் போன்ற பிற சாதனங்களின்றி எந்த உருவமும் அறிவில் அமையவே அமையாது. அதாவது, திரிபுடி உணர்வில்லாமல் எந்த உருவமும் மனதில் அமையாது. இது புறக்காட்சியானாலும், அகக்காட்சியானாலும் சரியே. இப்படி எவ்விதமான புறச்சாதனங்களும் இல்லாமல் இருந்த நிலைமைதான் 'அமா' என்பது. இந்த நிலைமையை உணர்ந்து கொள்ள ஆழ்ந்த உறக்கம் என்னும் சுளுத்தி நிலையை ஆராய்ந்தால் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் வுஜுூதாய் இருந்த ஒன்றுதானே பற்பலதாய் வெளியானது. ஆகவே, காட்சி அல்லது உருவத்துக்கு இரு பொருள் வேண்டியதில்லைதானே என்று கேட்கலாம். இதன் விபரத்தை விளக்க இந்த நூல் இடம் தராது. இதை முற்றாய் விளங்கியறிய விரும்பினால் எமது 'ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலின் முதலாம் பதிப்பில் 520ஆம் பக்கத்திலிருந்து வாசித்து விளங்கியறியுங்கள்.

இதன் சாரம் என்னவென்றால் உருவம் என்பதை நாம் ஒரே பொருளைக் கொண்டறிய முடியாது. உருவம் உண்டு என்று கூறுவதற்கு இரண்டு வஸ்த்து அவசியமில்லையென்பதும் ஒரே வஸ்த்துவைக்கொண்டே உருவம் உண்டு என்று கூற முடியும் என்பதும் விதண்டாவாதமாகும். இந்த ஹமவோஸ்த் நூலாசிரியர் தான் என்ன கூறுகிறோம் என்பது அவருக்கே புரியவில்லை.

இறைவன் வெளியான விஷயம் வேறு, உருவத்தைக் காண்பது, உருவம் உண்டு என்று கூறுவது வேறோர் விஷயம். இது சிருஷ்டியைப் பொறுத்த ஒரு விஷயம். அமா என்பது



நிலையாய் திரிபுடி உணர்வற்றிருக்கும் நிலையில் யார் யாரைப் பார்ப்பது? யார் யாருக்குக் காட்டுவது? யார் யாருடன் பேசுவது? இப்படிக் கூறுவது தௌஹீதின் சாரம் புரியாத மக்களின் கூற்று. ஒரே பொருள் உருவமற்றதாயும், உருவமுள்ளதாயும் இருக்க முடியும் என்றால் அதை ஏற்க முடியும். உருவம் உண்டு என்பததை நிரூபிக்க ஒரே பொருள் போதும் என்றால் எப்படி ஏற்பது? உருவம் உண்டு என்பதை அறிவதற்கும் உருவமில்லை என்பதை அறிவதற்கும் இன்னும் பிற சாதனங்களுடன் அறிபவனும் வேண்டும்.

3ஆவது கேள்வி
'ஹமவோஸ்த்' என்ற நூலின் 31ஆம் பக்கத்தில் 6:103 ஆயத்தைத் தந்து அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு என்பதை மறுப்பதற்கோ அவனைக் காண முடியாது என்பதற்கோ இந்த ஆயத்து ஆதாரமாகாது என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், காண்பது வேறு சூழ்தல் வேறு என்றும் கூறப்பட்டுள்ளது. 34ஆவது பக்கத்தில் ஆயிஷா (ஸித்தீக்கா) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸை ஸஹாபாக்களும், இமாம்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இது ஆயிஷா (ஸித்திக்கா) அவர்களின் ஆராய்வில் ஏற்பட்ட தவறு என்றும் கூறப்படுள்ளது. இதன் உண்மைதான் என்ன?

பதில்
அந்த நூலாசிரியருக்கு "அல்லாஹ்" என்ற நாமத்துக்கும் "றப்பு" என்ற நாமத்துக்குமுள்ள வேறுபாடு என்ன? என்பதே தெரியாது போல் தென்படுகிறது. இதை நாம் இறை உதவியால் விளக்குவோம். இதில் நூலாசிரியர் சொல்வதில் ஓர் உண்மை இருக்கிறது. அதாவது றப்பைக் காணமுடியாதென்பதற்கு இந்த ஆயத்து ஆதாரமாகாது என்பதே அந்த உண்மை. இதைப் போலவே 'அல்லாஹ்வை'ப் பார்க்கமுடியாதென்பதற்கும் லாஹிருடைய உலமாக்கள் கூறுவது போல இந்த ஆயத்தே ஆதாரமாயும் இருக்கிறது.

நான் இந்த ஆயத்தை மிக நீண்ட நாட்களுக்கு முன்பே ஆராய்ந்து ஓரளவு தெளிவு பெற்றிருக்கிறேன். அதன் விபரம் என்னவென்றால் இந்த ஆயத்தைச் சில மகான்கள் முஹ்கமுவைச் சேர்ந்ததென்றும், வேறு சில மகான்கள் 'முதஸாபிஹாத்' இனத்தைச் சேர்ந்தது என்றும் கூறியுள்ளார்கள். இவ்விரு விபரங்ளையும் ஒன்றுசேர்த்து நோக்கும்போது உண்மை என்ன? என்பது விளங்கிவிடும். முதலில் ஆயத்தைக் கூறுவோம்.

குர்ஆன் 6-103

*அவனைப் பார்வைகள் எட்டிகொள்ளாது. அவன் பார்வைகளை எட்டிக்கொள்வான். அவன் உட்கிருபை உள்ளவனும், யாவற்றையும் விளங்கி அறிபவனுமாவான்.*

இந்த ஆயத்து ஒருகுறிப்பிட்ட கூட்டத்தையோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தையோ நோக்கிக் கூறப்படாமல் எல்லா மக்களையும் எக்காலத்தையும் கருத்திற்கொண்டே கூறப்பட்ட மாற்றப்படாத ஓர் ஆயத்தாகும். இதை எல்லா உலமாக்களுமே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மனிதர்களில் அவாம்கள் என்ற மக்கள் வஹ்மு என்ற திரையிலும் "கவாஸு" என்ற மக்கள் நூலறிவு என்னும் திரையிலும் கட்டுண்டிருப்பதால்தான் இவ்விரு கூட்டத்தாருக்குமிடையில் விவாதம் ஏற்படுகிறது. அவாம்கள் இந்த ஆயத்தைக் கொண்டு அல்லாஹ்வைக் காண முடியாதென்கிறார்கள். கவாஸுகள் காணமுடியும் என்கிறார்கள். இவர்கள் இருசாராரும் காமில்களேயல்ல.

ஆனால் இவ்விருசாராருக்கும் அப்பாற்பட்ட காமில்கள் இவ்விருசாராரின் வாதங்களையும் ஏற்றுக்கொள்வதோடு வேறு வகையான அபிப்பிராயங்களும் கொள்கிறார்கள். அதாவது இந்த



ஆயத்தின் தாற்பரியமோ வேறாய் இருக்கிறதென்கிறார்கள். இதை இப்போது நோக்குங்கள்.

இந்த ஆயத்தில் "அல்லாஹ்" என்ற சொல் வெளிப்படையாகக் கூறப்படாமல் அவன் என்ற சயிக்கினையினால்தான் சுட்டிகாட்டப்பட்டிருக்கிறது. இந்த 'அல்லாஹ்' என்ற நாமம் தாத்து, சிபத்து, அஸ்மா முதலாம் சர்வத்தையும் ஒன்றாய் இணைத்துக் கொண்ட சொல்லாய் இருக்கிறது. இந்த அல்லாஹ் என்ற நாமத்தைத்தான் அவன் என்ற சொல்லால் சுட்டப்பட்டிருக்கிறதென்று கொண்டால் அல்லாஹ்வை (தாத்துல்முத்தலக்கை) எவ்வகையிலும் காணவே முடியாதென்பது நிச்சயமான உண்மையேயாகும். ஏனென்றால் தாத்தைக் காணலாம், அல்லாஹ்வைக் காணலாம் என்பதற்கு எவ்வித ஆதாரமுமே கிடையாது. காணலாம் என்று அவ்லியாக்கள் யாரும் கூறியதும் கிடையாது. இந்த அடிப்படையில்தான் அல்லாஹ்வைக் காண முடியாதென்பதற்கு இந்த ஆயத்து ஆதாரமாய் அமைகிறது.

பிறகு அவன் என்ற சொல்லைக்கொண்டு ஆயத்தில் சுட்டிக்காட்டப்பட்டது 'றப்பை' என்றெடுத்துக் கொண்டாலும் றப்பைக் காணமுடியாதென்பதற்கும் இந்த ஆயத்து ஆதாரமாய் அமைகிறது. ஏனென்றால் முற்றாய் றப்பைப் பார்க்க முடியாது என்பதற்கும் உறுதியான ஆயத்துக்களும் ஹதீஸ்களும் இஜ்மாஉவும் இருக்கின்றன. றப்பின் சிற்சில குறிப்பிட்ட தோற்றங்களைச் சிற்சில கட்டுப்பாடுகளுடன் பார்க்க முடியும் என்பதற்கு இந்த ஆயத்து ஆதாரமாகாது. இப்படிச் சில கட்டுப்பாடுகளுடன் பார்க்கலாம் என்பதற்கு ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

குர்ஆனோ முஹ்ஜிஸாத்தைச் சேர்ந்ததாய் இருப்பதால் அவரவருடைய அபிப்பிராயத்துக்குத் தகுந்த மாதிரியே பொருள் கொடுக்கிறது. ஆகவே முன்கூறிய இருசாராரின் கருத்துமே சரியானதென்று கொண்டால் ஆயிஷா (ஸித்தீக்கா) அவர்களினால்

கூறப்பட்ட ஹதீஸ்களை ஒதுக்கவேண்டியது மில்லை, விவாதிக்க வேண்டியதுமில்லை.

இங்கே நடந்த பிரச்சினை என்னவென்றால், அவன் என்ற சொல்லால் சுட்டப்பட்டது அல்லாஹ் என்பதைத்தான் என்றும், இல்லை, றப்பைத்தான் என்றும் எடுத்துக் கொண்டதனால் தான் வித்தியாசம் ஏற்பட்டது. அல்லாஹ் என்பது யார்? றப்பு என்பது யார்? என்றோர் கேள்வி பிறக்கலாம். இரண்டும் ஒரே மூலத்தின் இருபெயர்கள்தான். இதற்கு விரிவான விளக்கம் அவசியமாய் இருக்கிறது. இந்த விபரம் அடுத்த கேள்விக்குரிய விடையில் இடம்பெறுகிறது. றசூல் (ஸல்) அவர்கள் காலத்தில் அல்லாஹ், றப்பு, றஹ்மான் போன்ற சொற்களை றசூலுல்லாஹ் கூறியபோது அந்த முஷ்ரிக்கீன்கள் ஓ! முஹம்மதே நீர் கூறுகிற எல்லோரையுமே நாங்கள் வணங்கவேண்டுமா? சரணடைய வேண்டுமா? என்று கேட்டிருக்கிறார்கள். ஏனென்றால் இந்தச் சொற்களின் கருத்தாழங்களை அவர்கள் புரிந்து கொள்ளாமையினால்தான். இவ்விபரங்ளைக் குர்ஆன் ஹதீஸ்கள் மூலமும் நாம் அறியலாம்.

இப்போது அவனைக் காணமுடியாது என்பதற்கு "லாதறாஹுல் அப்ஸார்" என்று வந்திருக்க வேண்டும் என்றும் குர்ஆனில் அப்படி வரவில்லையென்றும் "இத்றாக" என்றே ஆயத்தில் வசனம் பாவிக்கப்பட்டிருப்பதாயும் 'இத்றாக்' என்பது எட்டிக்கொள்வதையும் "று.்.யத்" என்பது காண்பதையும் குறிக்கும் என்றும் நூலாசிரியர் கூறியுள்ளாரல்லவா? மேலும் "இத்றாக்" என்றால் 'இஹாதத்' சூழ்ந்து கொள்ளுதல் என்றும், இப்படித்தான் பல மேதைகள் தப்ஸீர்களில் எழுதியுள்ளார்கள் என்றும் கூறியுள்ளாரல்லவா?

இந்தச் சூழ்தலுக்கு நூலாசிரியர் திறப்பை உதாரணம் காட்டி ஒரேநேரத்தில் திறப்பின் எல்லாப்புறங்களையும் பார்க்க முடியாமலிருக்கும்போது, சூழமுடியாமலிருக்கும்போது இறைவனை நம்மால் எப்படிச் சூழமுடியும் என்றும் ஆயத்தில் தரப்பட்ட சொல்லின்படி சூழமுடியாதென்றே நாம் பொருள் கொள்ளவேண்டும் என்றும் கூறுகிறாரல்லவா? இதை நாம் விளங்கியறிவோம். சில தப்ஸீர்களில் அப்படிக் கூறப்பட்டுள்ளது என்பது எனக்கும் தெரியும். இந்த தப்ஸீர்களில் கூறப்பட்டிருப்ப தெல்லாம் வெளிப்பொருளை நோக்கித்தான்.



எந்த ஒரு பொருளை எடுத்துக்கொண்டாலும் அப்பொருளுக்கு மேல், கீழ், முன், பின், வலம், இடம் என்று ஆறு பக்கங்கள் இருக்கின்றன அல்லது ஆறு திசைகள் இருக்கின்றன. இந்த ஆறு திசைகளையும் ஒரே நேரத்தில் மனிதன் மட்டுமன்றி எந்த ஒரு ஜீவராசியாலும் பார்க்கமுடியாது என்பது உண்மைதான். நூலாசிரியர் கூறுவதைவிட விஞ்ஞான ரீதியாய் இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் ஒரு பொருளின், ஒரு திசையை நோக்கும் போதும் கூட ஓர் 'ஸ்பொட்டில்' குறிப்பிட்ட ஒரு புள்ளியில் மட்டும்தான் பார்வை விழும். மற்றும் அந்தப் புள்ளியில் சமீபமான பக்கங்களில் பார்வை சரியாக அமையாது. இது நிச்சயமான உண்மை.

ஆனால், நூலாசிரியர் சொல்லும் சூழ்தலை இப்போது நோக்குவோம். திறப்பின் ஆறு பக்கங்களையும் ஒரே நேரம் எம்மால் பார்க்க முடியாது என்பதுதானே! அதற்கு அவர் கூறும் காரணம் என்னவென்றால் நாம் சிருஷ்டியாய் இருக்கிறோம் என்பதுதான். அவருடைய வாதப்படி சிருஷ்டியாய் இருப்பதனால் பார்க்க முடியாதென்பது உண்மையானால், சிருஷ்டிக்கு எதிரிடையாயுள்ள இறைவனால் சிருஷ்டி கர்த்தாவினால் பார்க்கலாம். சூழலாம் என்பதுதானே!

அதாவது, பொருட்கள் எல்லாமே அணுக்களின் திரட்சிதான். ஆசிரியரின் வாதப்படி திறப்பின் வெளிக்கோலத்தை இறைவனின் பார்வை சூழ்ந்ததேயன்றித் திறப்பின் உட்படையை இறைவன் காணவில்லையென்றாகும். அந்தத் திறப்பை அணுவணுவாய்க் கொண்டாலும் ஆசிரியரின் வாதப்படி அவ்வணுக்களின்

வெளிக்கோலமான ஆறு திசைகளையும்தான் இறைவனால் சூழமுடியுமேயன்றி அணுக்களின் உட்புறத்தை விளங்கியறிந்து கொள்ள இறைவனால் முடியாதென்றாகும்.

இது விஞ்ஞான உலகம். ஓர் பொருளின் ஆறு திசைகளிலும் ஆறு கண்ணாடிகளைப் பொருத்தி அந்த ஆறு கண்ணாடிகளிலும் விழும் பிம்பங்களை வேறோர் கண்ணாடியில் ஒருமுகப்படுத்தும்போது அப்பொருள் ஆறுதிசைகளையும் ஒரே நேரத்தில் நம்மாலும் பார்க்கமுடியும். எப்படி இறைவன் சூழ்ந்து காண்கின்றான் என்று நூலாசிரியர் கூறினாரோ அதே சூழ்தலை மனிதனாகிய சிருஷ்டியாலும் செய்யமுடியும். அப்படியானால் இறைவனுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? 'ஹமவோஸ்த்' நூலாசிரியரின் தௌஹீது விளக்கமும் வஹ்தத்துல் வுஜூதுக்கொள்கையும் எத்திசையை நோக்கிச் செல்லுகின்றன என்பதை அவதானியுங்கள்.

இப்போது மேலேகாட்டிய 6:103ஆவது ஆயத்தின் பிற்பகுதியைப் படித்துப்பாருங்கள் '*யாவையும் உள்விளங்கி அறிபவனுமாவான்*' என்றுதான் கூறப்படுகிறது, இந்த உள்விளங்கியறிதல் என்பது திறப்பை அதன் வெளிப்பாகத்தைச் சூழ்ந்தறிதல் என்பது போன்ற சூழ்தலல்ல. நூலாசிரியர் குறிப்பிட்ட சூழ்தல் நீரைக் குடம் சூழ்தல் போலாகும். நீரிருந்த இடத்தில் குடமும், குடம் இருந்த இடத்தில் நீரும் இல்லாதது போலமுடியும். இதுதான் சரியென்றால் ஏழு வானங்களுக்குமேல் '*அர்ஷில்*' சிம்மாசனத்தில் அல்லாஹ் இருந்துகொண்டு அவனுடைய அறிவால் துன்யாவை அறிகிறான் என்றும் அவன் துன்யாவில் இல்லவேஇல்லையென்றும் ஒரு சாரார் கூறுவது சரியென்றாகும். இது முற்றிலும் தவறான விளக்கம்.

ஆனால், விஷயம் அப்படியல்ல. குர்ஆன் கூறுகிற சூழ்தல் எப்படியென்றால் மனிதனுக்குரிய பண்புகளில் பார்வை, கேள்வி, பேச்சு, மூச்சு, ஸ்பரிசம் போன்ற பண்புகள் மிக



முக்கியமானவையாகும். இந்த ஐந்து பண்புகளையும் மனிதன் முற்றாய்ச் சூழ்ந்தவனாய் இருக்கிறான். இந்தப் பண்புகள் அழிந்தாலும் மனிதன் இருக்கவே செய்வான். பண்புகள் அழிவதால் மனிதன் அழிவதே இல்லை. ஆகவே பண்புகளை மனிதன் சூழ்ந்திருக்கின்றான் என்று கூறுகிறோம். இன்ஸானுடைய பண்புகள்தான் பார்வை, கேள்வி, என்பது நமக்குத் தெரியும். ஆகவே, இன்ஸான் தன் பண்புகளை முற்றாய்ச் சூழ்ந்து உள்விளங்கியறிகிறான். இதுதான் உள்விளங்கியறிகிறான் என்பதன் கருத்து. இவ்விஷயத்தை. 'ஈமானின் உண்மையை நீ அறிவாயா?' என்ற நூலின் முதலாம் பதிப்பில் 375ஆவது பக்கத்தில் தெளிவாய் விளக்கியிருக்கின்றேன். மேலே கூறிய உதாரணத்தில் இன்ஸான், மனிதன் என்று நாம் கூறியது மனிதனுடைய ஆத்மாவைத்தான். உடலைக்கூட இந்த ஆத்மா சூழ்ந்திருக்கிறது. உடலும் நப்ஸும் அழிந்தாலும் கூட ஆத்மா அழிவடைவதே இல்லை.

இவ்விடத்திலும் ஓர் சந்தேகம் பிறக்கிறது. இப்படித்தான் இறைவன் சூழ்ந்திருக்கிறான் என்பது சரியானால் இப்போதும் இறைவனுக்கும் சிருஷ்டிக்கும் வேறுபாடு தென்படவில்லையே? என்பதுதான் சந்தேகம்.

ஆம், நாம் ஓரளவு விளங்கிக்கொள்வதற்காக இந்த உதாரணம் தரப்பட்டதேயன்றி இந்த உதாரணம்கூட இறைவன் விஷயத்தில 100 வீதமும் சரியாய் அமையமுடியாது. ஏனென்றால் மனிதனுடைய ஆத்மா என்பது "குன்" என்ற சொல்லினால் கட்டுண்ட ஒன்றாய் இருக்கிறது. இந்த ஆத்மா தன்னில் நிகழும் சிற்சில விஷயங்களை அறியாததாய் இருக்கிறது. மேலும் இந்த ஆத்மா வெளிப்புலன்கள், உட்புலன்களுக்கான சில ஊடகங்களைக் கொண்டேயல்லாமல் எதையும் அறியாது. ஆகவே, இறைவனுடைய பார்வையறிவுக்கும் மனிதனுடைய பார்வையறிவுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இந்த ஆத்மா தன் கட்டிலிருந்து நீங்கிவிட்டால் நாம் கூறிய உதாரணம் சரியாய் அமையும்.

இங்கே நாம் விளக்கிக்காட்டிய விஷயத்தில் வேறோர் விஷயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது நாம் கூறிய சூழ்தல்தான் "இத்றாக்" "இஹாதத்" என்ற சொற்களால் உணர்த்தப்படும் சூழ்தல் என்றும் கொள்ளமுடியாது. ஏனென்றால்

குர்ஆனின் 4:126 ஆயத்தில்
*"வகானல்லாஹு பிகுல்லிஸையின் முஹீத்" திடனாக அல்லாஹ் எல்லா வஸ்த்துக்களையும் சூழ்ந்தவனாய் இருக்கிறான்* என்று கூறப்படுகிறது.

இந்த ஆயத்தில் அல்லாஹ் என்ற நாமம் வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் கூறிய விளக்கம் இந்த ஆயத்துக்குத்தான் முற்றிலும் பொருத்தமானதாய் இருக்கிறது.

ஆகவே, ஹமவோஸ்த் நூலாசிரியர் "இத்றாக்" "இஹாதத்" என்ற சொற்களைக்கொண்டு 6:103ஆவது ஆயத்துக்கு பொருள் கூறியது அவருக்கே முற்றிலும் முரணாய் முடிகிறது. எந்த விஷயத்தை நிரூபிக்க அவர் எந்த ஆயத்தை ஆதாரமாகக் கொண்டாரோ அதே விஷயத்தை அது மறுப்பதாய் இருக்கிறது.

எப்படியென்றால் அப்பாஸ் (றலி) அவர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட "இப்னு அப்பாஸ்" என்ற தப்ஸீரில் 6:103ஆவது ஆயத்துக்குப் பொருள் கூறும்போது மனிதன் துன்யாவில் முகக்கண்ணைக் கொண்டு அல்லாஹ்வைக் காண முடியாதென்றும் மஹ்ஸரில் மூமீன்கள் றப்பை ஒரு தடவையும் ஜன்னத்தில் பல தடைவைகளும் லிகாவில் அல்லாஹ்வின் பூரணத்தன்மையையும் காண்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள். இவர்களுடைய கூற்றை லாஹிறுடைய பாத்தினுடைய உலமாக்களும் ஆரிபீன்களும் முழுமனதோடு ஏற்றிருக்கிறார்கள். இவர்கள் காட்டும் ஆதாரங்களைக் கவனத்துக்கெடுத்தால், *விழிப்பில் முகக்கண்ணைக் கொண்டு அல்லாஹ்வைப்*



*பார்த்தேன் என்று கூறியவன் பொய்யனாயும் பன்றியாயும் இருக்கிறான்* என்ற ஹதீஸையோ ஆயிஷா (ஸித்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்களையோ ஒதுக்கித்தள்ளவேண்டிய அவசியமே இல்லை. வஹ்தத்துல் வுஜுதுக் கொள்கையின் சரியான விபரமும் தென்படும். ஏனென்றால் றசூல் (ஸல்) அவர்கள் கூடத் துன்யாவில் "றப்பின்" கட்டுப்பாடான சில ஸுறத் அல்லது தோற்றங்களையும் அர்ஷில்தான் றப்பின் பூரண தோற்றத்தையும் கண்டிருக்கிறார்கள்.

தப்ஸீர்களில் முதலில் வெளியானது "இப்னு அப்பாஸ்" தான் என்று கூறப்படுகிறது. இந்த "தப்ஸீரை"க் கொண்டுதான் "பைளாவி" "இப்னுகதீர்" "ஜமல்" "ஜலாலைன்" போன்ற தப்ஸீர்களில் விரிவுரைகளை எழுதியுள்ளார்கள். இந்த தப்ஸீர்களின் விளக்கவுரை என்னவென்றால்,

"லாதுத்ரிக்குஹு" அதாவது அவனை எத்திக்கொள்ளாது. என்றவாக்கியத்திலுள்ள "துத்ரிக்" என்றபதம் "இத்றாக்" என்ற பதத்திலிருந்து பிறந்தது. இத்றாக் என்பதற்கு ஒருபொருளின் அந்தரங்கநுட்பத்தை உணர்ந்துகொள்ளல் என்பது பொருள். ஆகவே "இத்றாக் என்பதும் "று:.யத்" அதாவது பார்த்தல் என்பதும் ஒன்றல்ல. ஒருமனிதன் ஒன்றையும் உணராமலும் கிரகிக்காமலும் ஒரு வஸ்துவைப் புறக்கண்ணால் பார்க்கமுடியும். ஆகவே, அல்லாஹுத்தஆலாவின் "குன்ஹுதாத்தை" எவரும் பார்த்து உணர்ந்து கொள்ளமுடியாது. ஆனால் அவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வான் அவைகளின் அகமியங்க ளையும் தெரிந்துகொள்வான்.

நிற்க, மனிதர்கள் அவர்களின் புறக்கண்ணால் சடப்பொருள்களின் புற உருவங்களைப்பார்க்க முடியும். முகக் கண்ணாடியின் மூலமாகத் தங்கள் கண்களைக்கூடப் பார்க்கமுடியும். ஆனால் தங்களது "பஸர்"களை அதாவது பார்வைகளைப் பார்க்கமுடியாது. ஆகவே இந்த ஆயத்தில் "அப்ஸார்" என்ற பதத்திற்குப் புறக்கண்கள் என்று அர்த்தம் செய்வதைப் பார்க்கினும் பார்வை என்று அர்த்தம் செய்வதுதான் சிலாக்கியமானது.

கியாமத் நாளில் றப்பை பார்க்கமுடியும் என்ற விபரம் குர்ஆன் ஹதீஸ்கள் மூலம் தெரியவருகிறது. நபிகள்(ஸல்) அவர்கள் “மிஹ்றாஜ்” உடைய இரவில் அவனை(நாயனை)த் தங்கள் புறக்கண்ணால் பார்த்ததாக ஹதீஸுகளில் கூறப்பட்டி ருக்கிறது. அவனை “இத்றாக்” செய்ததாக வரவில்லை. ஆகவே அல்லாஹுவை, அவனுடைய குன்ஹு என்னும் சுயதாத்தை நேத்திரக்கண்கள் மூலமாக உணர்ந்துகொள்ள முடியாதென்பது பிரத்தியட்சமான உண்மை. இந்த விபரந்தான் “றூஹுல்பயான்” “இப்னுகதீர்” “ஜாலாலைன்” “தந்தாவி” “பைளாவி” “ஜமல்” “மஜீத்”போன்ற தப்ஸீர்களின் வியாக்கியானங்கள். இந்த விபரத்தை “ஜமல்” என்ற தப்ஸீரில் இரண்டாம் பாகம் 75வது பக்கத்தில் விரிவாகக் காணலாம்.

அப்பாஸ்(றலி) அவர்களின் தீர்ப்பு என்னவென்றால் துன்யாவில் எவ்வகையிலும் முகக்கண்ணைக்கொண்டு காணமுடியாதென்பதும் அகக்கண்ணைக் கொண்டு சிற்சில கட்டுப்பாடுகளுள் அமைந்த றப்பின் தோற்றங்களை அறியலாம் என்பதுவுமே. இப்போது குர்ஆனின் 41:54 ஆவது ஆயத்தை நோக்கிப் பாருங்கள். ***“நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனை(றப்பை)ச் சந்திப்பதைப் பற்றியும் சந்தேகத்தி லிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும். நிச்சயமாக அவன் சகலவற்றையும் சூழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்துகொள்ளும்”***.

இவ்வாயத்தில் அல்லாஹ்வை என்று கூறாமல் றப்பைப் பார்ப்பதையும் என்றே கூறப்பட்டுள்ளது. இதிலுள்ள உண்மையை அறியும்வரையிலும் றப்பு என்பதை அல்லாஹ் என்று மாற்றிக்கொள்ளாமல் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். இல்லையானால் நான் தரப்போகிற விபரத்தை உங்களால் புரிந்துகொள்ளமுடியாது.



***“நிச்சயமாக அவன் சகலதையும்” சூழ்ந்து கொண்டிருக்கிறான்*** - என்பதில் அவன் என்றுதான் கூறப்பட்டுள்ளதேயன்றி றப்பு என்றோ அல்லாஹ் என்றோ வெளிப்படையாய்த் தரப்படவில்லை.

“சந்திப்பதை” என்ற இடத்தில் “லிகா” என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது. “சூழ்தல்” என்பதற்கு இவ்வாயத்தில் “முஹீத்” என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது விஷயத்துக்கு வருவோம். றப்பைச் சந்திப்பதில் ஆயத்தின்படி எவரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. இப்போது கீழே தரப்படுகிற ஆயத்தை நோக்குங்கள்.

குர்ஆன் 83:15
***“நிச்சயமாக காபிர்கள் மறுமையில் இறைவனைக் காண முடியாமல் திரையிடப்படுவார்கள்”***

இந்த ஆயத்தின்படி றப்பை மறுமையில் காண்பவர்கள் மூமீன்கள்தான் என்பது நிரூபணமாகிறது. ஆனால் இந்த ஆயத்தில் சுட்டியபடி மறுமையில் காண்பதற்கும் இறைவனுக்கு (றப்புக்கு) உருவம் அல்லது தோற்றம் அல்லது சூறத் இருந்துதான் ஆகவேண்டும். இல்லையானால் சிருஷ்டியின் அகப்பார்வையிலும் அமையாது; புறப்பார்வையிலும் அமையாது. இந்த சூறத் அல்லது உருவம் சிருஷ்டியின் அகப்புறப்பார்வைகளில் கட்டுண்ணக்கூடிய, மட்டுப்படுத்தப் பட்டதாகத்தான் இருக்கும்.

இப்போது இம்மை, மறுமை என்பது என்ன? என்று பார்போம். இம்மை என்னும் வெளிப்பாட்டில் மறைந்துள்ள உட்பாடுதான் மறுமை என்பது. அதாவது “லாஹிர்” துன்யாவாகவும், “பாதின்” ஆகிறாவாகவும் இருக்கிறது. விபரித்தால் பெருகும். இதை ***“இதிலேயே நீங்கள் எழுப்பப்படுவீர்கள்”*** என்ற வாக்கியத்திலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். 20:55ஆம் ஆயத்தை

நோட்டமிடவும். அதாவது இம்மையைவிட்டு மறுமையும் மறுமையைவிட்டு இம்மையும் வேறானதல்ல. இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால் புறக்கண்ணைக் கொண்டு ஏதோ ஒரு கட்டுப்பாடான தோற்றத்தில் மூமின்கள் இம்மையிலும் றப்பைக் காணலாம் என்பதே.

இப்போது சூழ்தலை நோக்குவோம். இதில் அவன் என்று கூறப்பட்டிருக்கிறதேயன்றி அல்லாஹ் என்று கூறப்படவில்லை. ஆகவே, இந்தச் சூழ்தல் றப்புடையது என்றாலும் அல்லாஹ்வுடையது என்றாலும் இரண்டும் ஒன்றாகவே அமையும். ஆகவே, சர்வ ஆலங்களையும் றப்பே சூழ்ந்திருக்கின்றான் என்றாலும் அல்லாஹ்வே சூழ்ந்துள்ளான் என்றாலும் பிழையாகாது. ஏனென்றால் குர்ஆனுடைய "வகானல்லாஹுபிகுல்லிஸையின் முஹீத்'' என்ற 4:126 வசனம் இதை நமக்கு உணர்த்துகிறது.

இப்போது "லிகா'' என்றால் என்ன என்பதை நோக்குவோம். லிகா என்றால் தரிசித்தல், காணுதல் என்பதே அதன் வெளிப்பொருள். ஆனால் ஆரிபீன்களிடத்தில், அவன் அவனாகவே இருக்கிற அவனுடைய சொந்த அனுபவம் என்பதேயாகும்.

இப்போது றசூல் (ஸல்) அவர்களுடைய அதாவது ஆயிஷா (ஸித்தீக்கா) அவர்களாலும், அபூசர் (றலி) அவர்களாலும் அப்பாஸ் (றலி) அவர்களாலும் மற்றும் ஸஹாபாக்காளாலும் கூறப்பட்ட ஹதீஸ்களையும் இது சம்பந்தமான ஆயத்துக்களையும் ஒன்றுதிரட்டி நோக்குங்கள். (அநேக ஹதீஸ்களை இங்கே எழுதமுடியும். ஆனால் இந்தநூல் இடந்தராது.)

இதிலிருந்து இரண்டு விதமான உண்மைகளை நாம் அறியலாம்.

1. இறைவனை நல்லடியார்கள் மறுமையில் மட்டுமன்றி இம்மையிலும் ஏதோ குறிப்பிட்ட தோற்றங்களில் பார்க்கலாம் என்பது.



2. துன்யாவிலும் றப்பைக் காணலாமேயன்றி அல்லாஹ்வை எவராலும் எப்போதும் பார்க்கமுடியாது என்பது. இதன்படி ஹமவோஸ்த் நூலாசிரியரின் கூற்று உண்மைக்கு முற்றிலும் முரணானது என்பது தெளிவாகிறது.

இப்போது றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்டுள்ள ஹதீஸை நோக்குங்கள். "*என் இறைவனை(றப்பை) நான் தங்கப் பாதரட்சைகளைக் காலில் அணிந்தும் தலையில் கிரீடம் அணிந்தும் இருந்த அடர்ந்த முடியுள்ள முகவரை கீறாத முறுக்கேறிய அழகிய வாலிபனுடைய தோற்றத்தில் கண்டேன்*". என்றுதான் கூறினார்களே ஒழிய துன்யாவில் நான் அல்லாஹ்வைக் கண்டேன் என்று கூறவில்லை. இந்த அடிப்படையில்தான் ஆயிஷா (ஸித்) அவர்களின் ஹதீஸ் கூறப்பட்டது.

"நபி (ஸல்) அவர்கள் இறைவனை (றப்பை) இருமுறை பார்த்தார்கள்'' என்று நான் கூறினேன், அதற்கு இக்ரிமா(றலி) அவர்கள் எவர்களுடைய பார்வையும் அவனை அடையாது என்று 6:103ஆம் ஆயத்தில் இறைவன் கூறுகிறானே? என்று கேட்டார்கள், அதற்கு நான் உம்முடைய கைசேதமே! இது இறைவன் தன்னுடைய பேரொளியில் (சுயதாத்தில்) தோன்றும் போதுதான், நிச்சயமாக றசூல் (ஸல்) இறைவனை (றப்பை) இருமுறை பார்த்திருக்கிறார்கள் என்று நான் கூறினேன் என்று அப்பாஸ் (றலி) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸ் கூறுகிறது.

தாங்கள் இறைவனைப் பார்த்ததுண்டா என்று நான் றசூல் (ஸல்) அவர்களைக் கேட்டேன். அவன் ஒளிமயமான வனாயிற்றே அவனை நான் எப்படிப் பார்க்கமுடியும் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூசர் (றலி) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸ் கூறுகிறது.

இந்த ஹதீஸ்களின் மூலம் இன்னும் ஒரு நுட்பம் தென்படுகிறது. அதாவது இறைவனுடைய உஜுூது (காபிலியத் அற்றது) எதையும் ஏற்கும் தன்மை இல்லாதது. அப்படியிருந்தும் தான் றசூல் (ஸல்) அவர்கள் ஒளிமயமானவன் என்று நூரில் கட்டுப்படுத்தியே கூறியிருக்கிறார்கள். இதுதான் றப்பு என்ற நாமத்தின் பூரண தஜல்லி. இதைக்கூட மனிதனால் பார்க்க முடியாது என்பது ஹதீஸினால் அறிவிக்கப்படுகிறது. ஒளி என்பது அறிவைக் குறிப்பிடும். பார்க்கமுடியாது என்பது கண்ணினால் காணமுடியாது என்பதைக் குறிப்பிடும். ஆகவே அறிவை அறிவினால் அறியமுடியும். என்றாலும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அமைந்த தோற்றத்தை மட்டும்தான் அறியமுடியுமேயன்றி முற்றாய் அறியமுடியாதென்பதை நாம் அறிந்து கொண்டோம்.

இப்போது முஹ்யித்தீன் இப்னு அறபி (றலி) அவர்களும் மற்றும் அவர்களைப் போன்ற காமில்களும் என்ன கூறினார்கள் என்பதை நோக்குவோம்.

“பிரபஞ்சங்கள் யாவும் அவன்தானே அவையாய் இருக்க அவற்றைச் சிருஷ்டித்த நாயன் (றப்பு) தூயவன்'' இந்த வசனத்தில் சிருஷ்டி என்ற வெளிப்பாடு (அல்லது சிருஷ்டித் தொழில்) றப்புக்கு (இறைவனுக்கு) உரியதென்றும் தூயவன் என்பது காபிலியத்தற்ற (எதையும் ஏற்கும் தன்மை இல்லாத) தாத்தையே சுட்டுகிறதென்பதும் தெளிவாகிறது.

மேலும், ஏகத்துவத்திற்கு இரு தன்மைகள் உண்டு. ஒன்று ‘தன்ஸீஹ்'' என்னும் அரூபநிலை, மற்றொன்று “தஸ்பீஹ்'' என்னும் உருவநிலை. அரூபநிலையில் இறைவனை (றப்பை)க் கண்ணால் பார்க்க முடியாது. ஆயினும் அறிவினால் அறியப்படுகிறவனாய் இருப்பான். உருவநிலையில் கண்ணால் பார்க்கக் கூடியவனாய் இருப்பான். இதுதான் அறபி (றலி) அவர்களின் சொல். இதைத்தான் நாமும் ஒப்புக்கொள்கிறோம். இந்தச் சொல்லில், (றப்பு) இறைவன் அரூபநிலையில் கண்பார்வையால் பார்க்கப்படமாட்டான் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டது றசூல் (ஸல்) அவர்களால் ஒளிமயமானவனாயிற்றே! என்ற கூற்றையே ஒத்திருக்கிறது. றப்பென்ற அஸ்மாவின் பூரண தஜல்லியைத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைக் கண்பார்வை எத்தாது. இந்த றப்பின் பூரண தஜல்லியை மனக்கண்ணால்தான் காணமுடியும். தன்ஸீஹ் என்ற அறபு வார்த்தைக்குத் தூய்மைப்படுத்துவது என்பது பொருள். எவ்விதமான கட்டுப்பட்டுக்கும் அப்பாற்பட்ட அல்லாஹ் உருவம், தோற்றம், சடம் முதலாம் எல்லைகளுக்கு அப்பால் உயர்ந்த தூயவன்.



தஸ்பீஹ் என்றால் ஒரு பொருளை இன்னொரு பொருளோடு ஒப்பிடுவது என்பது பொருள். தன்ஸீஹ் என்னும் கொள்கைக்கு இது நேர்எதிரானது மட்டுமல்லாமல் றசூல் (ஸல்) அவர்களால் நமக்கு எடுத்துக் கூறிய கொள்கைக்கு முற்றிலும் முரணானதுமாகும்.

ஆகவே, ஹமவோஸ்த் நூலில் 35ஆவது பக்கத்தில் “இறைவனை (றப்பை) விழிப்பில் காணலாம்” என்று தலையங்கத்தை எழுதிவிட்டு அல்லாஹ்வைக் கனவில் காணலாம் என்பதுபோல அவனை விழிப்பிலும் காணலாம் என்று நூலாசிரியர் கூறுகிறார். இது என்ன மருட்சி. அல்லாஹ் என்ற சொல்லுக்கும் றப்பு என்ற சொல்லுக்கும் இவ்வாசிரியருக்கு வேறுபாடு தெரியாதுபோல் இருக்கிறது.

*அல்லாஹ்வை விழிப்பில் கண்டேன் என்று கூறுபவன் பன்றியாயும், பொய்யனாயும் இருக்கிறான்* என்ற ஹதீஸை இந்த ஆசிரியர் இன்னும் காணவில்லை போலும்.

மக்களே!

இறைவனைக் காணும் விஷயத்தில் மகான்கள் இருவகைப்படுகிறார்கள். இதை "ஜம்உ" உடைய பார்வை என்றும் "பர்க்கு" உடைய பார்வை என்றும் கூறப்படும். அதாவது ஆரிபுகளில்,

1ஆவது வகுப்பார்:
முக்காலங்களிலும் சிருஷ்டி இல்லாதது என்பது இவர்கள் கொள்கை. இவர்களிடத்தில் ஷரீயத் அழிந்து விட்டது. இது ஒரு ஹால் (நிலைமை). இவர்கள் திரையிடப்பட்டவர்கள்.

2ஆவது வகுப்பார்:
சிருஷ்டி முக்காலங்களிலும் இல்லாதது என்பது உண்மையே யானாலும் இறைவனிடத்தில் (றப்பிடத்தில்) என்றும் உள்ளதே என்பது இவர்கள் கொள்கை. இவர்களிடத்தில் ஷரீஅத் அழிய வில்லை. ஆயினும் இவர்களும் திரையிடப்பட்டவர்கள்தான். இது ஒரு ஹால் (நிலைமை).

3ஆவது வகுப்பார்:
சிருஷ்டி இல்லாததுதான். இருப்பதும்தான். இருந்து, வந்து, தோன்றி, அழிந்தது என்பதை நோக்கினால், சர்வபிரபஞ்சங் களுமாய் இருந்தது அனாதிதான். வந்தது நுட்பம் அல்லது புதியதுதான். தோன்றியது உள்ளதுதான். அழிந்தது இல்லாததுதான். ஆகவே சர்வ பிரபஞ்சங்களும் ஆதியாயும் ஆதியென்ற சொல்லில் கட்டுண்ணாத பூர்வீகமானதாயும் அந்தமாயும் அந்தமற்றதாயும் வெளிப்பட்டதாயும் வெளிப்படாததாயும் மறைந்ததாயும் மறையாததாயும் இருப்பதை அறிகிறார்கள். இவர்கள்தான் கமாலையுடைய முஹக்கிக்கூன்களான ஆரிபுகள். அல்லாஹ்வுடைய விஷயத்தில் வழிகாட்டக்கூடிய அவ்லியாக்கள் இவர்கள்தான். ஷரீயத், தரீக்கத், ஹகீகத், மஹ்ரிபத் என்ற நான்கு படித்தரங்களையும் ஒன்றாக்கிக் கொண்டவர்கள். மக்களின் அறிவுக்கேற்றபடி விளக்கமளித்து நேர்வழி காட்டக்கூடியவர்கள்.



ஆகவே, நாம் ஒரு கிதாபை அல்லது ஒரு நூலை வாசிக்கும் போது அல்லது பேச்சைக் கேட்கும்போது அவர்கள் எந்த ஹாலில் (நிலைமையில்) இருந்து எழுதினார்கள் என்பதையும் நாம் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதையும் புரிந்து கொள்ளாமல் ஒரு முடிவுக்கு வரவே கூடாது.

இதன் சாராம்சம் என்னவென்றால், அல்லாஹ்வை அல்லது றப்பின் பூரண 'தஜல்லியை' வெளிப்பார்வையைக் கொண்டோ, அறிவைக் கொண்டோ, பூரணமாய்ச் சூழ்ந்துகாண அறிய முடியாதென்பதற்கு இந்த 6:103ஆவது ஆயத்து உறுதியான ஆதாரமாய் இருப்பதுபோல, இறைவனின் (றப்பின்) சிற்சில கட்டுப்பாடுகளுக்கமைவான சிற்சில காட்சிகளை விழிப்பிலோ உறக்கத்திலோ காண முடியாததென்பதற்கு இந்த ஆயத்து ஆதாரமாகாமலும் இருக்கிறது.

இப்போது றப்பு யார்? அல்லாஹ் யார்? என்பதைக் கீழே தருகிற 4ஆவது கேள்வியின் பதிலில் விளக்குவோம்.

## 4ஆவது கேள்வி

மேற்படி ஹமவோஸ்த் என்ற நூலில் 36ஆவது பக்கத்தில் அல்லாஹ்வை விழிப்பில் பார்ப்பது அசாத்தியம் என்றிருந்தால் அவனைக் காட்டுமாறு மூஸா (அலை) அவர்கள் கேட்டிருக்க மாட்டார்களென்றும், அசாத்தியமான ஒன்றை ஒரு நபியும் கேட்க முடியாதென்றும், நபிமாருக்கு மடமை என்னும் பண்பு இல்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. மேலும் அல்லாஹ்வை விழிப்பில் பார்க்க முடியுமா? முடியாதா? என்பதில் கருத்து வேறுபாடு இருப்பினும் நபிமார்களுக்கு இக்கேள்விக்கு விடை தெரிந்தே இருக்கும். அதனால்தான் நபி மூஸா (அலை) அவர்கள் அவனை விழிப்பில் பார்க்கக் கேட்டார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதன் உண்மை என்ன? என்பதுதானே கேள்வி.

பதில்
நூலாசிரியரால் தரப்பட்ட ஆயத்தை முதலில் கவனிப் போம். *7:143 நாம் (குறிப்பிட்ட இடத்துக்கு) குறிப்பிட்ட நேரத்தில் மூஸா (அலை) வந்தபொழுது அவருடைய இறைவன் (றப்பு) அவருடன் பேசினான். மூஸா(அலை) இறைவனை நோக்கி என் இறைவனே!(றப்பே) நான் உன்னை(என் கண்ணால்) பார்க்க நீ உன்னை எனக்குக் காண்பி என்று கூறினார். என்னைக் காண ஒருக்காலும் முடியாது. எனினும் இம்மலையைப் பாரும். அது தன்னுடைய இடத்தில் நிலைத்திருந்தால் பின்னர் நீர் என்னைக் காண்பீர் என்று கூறினான். அவருடைய இறைவன் (றப்பு) அம்மலைமீது தோற்றமளிக்கவே (தஜல்லியாகவே) அது தவிடு பொடியாயிற்று. மூஸா (அலை) திடுக்கிட்டு (மூர்ச்சையாகி) வீழ்ந்தார். அவர் தெளிவு பெறவே, நீ மிகப் பரிசுத்த மானவன். (உன்னைப் பார்க்கக் கோரிய குற்றத்திற்காக) நான் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். அன்றி விசுவாசிப்போரில் நான் முதன்மையானவன் என்று கூறினார்.* இதுதான் ஆயத்து. இந்த ஆயத்து பார்க்க முடியாது என்பதற்கோ, ஒருபோதும் பார்க்க முடியாது என்பதற்கோ ஆதாரமாகாது என்பதும், எப்போதாவது பார்க்கலாம் என்பதும் முற்றிலும் உண்மைதான். ஆனால் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் காலத்துக்கும் தொடர்பேயில்லை. எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் அல்லாஹ்வுடைய "தாத்து", ஸிபாத்து, அஸ்மா முதலியவற்றிற்கும்தான் தொடர்புண்டு. அதாவது காணமாட்டாய் என்பதும் பின் காண்பாய் என்பதும் "வுஜூது" என்னும் "தாத்தை"யா? அல்லது வெளிப்பாடு என்னும் "றப்பையா?" என்பதுதான் இங்கே எடுத்துக் கொள்ளவேண்டிய விஷயம். இந்த ஆயத்தில் ஒருபோதும் பார்க்கமுடியாது என்று வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது. மேலும் மலை அதனிடத்தில் இருந்தால் பார்க்கமுடியும் என்பதும் மிகமிகத் தெளிவாய் வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது.



இவ்விஷயத்தில் ஒருபோதும் காணமுடியாது என்ற பதிலில் இருந்து ஒருபோதும் காணமுடியாதென்ற முடிவுக்கு நாம் வரக்கூடாதென்றும் அதற்கு ஆதாரமாய்க் காதலன் காதலி விளையாட்டையும் ஹமவோஸ்த் நூலாசிரியர் கூறுகிறார். இவருடைய மயக்க அறிவையும் குழப்ப வார்த்தையையும் நாம் எப்படி வர்ணிப்பது!

காதலன் காதலி விஷயம் மஜ்தூபுக்களான ஆஸிக்கீன்களின் விஷயம். மூஸா (அலை) ஒரு வேதம் கொடுக்கப்பட்ட றசூல். உலுல் அஸ்மிகளில் ஒருவர். அவர்கள் மஜ்தூபுமல்ல மஜ்னூனுமல்ல. தெளிவான நல்லறிவுடைய மனிதர்.

மேற்கூறிய ஆயத்து காணமுடியாது என்பதை எடுத்துக்காட்டுகிறதேயன்றி இனிமேல் காண்பாய் என்று காலவரையறையைக் குறிப்பிடுவதேயல்ல. "லன்தறானி" என்பதிலுள்ள "லன்" என்ற சொல்லைக் கொண்டு இப்போது காணமாட்டாய் என்பது உண்மை. ஆனால் இப்போது எதைக் காணமாட்டாய் என்பதுதான் ஆராயவேண்டிய விஷயம். ஆகவே காலத்தைக் குறிப்பிட்டு ஆயத்துக்குப் பொருள் கூறுவது வலிந்துரையாகும். ஏனென்றால் அல்லாஹ்வின் லாஹிறான றப்பின் தஜல்லியைப் பக்குவமுடையவர்கள் எப்போதும் அறிவுக்கண்ணால் பார்க்கலாம். வெளிக்கண்ணாலும் சில கட்டுப்பாடுகளின் கீழ் காணலாம் என்பதற்கு மிக உறுதியான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

ஆகவே, காணமுடியாது என்பது தாத்து என்னும் வுஜூதை நோக்கியதாய் இருக்கிறது என்பதும் மலையில் தஜல்லியானான் என்பது "றப்பின்" தஜல்லியே என்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. ஏனென்றால் முடியாது என்று கூறியவன் பிறகு வெளியானான் என்றால் றப்புப் பொய்கூறினான் என்றும் அவன் வீண் விளையாட்டுக்காரன் என்றும் ஆகும். இந்தளவு விபரம் சாதாரண மக்களுக்கே விளங்கும் போது ஒரு நூலாசிரியரான

கிழக்கிலுதித்த ஸம்ஸுல் உலமா (உலமாக்களின் சூரியன்) அறியாதவராய் இருக்கிறார் என்றால் அவரை நாம் அமாவாசை உலமா என்றுதானே கூறவேண்டும்.

இப்போது விஷயத்திற்கு வருவோம். சர்வ ஆலங்களும் அல்லாஹ்வின் "றப்பு" "லாஹிர்" என்னும் திருநாமங்களின் வெளிப்பாடே என்பது நிச்சயமாக மூஸா (அலை) அவர்களுக்குத் தெரியும். ஏனென்றால் அவர்கள் கலிமாவை உணர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்தக் கலிமாவைக் கொண்டே மக்களுக்கு உபதேசம் செய்த ஒரு றசூலும் கூட. அவர்கள் லாஹிறையும் பாதினையும் விளங்கித் தெளிவு பெற்றவர்களாய் இருந்து கொண்டுதான் நான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுடைய விருப்பம் வுஜுதை தலைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்பதுதான். ஆகையால்தான் இறைவன் ஒருபோதும் காணமாட்டாய் என்று கூறினான். இதில் ஒன்றும் குழப்பம் செய்யவேண்டியதே இல்லை.

அப்படியானால் "சுயதாத்தை" "வுஜுதைப்" பார்க்க முடியாது என்பதை மூஸா (அலை) அறியாமல் இருந்தார்களா? இல்லை. நிச்சயமாக அறிந்தே இருந்தார்கள். அறிந்திருந்தும்தான் கேட்டார்கள். இது மடமைதான். நபிமார்களுக்கு இந்த மடமை என்னும் பண்பு இல்லையே என்று நம்பிக்கொண்டிருப்பதால்தான் இவ்விடத்தில் நமக்குக் குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே இதை முதலில் தெரிந்து கொள்ளுவோம். மடமை என்பது மூன்று வகையானது.

1ஆவது: அவாம்களான பாமரமக்களுக்கேற்படும் மடமை. இந்த மடமை துன்யாவிலும் ஆகிறாவிலும் துன்பத்தையே தரும். இறைவனின் சன்னிதானத்தைத் தூரப்படுத்தும். நரகிற்கே அழைத்துச் செல்லும்.

2ஆவது: கவாஸுகளான அறிஞர்களுக்கேற்படும் மடமை. இது சிலசமயங்களில் அறிவை அதிகப்படுத்தும். சில வேளை அதற்குமாறாக அறிவை மழுங்கவும் செய்யும். சிலசமயம் இறைவனைச் சமீபிக்கச் செய்யும். சிலவேளை இறைவனைத் தூரப்படுத்தும். இந்த மடமை நரகத்துக்கும் வழிகாட்டலாம் ஜன்னத்துக்கும் வழிகாட்டலாம்.



3ஆவது: நபிமார்கள் ஒலிமார்களுக்கேற்படும் மடமை. இது நிச்சயமாக ஈமானை உறுதிப்படுத்தும். இந்த மடமையினால் உலக மக்களுக்கு வேண்டிய இறைவனுடைய சிற்சில விஷயங்கள் வெளியாகும். இந்த மடமை எவ்வளவு வலுப்பெறுகிறதோ அதே அளவு அல்லாஹ்வின் சன்னிதானத்துக்கு அழைத்துச் செல்லும். அதே அளவு ஈமானை உறுதிப்படுத்தும்.

இந்த இனத்தைச் சேர்ந்ததுதான் மூஸா (அலை) அவர்களுடையதும் மற்றும் நபிமார்களுடையவும் மடமையாகும். இது பிழையான மடமையேயல்ல. இந்த மடமையினால் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டுதான் மூஸா (அலை) அவர்கள் உன்னை விசுவாசிப்பவர்களில் நான் முதன்மையானவன் என்று கூறினார்கள். இந்த மடமையினால்தான் வுஜுதுவை எவராலும் எப்போதும் பார்க்கமுடியாதென்ற உண்மை நமக்குத் தெரியவந்தது. இந்த மடமையினால்தான் றப்பின் வெளிப்பாடுகளில் தகுதியுள்ள சிலர் சிற்சில விஷயங்களைக் காணலாம் என்பதை அறிந்தோம்.

இப்போது நமது றசூல்(ஸல்) அவர்களை நோக்குவோம். வில்லின் இரு முனைகள் நெருங்குவதைப்போல் அல்லது அதிலும் சமீபமாக அல்லாஹ்வை நெருங்கி இறைவனுடைய ஸலாத்துக்குப் பதில் கூறியபிறகு நான் உன்னைப் பார்க்க விரும்புகிறேன் என்றார்கள். ஏன் கூறினார்கள். ஆசை என்ற மடமையினால்தான். திரை நீக்கப்பட்டபின் நேரே முகக்கண்ணாலேயே கண்டார்கள். இந்த மடமை றசூல் (ஸல்) அவர்களுக்கேற்படாதிருந்தால் வலிமார்கள் அகமிய அறிவுகளைப் பெறமுடியாமலேயே போய்இருக்கும். இவ்விடத்தில் மிகமிக நுட்பமான, பாமரமக்களால் விளங்கிக்கொள்ள முடியாத பல இரகசியங்கள் இருப்பதால் இதை

நாம் விபரிப்பது முறையாகாது. ஆயினும் இதன் இறுதியில் ஓரளவு விளக்கம் தருகிறேன். பொறுமை அடையுங்கள்.

இதுபோல உலகிலும் றசூல் (ஸல்) அவர்களுக்குச் சிற்சில மடமைகள் இருந்தது உண்மை. இதை இறைவன் அவர்கள் விஷயத்தில் தவறென்றே குறிப்பிடுகிறான். ஏனென்றால் மற்ற நபிமாருக்கும் றசூல் (ஸல்) அவர்களுக்குமிடையில் மிகமிக வேறுபாடு இருந்ததை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான். இந்த விபரத்தை நான் கூறுவதைவிட குர்ஆனின் 47:19 ஆயத்தின் விபரத்தைப் பார்த்துப் புரிந்துகொள்வதே சிறந்தது. இப்போது குர்ஆனைப் பார்ப்போம்.

2:260ஆவது ஆயத்தை நோக்கிப் பாருங்கள். இப்றாஹீம்(அலை) அவர்களின் மடமையை அறியலாம்.

12:68ஆவது ஆயத்தைப் பாருங்கள். ய∴கூப்(அலை) அவர்களுடைய மடமையைக் காணலாம்.

37:139, 140, 141, 143, 144, 145 ஆவது ஆயத்துக்களைப் பாருங்கள். யூனூஸ்(அலை) அவர்களின் மடமையைக் காணலாம்.

2:159ஆவது ஆயத்தைப் நோக்கிப் பாருங்கள். உஸைர் (அலை) அவர்களுடைய மடமையைக் காணலாம்.

2:36ஆவது ஆயத்தை நோக்கிப் பாருங்கள். ஆதம் (அலை) அவர்களுடைய மடமையைக் காணலாம். இந்த ஆதம் (அலை) அவர்களுடைய மடமையினால்தானே நாம் துன்யாவுக்கு வந்தோம், கலிமாவைப் பெற்றோம்.

இதேபோல நபிமார்களின் மடமையினால்தான் எண்ணிலடக்கிக் கூறமுடியாத அளவு அனேக இரகசியங்களை அவ்லியாக்கள் பெற்றுக்கொண்டார்கள். இதிலொன்றும்



வியப்பில்லை. ஆகவே, நபிமாருக்கு மடமை இருக்கமுடியா தென்பது வெறும் யூகமேயன்றி உண்மையல்ல. நபிமார்கள் அனைவரும் மனிதர்கள்தானே. மூஸா (அலை) அவர்களுக்கும் ஹிலுரு (அலை) அவர்களுக்குமிடையில் நடந்த விவகாரத்தில் மூஸா (அலை) அவர்கள் மடமையடைந்தவர்களே என்பது நமக்கு வெளிப்படையாகவே தெரியும்.

குர்ஆனின் விபரங்களை ஆராய்ந்தால் சிருஷ்டிகள் தவறுசெய்வதில் சிற்சில இரகசியங்கள் தென்படுகின்றன, நபிமொழிகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. இந்த இரகசியம் வெளிப்படையாகக் கூறமுடியாத ஒன்றாகும். சிருஷ்டிகளில் மடமையில்லையானால் இறைவனின் அஸ்மாக்களின் தஜல்லி வெளியாகவே முடியாது. மடமை இல்லையானால் உண்மை ஒருபோதும் வெளியாகமாட்டாதல்லவா?

விஷயத்துக்கு வருவோம். இப்போது 7:143 ஆவது ஆயத்தின் இறுதிப்பகுதியை வாசியுங்கள். மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம் கேட்டது அவனுடைய வுஜுதைப் பார்ப்பதைத்தான். அப்படிக் கேட்டதும் குற்றம் என்றுணர்ந்துதான் உடனே மன்னிப்புக் கோரினார்கள். மேலும் தாத்தை வுஜுதை எவருடைய பார்வையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை அறிந்து கொண்டதனால்தான் விசுவாசிப்பவர்களில் (நம்புகிறவர்களில்) நான் முதன்மையானவன் என்று கூறினார்கள். இதிலிருந்து நாம் படிக்கவேண்டிய உண்மைகள் பல இருப்பினும் இப்போது நமக்கு அவசியமானது ஒன்று மட்டுமே. அது என்ன? "றப்பு" என்ற நாமத்தின் தஜல்லி ஏற்படும்போது சிருஷ்டி, அதை முற்றாய்த் தாங்கிக்கொள்ள முடியாமல் அறிவிழந்து மூர்ச்சையாகிவிடும் என்பதே.

இப்போது றசூல்(ஸல்) அவர்களைக் கொஞ்சம் நோக்குவோம். றசூல் (ஸல்) அவர்கள் ஐந்து நிலைமைகளை ஒன்றுசேர்த்தவர்களாய் இருந்தார்கள்.

1ஆவது நிலைமை : ஆமினா, அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது. இவர்கள் நமக்கும் அவருக்கும் எவ்வித வேறுபாடுமற்ற நம்மிலுள்ள மனிதர்.

2ஆவது நிலைமை : உம்மி மக்களுக்கனுப்பப்பட்ட உம்மி நபி. வேதத்தின் ஒருபாகம் கொடுக்கப்பட்டவர். இவருக்கும் முந்திய நபிமாருக்கும் பேதமில்லை.

3ஆவது நிலைமை : உலக மக்கள் யாவருக்கும் அனுப்பப்பட்ட வேதம் நிரப்பமாய்க் கொடுக்கப்பட்ட றசூல். இதிலும் மற்ற றசூல்மார்களை ஒத்தவர்தான்.

4ஆவது நிலைமை : (A) ஆலங்களுக்கெல்லாம் றஹ்மத்தாய் இருக்கிற விளக்கத்துக்கப்பாற்பட்ட ஓர் சிருஷ்டி.

5ஆவது நிலைமை : (B) ஸிர்ருடைய அடியார்.

A, B இந்த இரு நிலைமைகளும் வேறு எவருக்கும் கொடுபடவில்லை. ஆகையால்தான் நான் உங்களைப் போன்றவன் ஆயினும் என்னைப் போன்றவர் யாருமில்லை என்று றசூல் (ஸல்) கூறினார்கள். உங்களிலுள்ளவன் என்பதற்கும் உங்களைப் போன்றவன் என்பதற்கும் வேறுபாடுண்டு.

மேலே நாம் காட்டிய இந்த ஐந்து நிலைமைகளும் ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் இருந்தவர்கள்தான் காத்தமுன் நபிய்யீன் றசூல் (ஸல்) அவர்கள். இவர்களுடைய நிலைமைக்கும் மற்றும் நபிமார், றசூல்மார்களின் நிலைமைக்கும் மிகமிக வேறுபாடுண்டு. இவர்களும் இவர்களைப் பின்பற்றிய வலிமாரும் காணும் காட்சிகள் வேறானவை. அதாவது சர்வ உலகங்களும் தங்களுடைய உடலும் கூட நான் என்றுணரும் என்னிலேயே இருப்பதாய் அறிந்தவர்கள். ஆகவே இவர்களுக்குப் பௌதீக, சூட்சுமத் தடைகள் எதுமே கிடையாது. ஆகவே இவர்களுடைய காட்சி, அனுபவம் வேறு. இதற்கதிகமான விளக்கத்துக்கு இந்த நூல் இடம்தராது. இவர்கள் மௌத்தாகாமல் மவுத்தை அனுபவித்து வெற்றியடைந்தவர்கள்.



மற்றும் நபிமார்கள் அவர்களைப் பின்பற்றியவர்களும் இப்படி இல்லை. இவர்கள் உலகில் நானும் ஒரு சிருஷ்டியே என்றும் நான் இந்தப் பொளதீக உடலிலேயே இருக்கிறேன் என்றும் நம்பியிருந்து அமல் செய்தவர்கள். இவர்களுடைய காட்சிகளும் அனுபவங்களும் வேறு தன்மையானவை.

ஆகையினால்தான் றசூல் (ஸல்) அவர்களின் உம்மத்தில் சேர்ந்து பைஅத்தைப் பெறுவதற்காக ஹில்று (அலை) அவர்கள் நீண்டகாலத்துக்குப் பிறகு றசூல் (ஸல்) அவர்களிடம் பைஅத் பெற்றுள்ளார்கள். என்னுடைய ஸஹாப்பாக்கள் வானத்தின் நட்சத்திரம் போன்றவர்களென்றும் முந்திய நபிமாரை விடச் சிறந்தவர்களென்றும் புகழ்ந்திருக்கிறார்கள். ஆகவே, றசூல் (ஸல்) அவர்களுடையவும் அவர்களைப் பின்பற்றிய வலிமார்களுடையவும் நிலைமை எழுத்திலடக்க முடியாமல் இருக்கிறது. வெளிப்படையான கறாமத்தைக் கொண்டு அதை அளவிடவும் முடியாது.

இப்போது நோக்குங்கள். மூஸா (அலை) அவர்கள் இறைவனைக் கண்டார்கள், நேரே பேசினார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இறைவனுடன் மூஸா (அலை) நேருக்கு நேர் பேசியதாய் வருகிறதே என்று சந்தேகப்படுகிறீர்களா? இல்லை எங்கே வருகிறது? இது வியாக்கியான கர்த்தாக்களின் தவறு **"*எம்மனிதருடனும் இறைவன் திரைமறை விலிருந்தேயன்றிப் பேசுவதற்கில்லை*"** என்று குர்ஆன் 42:51 ஆம் ஆயத்தில் கூறுவதை நீங்கள் பார்க்கவில்லையா? அப்படி நேருக்கு நேர் பேசுவதானால் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு வேலை இல்லாமல் போயிருக்குமே.

அடுத்ததாக யூனுஸ் (அலை) மீன்வயிற்றிலிருந்தே இறைவனைக் கண்டார்கள் என்று அந்த நூலாசிரியர் விளக்கம் தருகிறார். யூனுஸ் (அலை) அவர்களுடைய மடைமையினால் தான் மீன்வயிற்றில் நுழைந்தார். மீன்வயிற்றிலிருந்தவர் இறைவனை எந்தக் கண்ணினால் பார்த்திருப்பார். அறிவுக்கண்ணால்தான் பார்த்திருப்பார். மீன்வயிற்றிலிருந்த யூனுஸ் (அலை) அவர்கள் கூறிய "லாஇலாஹ இல்லா அன்த சுப்ஹானக்க இன்னீ குன்து மினள்ளாலிமீன்" என்ற கலிமா இதை உணர்த்ததுகிறது. தூயவன் என்று அவர்கள் கூறிய வார்த்தை கண்ணால் காணமுடியாதவன் என்பதை உணர்த்துகிறது. ஆகவே யூனூஸ் (அலை) அவர்கள் மீன்வயிற்றில் இறைவனைக் கண்ணால் கண்டார் என்று வாதிடுவதன் அர்த்தம் என்ன? இது என்ன அறிவீனம்.

இறைவனே உன்னை எனக்குக் காட்டு என்று மூஸா (அலை) கூறியது வுஜூதை நோக்கித்தான். நீ காணமாட்டாய் என்று இறைவன் கூறியது அந்த வுஜூதைச் சுட்டியதுதான். இப்போது காணமாட்டாய் என்றாலும் ஒருக்காலும் காணமாட்டாய் என்றாலும் சரியே. மலையில் வெளியான றப்பு என்ற திருநாமத்தின் தஜல்லியேயன்றி "அல்லாஹ்" என்ற நாமத்தின் தஜல்லியேயல்ல. இது நமக்குக் குர்ஆன் தரும் உண்மை.

"றப்பு" என்பது யார்? அல்லாஹ் என்பது யார்? இவ்விரண்டு பதங்களும் உஜூது என்ற அறிவுக்கெட்டாத பொருளின் இரு மர்த்தப்பாக்களை உணர்த்தும் சொற்களாகும். அல்லாஹ் என்பதோ தாத்து, சிபத்து, அஸ்மா என்பவை யாவையும் உள்ளடக்கிக் கொண்ட ஓர் உயர் மர்த்தபாவாக இருக்கிறது. அல்லாஹ் மர்த்தபாக்களால் உயர்ந்தவன் என்பது இதுதான். இது எல்லை தெரியாத ஒரு கடல் என்றே கூறலாம். "றப்பு" என்பது "றுபூபியத்" என்னும் இறைமை. அல்லது தெய்வீகத் தன்மையை வெளியாக்கும் ஓர் அஸ்மாவின் மர்த்தபாவாக இருக்கிறது. அதாவது அல்லாஹ் என்ற சொல் அப்தையும் றப்பையும் வெறுவேறாய்ப் பிரித்துக் காட்டக்கூடிய ஓர் சொல்லல்ல. இந்த அல்லாஹ் என்ற சொல் தாத்துல் முத்தலக்கின் இடுகுறிப்பெயராகும். "றப்பு" என்பது அப்தையும் றப்பையும் தெளிவாய்ப் பிரித்துக் காட்டக்கூடிய ஒன்றாகும். தொழிற்பெயராகும்.



றப்பை நான் ஏதோ ஒருவகையில் பார்த்தேன் என்று கூறினால் அதை ஏற்கமுடியும். ஏனென்றால் றப்பு என்னும் போது அப்தும் உண்டு என்பது நமக்குத் தெரியும். ஆனால் அல்லாஹ்வைப் பார்த்தேன் என்று கூறும்போது அதை ஏற்க முடியாது. ஏனென்றால் அல்லாஹ் என்னும்போது அப்து றப்பு என்ற பிரிவினை கிடையாது. அல்லாஹ்வைப் பார்த்தேன் என்பது பொய்யாகும். ஆகையால்தான் அல்லாஹ்வை விழிப்பில் கண்டேன் என்பவன் பன்றியாயும் பொய்யனாயும் இருக்கிறான். என்று கூறப்பட்டது.

அப்படியானால், சில நல்லடியார்கள் கூறிய சில வார்த்தை களில் இந்த அர்த்தம் தொனிக்கிறதே என்று கேட்டால் நான் விடை தருவேன். இவர்கள் ஒவ்வொரு ஹாலில் ஒவ்வொரு திரையில் சிக்குண்ட மஜ்துபுகளாய் இருந்து அப்படிக் கூறியிருக்கலாம். அவர்கள் ஷரீயத்தில் மன்னிப்பளிக்கப்பட்டிருக் கிறார்கள். இவர்களுடைய பேச்சுகளை ஆதாரமாகக் கொள்ள முடியாது. இந்த நிலைமை மன்சூர் இப்னுஹல்லாஜி அவர்களுக் கேற்பட்டது போன்ற ஒரு நிலைமை. அவர்கள் கூறியது ஒரு ஹாலின் நிலைமையேயன்றி ஹக்கான நிலைமையல்ல. ஹக்கான நிலைமை என்றிருந்தால் அந்தச் சொல் வெளியாகியிருக்க மாட்டாது.

அதாவது கடலின் அலை, நுரை, நிறம், சுவை, போன்ற ஒவ்வொன்றையும் தனித்தனியாய் அறிபவர் விளக்கம் பெற்ற காமிலாவார். பொதுப்படையாய் அது கடலே என்பவர் திரையிடப்பட்டவராவார். அவருடைய நிலைமையில் அவர் கூறுவது சரிதான்.

சர்வ ஆலங்களும் அல்லாஹ் என்ற வுஜுூதின் றப்பு, லாஹிர், பாத்தின், அவ்வல், ஆகிர், காதிர், அலீம் போன்ற மற்றும் திருநாமங்கள் அனைத்தினதும் வெளிப்பாடேயாகும். இந்த வெளிப்பாடான சர்வ பிரபஞ்சங்களும் அழிந்துவிட்டால் இந்த நாமங்களும் இல்லாமலே மறைந்துவிடும். அல்லாஹ் என்ற சொல்லினால் சுட்டிக்காட்டப்பட்ட வாஜிபுல் வுஜுூது மட்டுமே மிஞ்சும். இதைக் குர்ஆன் நமக்கு விளக்கம் தருகிறது.

*வானம் பூமி யாவும் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டுமே மிஞ்சுவான்* என்று இறைவன் விளக்குகிறான். இந்த அல்லாஹ் என்ற பெயரால் குறிப்பிடப்பட்ட வுஜுூதின் தனிநிலையில் (தாத்து என்னும் சொந்த நிலையில்) இதற்கு எவ்வித நாமரூப குணங்களுமே கிடையாது. அதனால்தான் இந்த நிலைமையைக் காபிலியத் அற்றது, எதையும் ஏற்கும் தன்மையற்றது என்று கூறப்படுவது. அல்லாஹ் என்று சொல் இல்லையானால் இந்த நிலைமையை எவராலும் உணரப்படவே முடியாது.

ஆகவே, அல்லாஹ்வே எல்லாமாய் வெளியானான் என்பது ஒரு பொது வழக்கு. இது பாஷை வழக்கு முறையாகும். இவ்விஷயம் அறபு, அல்லது மற்றும் பாஷைகளிலுள்ள இலக்கிய வழக்கறிந்தவர்களுக்குப் புரியலாமேயல்லாமல் நுணிப்புல் மேய்ந்த கல்விமான்களுக்குப் புரியாது. இதை உணர்ந்து வாழ்க்கையில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட முஹ்யித்தீன் இப்னு அறபி (றலி) போன்ற மகான்களுக்குத் தெரியும். இவர்கள் போன்றோரின் நூல்களை மேலோட்டமாய் வாசித்த ‘‘ஹமவோஸ்த்’’ ஆசிரியர் போன்றவர்களுக்குப் புரிவதில்லை.ஆகையால்தான், மேதைகளை எடைபோட முடியாமையால்தான் அப்பெரியார்களின் சொற்களை ஆதாரமாய்க் கொண்டு மக்களைக் குழப்புகிறார்கள்.

இதிலிருந்து நாம் புரியவேண்டியது என்னவென்றால் அல்லாஹ் வெளியாகியுள்ளான் என்பது உண்மைதான். ஆனால் வெளியானதெல்லாம் அல்லாஹ் என்ற சொல்லில் புதைந்துள்ள மற்றும் திருநாமங்களின் தஜல்லிதான். இதை வேறொரு வகையில் சிந்தனைசெய்து பாருங்கள்.



றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவை மக்கள் முன்னிலையில் முதன்முதல் வெளிப்படுத்தி அதற்கு ஆதாரமாய்த் தந்த ‘‘தலீல்’’களில் ஒன்று ‘‘ஹுவல்அவ்வலு வல்ஆகிறு வல்ழாஹிறு வல்பாதினு வஹுவபிகுல்லிஸையின் அலீம்’’ என்ற வசனமே ஆகும். இதில் அல்லாஹ் என்று வெளிப்படையாய்க் கூறப்படாமல் அல்லாஹ் என்பதை உணர்த்துவதற்காக ‘‘ஹு’’ அவன் அல்லது அது என்ற சொல்லே பாவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வல், ஆகிர், ழாஹிர், பாதின், அலீம் என்ற முற்றிலும் அறிந்தவன் என்ற நாமமும் பாவிக்கப்பட்டுள்ளது. இறைவனின் திருநாமங்களே பாவிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், இந்த நாமங்கள் இலாஹியான நாமங்கள்தான். கெளனியான நாமங்கள் இலாஹியான பெயருக்குப் பெயராய் அமைந்தவை. ஏனென்றால், சர்வ பிரபஞ்சங்களும் அல்லாஹ் என்ற சொல்லில் மறைந்துள்ள மற்றும் திருநாமங்களின் வெளிப்பாடே என்பதை விளக்குவதற்காகத்தான்.

இதன்பின் கூறிய தலீலில் *நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தைக் கயிற்றில் கட்டிக் கீழ்ப் பூமியாகிய பாதாளத்திற்கு அனுப்புவீர்களேயானால் நிச்சயமாக அது அல்லாஹ்வின் மேல் விழும்* என்று கூறினார்கள். இது ஹதீதேயன்றிக் குர்ஆனல்ல. இந்த ஹதீஸ் மேலேதந்த குர்ஆன் வசனத்தின் வியாக்கியானமாய் அமைந்திருக்கிறது. எப்படியென்றால்,

இந்த வெளிப்பாடுகளும் திருநாமங்களும் வாஜிபுல் வுஜுூதுக்குள்ள அல்லாஹ் என்ற நாமத்துக்குள் அடங்கியவையே என்பதை விளக்கியிருக்கிறார்கள். பாதாளம் அல்லாஹ்வின் வெளிப்பாடு என்றால் இதற்கு எதிரான மேற்பரப்பு அல்லாஹ்வின் வெளிப்பாடே என்றாகும். பூமி அல்லாஹ்வின் வெளிப்பாடே என்றால் வானமும் மற்றும் சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் வெளிப்பாடே

என்பது புலனாகும். இதைத்தவிர, பூமிதான் அல்லாஹ் என்ற பொருளில் இந்த ஹதீஸ் பாவிக்கப்படவில்லை. அப்படிப் பாவிக்கப்பட்டிருந்தால் வானம் அல்லாஹ் அல்ல என்றாகும். இதுதான் இலக்கிய வழக்கு.

ஆகவே சர்வமும் அல்லாஹ்வின் வெளிப்பாடே என்பது புலனாகுதேயன்றித் தொட்டதெல்லாம் வுஜூதைத்தான் என்றோ பன்றி, நாய் என்றபொருட்கள் அல்லாஹ்தான் என்றோ ஆகாது. இதை விளங்கியறிய ஆற்றலில்லாததினால் ஹமவோஸ்த் ஆசிரியர் எல்லாம் அல்லாஹ்வேயென்றும் தொடுவதெல்லாம் தாத்தைத்தான் என்றும் உளறிக்கொண்டிருக்கிறார்.

மக்களே!

ஞானம் என்பது ஆழம் காணமுடியாத ஒரு கடல். கிணற்றாழம் பார்க்கக் குரங்கு வாலை விட்டதுபோல் இருக்கிறது ஹமவோஸ்த் ஆசிரியரின் செயல். சாதாரண மக்களுக்கு இவ்வளவுபோதும். இதற்கதிகமான நுண் விளக்கங்களைத் தந்தால் விளங்கிக் கொள்ளமாடீர்கள். இந்த நூலும் இடம் தராது.

முடிவு என்னவென்றால் இறைவனின் சிற்சில மர்த்த பாக்களை பக்குவமுடைய ஒருசிலரால் பார்க்கமுடியும். ஆயினும் அல்லாஹ்வைப் பார்ப்பதென்பது அசாத்தியமான தாகும் என்பதே. இருப்பது வாஜிபுல் உஜூது என்னும் தாத்தேதான் என்று ஒரு பெரியார் எழுதினால் அல்லது சொன்னால் நாம் தொட்டுப்பார்ப்பது வுஜூதைத்தான் அல்லது தாத்தைத்தான், நாம் காண்பதெல்லாம் அல்லாஹ்வைத்தான் என்று கொள்வது எவ்வளவு பெரிய அறிவீனம். அந்த மகான்கள் இருப்பதெல்லாம் அல்லாஹ்வுடைய அஸ்மாக்களின் நிறமும் வெறும் தோற்றமுமே என்பதைக் கண்டறிந்ததினால், அவை புலனுணர்வினால் ஏற்பட்ட மருட்சி என்பதை அறிந்ததனால் அவற்றையெல்லாம் அழித்து அல்லாஹ்வை, வாஜிபுல் வுஜூதைத் தரிபடுத்தவேண்டித்தான் வுஜூதைத்தவிர ஒன்றுமே இல்லை என்று கூறினார்கள். இதை



விளங்கிக் கொள்ளாதது எமது குற்றமேயன்றி அவர்களின் குற்றமல்ல.

அறபுபாஷையில் கிதாபுகளை எவரெவர் எழுதியிருந் தாலும் அவர்களையெல்லாம் இமாம்கள் என்று எடுத்துக்கொள்வது எவ்வளவு மதியீனம். எந்த ஒரு பாஷையிலும் பாண்டித்தியம் பெற்றுக்கொண்டால், விஷேடமாக அறபு, உருதுபோன்ற பாஷைகளில் பாண்டித்தியம் உடையவர்களாயிருந்தால் அல்லாஹ்வை அறிந்துகொள்ளலாம் என்பது முழு முட்டாள்தனமாகும். அல்லாஹ்வை முற்றாய் அறிவது அல்லாஹ்வால்தான் முடியும். ஆனால் இன்ஸானின் கல்பில் தெளிவும் இறைவழிகாட்டலும் அவசியமாகும். கல்வியைக் கொண்டே அல்லாஹ்வை அறியலாமென்றிருந்தால் நபிமார்களை எல்லாம் கல்விமான்களாகவே இறைவன் அனுப்பியிருப்பான். நபிமார்களில் ஒருவர் இருவரைத்தவிர ஏனையோரெல்லாம் கல்வியறிவில்லாதவர்களே.

குர்ஆன் 2:110

*அவர்களுக்கு முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் அவன் நன்கறிவான். எனினும் அவர்கள் அவனை(த்தங்கள்) கல்வி அறிவைக் கொண்டு அறியமுடியாது.*

குர்ஆன் 7:30

*“சிலரை அவன் நேரானவழியில் செலுத்தியிருக்க மற்றவர்கள் மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான் களையே தங்கள் ஔலியாக்களாக எடுத்துக் கொண்டதுடன் தாங்கள் நிச்சயமாக நேரான பாதையில் இருப்பதாகவும் நம்பிக்கொண்டதுதான்.”*

இந்த ஆயத்தில் மிக அபூர்வ விளக்கங்கள் உண்டு. அவ்லியாக்கள் யார் என்பதைக் கண்டறிய இது ஒன்றே

போதுமானதாகும். இக்கேள்விக்குரிய பதிலின் சாரம் என்னவென்றால், "லன்தறானி" என்ற சொல் ஆயத்தில் பாவிக்கப்பட்டிருப்பதால் இப்போது காணமாட்டாய் என்பது உண்மை. இதை இபாரத்துன்னஸ்ஸாகக் கொண்டால் இனிமேல் காண்பாய் என்பது தலாலதுன்னஸ் ஆகும். மூஸா (அலை) அவர்கள் இந்த ஆயத்தில் கூறியபடி அல்லாஹ்வையோ றப்பு என்ற திருநாமத்தின் பூரண வெளிப்பாட்டையோ அங்கே பார்க்கவே இல்லை. ஆகவே றப்பென்ற திருநாமத்தின் கட்டுப்பாடான சில வெளிப்பாடுகளைப் பெறலாம் என்பது தெரிகிறது. ஆகையால் இப்போது காணமாட்டாய் என்பது றப்பின் பூரண வெளிப்பாட்டை நோக்கியும், இனிமேல் காண்பாய் என்பது பூரண வெளிப்பாட்டைக் காணமாட்டாய் என்பதை இனிமேல் காண்பாய் என்பதையும் நோக்கியதுமாகும். ஆகவே தப்ஸீர்களில் ஒருபோதும் காணமாட்டாய் என்ற பொருள் கூறப்பட்டிருப்பது பிழையேயல்ல. அதாவது அல்லாஹ்வையோ அல்லது றப்பின் பூரண தஜல்லியையோ எவராலும் துன்யாவில் எப்போதும் பார்க்கவே முடியாது என்பதற்கு இந்த ஆயத்தும் உறுதியான ஆதாரமாகவே இருக்கிறது. இதைப்போல தான் 6:103ஆவது ஆயத்தும் அல்லாஹ்வை அல்லது றப்பின் பூரண தஜல்லியைத் துன்யாவில் எவராலும் பார்க்கவே முடியாது என்பதற்கும் உறுதியான பூரண ஆதாரமாய் அமைந்திருக்கிறது. இதை ஹமவோஸ்த் நூலாசிரியர் மறுப்பினும் உண்மை இதுதான்.

இதைப்போலவே அல்லாஹ்வுடைய றப்பு என்னும் திருநாமத்தின் சிற்சில கட்டுப்பாடுகளுக்குட்பட்ட சிற்சில தோற்றங்களை மனாமிலோ விழிப்பிலோ காணமுடியாது என்பதற்கு இவ்வாயத்து உறுதியான ஆதாரமாகாது.

இந்த 7:143ஆவது ஆயத்தில் இன்னொரு நுட்பம் இருக்கிறது. அதாவது இந்த ஆயத்து எப்போது அருளப்பட்டதோ அப்போதிருந்து உலகம் முடியும் வரையிலும் எவ்வித மாற்றமு மில்லாமல் "காணமுடியாது" என்றே கூறிக்கொண்டிருக்கும். இதற்கு முன்பும் இப்போதும் இனிமேலும் யார் யார் இந்த ஆயத்தை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் அனைவரும் இப்போது காணமுடியாதென்ற பொருள் கொடுக்கும். இது இறுதிநாள் வரையிலும் நடைபெறக்கூடியதே. ஆகவே "லன்" இப்போது என்ற சொல் முக்காலங்களையும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. ஆகையால் ஒருபோதும் காணமாட்டாய் அல்லது காணமுடியாதென்பது ஆயத்தின் சரியான கருத்தாகும்.



அதாவது 7:143ஆவது ஆயத்தில் கூறப்பட்ட(லன்தறானீ) என்ற வசனஅமைப்பு இப்போது காணமாட்டாய் (அறியமாட்டாய்) இனிமேல் காண முடியாதென்பதைக் காண்பாய் (அறிவாய்) என்ற உண்மையை விளக்குவதேயாகும். ஏனென்றால், இறுதி வரையிலும் மூஸா (அலை) காணவேயில்லை. தஜல்லியான போது மூர்ச்சையாகி வீழ்ந்திருக்கிறார்கள். இதை விளங்கிக் கொள்ள மிக நுண்ணறிவு வேண்டும். ஆகவே, காணமுடியாதென்பது அல்லாஹ் என்ற அஸ்மாவின் தஜல்லியையும் றப்பு என்ற நாமத்தின் பூரண தஜல்லியையும் குறிப்பிட்டதாகும்.

நான் முன்பு தந்த விபரத்தின்படி அல்லாஹ்வேறு றப்பு வேறு என்று நான் கூறுகிறேன் என்று நீங்கள் நம்பிக்கொண்டால் அது உங்களுடைய தவறேயன்றி என் தவறல்ல. அதாவது அல்லாஹ் என்பது தாத்துல் முத்தலக்கான வுஜூதுக்குரிய சொந்த நாமமாகும். இந்த தாத்து என்னும் அல்லாஹ் சர்வ ஆலங்களையும் சிருஷ்டிப்பதற்கு முன் நூறைத்தான் முதன்முதலாகச் சிருஷ்டித்தான். சிருஷ்டிகளில் முதலாவது சிருஷ்டி என்னுடைய நூறே என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த நூர் என்பது அல்லாஹ் நாடிய அளவு வெளியானதேயல்லாமல் முற்றாக வெளியானது என்பது பொருளல்ல. அப்படி முற்றாய் வெளியானதென்றால் அல்லாஹ்விடத்தில் இனி நூர் இல்லையென்றாகும்.

அல்லாஹ் நாடிய அளவு வெளியான நூறைக் கொண்டு தான் சர்வ ஆலங்களும் வெளியாகியிருக்கின்றன. இந்த ஆலங்கள் எப்போது வெளியாக்கப்பட்டதோ அப்போதுதான் “றப்பு” என்ற திருநாமமும் ஏற்பட்டது. அதாவது அப்து என்பது இல்லையானால் றப்பு என்ற நாமமும் இல்லாமல் ஆகிவிடும். ஆலங்கள் வெளியாவதற்கு முன் றப்பு என்ற நாமமும் அல்லாஹ் என்ற வுஜூதில் மறைந்த நாமமாய்த்தான் இருந்தது. இந்த நாமம் தொழிற்பெயராய் இருக்கிறது. படைத்தல், அழித்தல், காத்தல், முதலாம் சர்வ தொழிற்களும் இந்த றப்பு என்னும் நாமத்தில் கட்டுண்டவைதான். ஆகவே வெளியானவை வெளியாக வேண்டியவை யாவும் இந்த றப்பு என்ற திருநாமத்தின் வெளிப்பாடுதான். இதை அல்லாஹ் வெளியானான் என்று கூறுவது “ இஸ்தி ஆரா” என்று கூறப்படும். அதாவது இரவல் வாங்குவது என்பதே இதன் அர்த்தம்.

றப்பும் அதில் கட்டுண்ட அப்தும் சர்வஆலங்களும் அழிந்தொழிந்தால் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான். “*வானம் பூமியாவும் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான்*” என்று குர்ஆன் தரும் விளக்கம் இதுதான். ஆகவே, இம்மையிலாயினும் மறுமையிலாயினும் சிருஷ்டிகளால் அறியப்படுகிற, பார்க்கப்படுகிற, உணரப்படுகிற எவ்விதக் காட்சியேயானாலும் அது றப்பு என்ற திருநாமத்திலடங்கிய காட்சியாகவே இருக்கும். இதை அல்லாஹ்வின் காட்சி என்று கூறுவது “இஸ்திஆரா” என்னும் இரவல் வழக்காகும். அல்லாஹ் வெளியானான் என்பதும் இந்த இரவல் வழக்குத்தான்.

நூறை வெளிப்படுத்தினாலும் வெளிப்படுத்தாவிட்டாலும் அல்லாஹ் என்ற வுஜூது என்றும் சம்பூரணமாகவே உள்ளது. இதன் நிலைமைகள் (மர்த்தபாக்கள்) எல்லையில்லாதவை. மனித அறிவில் எட்டாதவை. றப்பு என்ற நாமத்தின் நிலைமை இப்படியல்ல. றப்பு என்ற நாமத்தின் வெளிப்பாட்டை (தஜல்லியை) மனித அறிவு அதன் சக்திக்கேற்ற அளவு எட்டிக் கொள்ளும். இதை



வேறோர்வகையாய்க் கூறுவதானால் “றப்பு” என்பது அல்லாஹ் என்ற வுஜூதின் ஓர் உடையாகும். இந்த உடைக்கு எல்லை மட்டுத்திட்டம் உண்டு. அல்லாஹ் என்ற நாமத்துக்கு எல்லையோ மட்டுத் திட்டமோ கிடையாது. ஆகவே அல்லாஹ்வை அல்லாஹ்வேயன்றி எவராலும் எப்போதும் பார்க்க, அறிய, உணர முடியவே முடியாது. லிகா என்பதும் அதில் அல்லாஹ்வைச் சந்திப்பது என்பதும் அவன் அவனாக இருந்து அனுபவிக்கும் அவனுடைய சொந்த அனுபவம் என்பதைத்தவிர வேறு விபரம் தரமுடியாது. இந்த விபரத்தைப் புரிந்து கொண்டால் றப்பை ஒரு பொருளாகவும் அல்லாஹ்வை வேறோரு பொருளாகவும் நான் கற்பனை பண்ணிக் கூறவில்லை யென்பதை அறிந்து கொள்வீர்கள்.

இந்த விபரத்தை விளங்கிக்கொண்டால் நாய் பன்றி முதலாம் பொருட்களையோ அல்லது மற்றும் எவ்விதமான சிருஷ்டிப் பொருட்களையும் அல்லாஹ் என்ற திருநாமத்தைக் கொண்டு அழைப்பது தகாது என்பதை அறியலாம். குர்ஆனில் சிற்சில நபிமாருக்கு இறைவனுடைய சிற்சில நாமங்களைக் கொண்டு கூறப்பட்டுள்ளது. உதாரணமாக றசூல்(ஸல்) அவர்களை “றஹீமுன்” “றஊபுன்” என்று இறைவன் கூறியிருக்கிறான். ஆனால் எந்த ஒரு நபியையும் அல்லது வேறு எந்த ஒரு சிருஷ்டியையும் அல்லாஹ் என்ற திருநாமத்தி னால் அழைக்கப்படவே இல்லை. இந்த நாமம் சிருஷ்டியையும் சிருஷ்டிகர்த்தாவையும் வேறுபடுத்தாமல் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி கொண்டதாய் இருக்கிறது. றப்பு என்ற திருநாமம் அப்தையும் றப்பையும் தெளிவாக வேறு பிரித்துக் காட்டுவதாய் இருக்கிறது.

இவ்விஷயத்தில் இன்னொரு நுட்பம். தௌஹீதுக் கலிமா என்பது “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்பதுதான். இதில் எக்காலத்திலும் உலமாக்களிடத்தில் அபிப்பிராயபேதம் கிடையாது. இந்தக் கலிமாவை ஒருவர் கூறினால்தான் அவரை ஒரு முஸ்லிம் என்று நாம் ஏற்கிறோம். இந்தக் கலிமாவில் இறைவனின் திருநாமமாகப் பாவிக்கப்பட்டிருப்பது “அல்லாஹ்” என்னும் நாமமே.

இந்த நாமத்தை நீக்கிவிட்டு அவ்விடத்தில் "றப்பு" என்னும் திருநாமத்தைச் சேர்த்து லாயிலாக இல்லா றப்பு என்று கூறினால் அது தௌஹீதுக் கலிமாவாகாது. அப்படிக் கூறுபவரை ஒரு முஸ்லிமாய் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இது என் சொந்த அபிப்பிராயமல்ல, இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட பிக்ஹுவிலுள்ள மிக மிக முக்கியமான ஒரு சட்டமாகும். இவ்விஷயம் பிக்ஹுவைக் கற்ற உலமாக்கள் எல்லோருக்குமே தெரியும்.

அல்லாஹ் என்ற நாமத்துக்குப் பதிலாக றப்பு என்ற நாமத்தை எடுத்துக் கொண்டால் அக்கலிமாவை நாம் ஒப்புக் கொள்ளாமலும், அக்கலிமாவைக் கூறியவனை முஸ்லீமாய் ஏற்றுக்கொள்ளாமலும்விடக் காரணம்தான் என்ன?

இன்ஸானை அல்லாஹ் என்ற நாமம் எவ்விடத்துக்கு அழைத்துச் செல்லுமோ அதே இடத்துக்கு றப்பு என்னும் திருநாமம் அழைத்துச் செல்லாது என்பதனால்தான். அல்லாஹ் என்ற திருநாமம் தன்ஸீஹைச் சேர்ந்ததாயும் றப்பு என்னும் திருநாமம் தஸ்பீஹைச் சேர்ந்ததாயும் இருக்கிறது. குர்ஆன் ஹதீஸ்களை நோட்டமிட்டால் எங்கெங்கு தன்ஸீஹ் வலியுறுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் அல்லாஹ் என்ற திருநாமமே கூறப்படுகிறது. அல்லாஹ்வைப் பற்றிய அறிவு தன்ஸீஹைப் பொறுத்ததாகவே இருக்கவேண்டும் என்பது ஷரீயத்தில் மிகமிகப் பிரதானமான ஒரு சட்டமாகும். அவாம்களுக்கு இதில்தான் நன்மையுண்டு என்பதற்காகத்தான் றசூலுல்லாஹ்வும் ஸஹபாக்களும் இவ்விஷயத்தில் முழுமுயற்சி செய்திருக்கிறார்கள்.

றப்பு என்னும் திருநாமத்தின் தஜல்லியே மனித அறிவை மீறியதாயும் புலன்களினால் உணரமுடியாததாயும் இருக்கிறது. ஆயினும் றப்பு என்ற நாமத்தின் ஒரு குறிப்பிட்ட அளவைப் புலன்களும் அறிவும் பெற்றுக்கொள்ளக் கூடும். அந்தத் தஜல்லி கட்டுப்பாட்டுக்குள் அமைந்ததாய் இருந்தாலும்கூடத் துவித உணர்வோடு உள்ளதுதான். துவித உணர்வு இல்லையானால் காட்சி காண்பதும் இல்லவே இல்லை. ஆகவே இக்காட்சி



தௌஹீதின் வெளிச்சமல்ல. ஏன்? துவிதம் இருக்கும்போது தௌஹீது எப்படிச் சித்திக்கும். மனிதன் ஒரு நிலையில் இறைவனைக் காண்பதுகூட கியாலி, ஹிஸ்லி என்று இரு தன்மையுடையதாய் இருக்கிறது. ஒன்று கற்பனையான பொயக்காட்சியாயும் மற்றொன்று உண்மைக்காட்சியாயும் இருக்கிறது. இந்த உண்மைக் காட்சிகூட விழித்திருக்கும்போதும் கண்ணை மூடிக்கொண்டிருக்கும் போதும் எவ்வித வேறுபாடுமில்லாமல் இருந்தால்தான் அது உண்மைக் காட்சியாகும். இல்லையானால் அது கனவுக்காட்சியாகவே இருக்கும். இதிலும் அன்பியாக்கள் காணும் காட்சிக்கு மிக வேறுபாடு உண்டு.

அல்லாஹ் என்ற திருநாமத்தின் தஜல்லியோ நாம் முன்கூறிய விபரங்களுக்கு முற்றிலும் முரணானது. ஏன்? இங்கே துவிதம் கிடையாது. மிகச் சுருக்கமாகக் கூறினால் இது அல்லாஹ்வை அல்லாஹ்வே காணும் காட்சி அல்லது அறியும் அறிவாகும். இது இன்ஸானால் முடியக்கூடிய ஒன்றேயல்ல. இதற்கதிகமான விபரங்களுக்கு இந்நூல் இடம்தராது. ஆகவே றப்பின் தஜல்லி வேறு, அல்லாஹ்வின் தஜல்லி வேறுதான். விஷயம் இப்படியிருக்க அந்த இமாம் நூறுமுறையும் இந்த இமாம் இருநூறு முறையும் அல்லாஹ்வைக் கண்டார்கள் என்று அமாவாசை ஆலிமும் அமாவாசை இமாம்களும் உளறுவதன் அர்த்தம் என்ன? ஒரு குருடி நீர் மொள்ளப்போய் ஒன்பது குருடி அலைந்த கதை யல்லவா இது? ஆதாரமற்ற செய்திகளை அமாவாசை ஆலிம் நம்பட்டும். ஆனால் அறிவுடைய மக்களின் நம்பிக்கைக்கு ஆதாரம் வேண்டும்.

அல்லாஹ் என்ற திருநாமம் தாத்துல் முத்தலக்கான வுஜுதுக்குரியது. றப்பு என்ற திருநாமம் "மர்த்தபத்துல் வாஹிதியா"வுக்குரியது. அப்படியிருந்தும் ஒவ்வோர் ஆத்மாவும் "ஆலமுல் அர்வாஹ்" என்னும் நாலாவது மர்த்தபாவில்தான் றப்பு என்ற திருநாமத்தை அறிகின்றது. அப்படி அறிந்திருந்தாலும்கூட "ஆலமுல் இன்ஸான்" என்னும் ஏழாவது மர்த்தபாவில்தான் றப்பு

அப்து என்ற வேறுபாடு தரிபடுகிறது. ஆகவே, அல்லாஹ்வைக் கண்டேன் அல்லது காணலாம் என்று கூறுவது மதிமாறாட்டமுடைய புத்தகம் சுமந்த கழுதைகளின் கதறலேயன்றி உண்மையல்ல. றப்பைக் காணும் அப்து இருக்கும்வரையிலும் வஹ்தத்துல் வுஜுூதைக் கொள்கையை நாவினால் பேசலாமேயன்றி அமாவாசை ஆலிமால் அதை உறுதிப்படுத்த முடியாது. தான் எதைப் பேசுகிறேன் எதை எழுதுகிறேன் என்று புரிந்து கொள்ளாத ஒருவர் பாமரமக்களை மேய்க்கலாம். ஆனால் அது அழிந்து விடும். பொய் நிலைத்திருப்பதில்லையே!

ஷரீயத் விஷயத்திலும் தௌஹீது விஷயத்திலும் மக்கள் வழிதவறக்கூடாது என்பதற்காக நமக்குமுன் சென்ற ஸஹாபாக் களும் பின்வந்த சிற்சில மேதைகளும் எவ்வளவோ அழகான சட்டதிட்டங்களை வகுத்துத் தந்திருக்கிறார்கள். எல்லாவற்றையுமே விபரிப்பதானால் இடம்பாடாகாது. இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்களால் எழுதப்பட்ட "இல்ஜாமுல் அவாம்" என்ற சிறுநூலையாவது பார்வையிட்டுத் தெளிவுபெறுங்கள்.

5ஆவது கேள்வி

"ஹமவோஸ்த்" என்ற நூலில் 22, 23, 24 ஆம் பக்கங்களைப் படிக்கும்போது ஆச்சரியமடைகிறோம். முருகனை இறைவனுக்கு உருவமாக வைத்து வணங்கியவர்களுக்கு முருகனுடைய தோற்றத்தில் இறைவன் காட்சியளிப்பான் என்று தெரிகிறது. ஆகவே, நாமும் இறைவனுக்கு நம் விருப்பத்திற்கேற்ப ஓர் உருவத்தைச் சரிக்கட்டி நமது பள்ளிவாசல்களுக்குள்ளும் வைத்து வணக்கம் செலுத்தினால் இறைவனை ஆகிறாவில் நாம் காணாலாம் போல் தெரிகிறது என்பதுதானே! கேள்வி.

### பதில்

ஹதீஸ் :

*மக்களே! இறுதி நாளையில் வருகிற தஜ்ஜாலை விட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் பயப்படுகிறேன் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூற, ஸஹாபாக்கள் யார் அவர்கள் என்று வினவ, மக்களை வழிகேட்டில் தள்ளிவிடுகிற (இமாம்கள்) வழிகாட்டிகள் என்று றசூல் (ஸல்) அவர்கள் விடை அளித்துள்ளார்கள்*



ஹதீஸ்

*மனிதர்களில் ஓர் காலம்வரும். அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் சத்தியம் (உண்மை) இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் இராது. அவர்களுடைய மஸ்ஜிதுக்கள் நேர்வழியின்றிக் கெட்டுப்போயிருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் கெட்ட ஜந்துக்களாய் (மிருகங்களாய்) இருப்பார்கள்.* இவைபோல் இன்னும் பல ஹதீஸ்கள் ஆயத்துகளைத் தரலாம். அவசியமில்லை. விஷயத்துக்கு வருவோம்.

இதற்குமுன் சென்ற நபிமார்கள் 124,000 பேரும் விக்கிரகம் வைத்து வணங்காதவர்களே. இறைவனுக்கென்று எந்த ஓர் தோற்றத்தையும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டதே இல்லை. அவர்களைப் பின்பற்றிய பல கோடா கோடி மக்கள் எவரும் விக்கிரகம் வைத்து வணங்கியவர்களேயல்ல. அப்படியானால் முருகன் என்ற விக்கிரகத்தை வணங்கியவனுக்கு மஹ்ஸறில் காட்சிகொடுக்கிற இறைவன் அந்த நபிமாருக்கும் அவர்களைப் பின்தொடர்ந்தோருக்கும் காட்சிகொடுப்பானா? கொடுக்கமாட்டானே! நம்முடைய றசூல் (ஸல்) அவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றிய நமக்கும்கூடக் காட்சிதர மாட்டானே ! இது என்ன அறிவீனம்.

இந்தப் பேச்சு இந்த எழுத்தில் "சுன்னத்வல் ஜமாஅத்" கூட்டத்தின் கொள்கைக்கும் குர்ஆன் ஹதீஸுகளுக்கும், இஜ்மாவு, கியாஸ் போன்ற ஆதாரங்களுக்கும் மாறான "பித்அத்" அல்லவா? இந்த ஹமவோஸ்த் நூலாசிரியருக்கும் அவரின் பின்னணிக்கும் தீன், ஷரீயத், ஷறகு, ஷிர்க், குபிர், இல்மு, ஹிக்மத் (ஞானம்) என்ற சொற்களின் கருத்துக்கள்கூட விளங்கவில்லைபோல் தெரிகிறது.

முஷ்ரிக் என்பவன் இணைவைப்பவன், காபீர் என்பவன் இணைவைப்பவனல்ல. இவன் வேதங்களை ஒப்புக்கொண்டிருந்தும் கூடச் சிற்சில விஷயங்களில் வேதங்களுக்கு மாறாய்க் கருத்துக்கொண்டு நடப்பவன். இந்தக் காபீர்கள்தான் எஹுூது நஸாறாக்களில் ஒரு பகுதியினர். விக்கிரக வணக்கத்தைக் கொண்டுள்ள இந்த எஹுூது நஸாறாக்களையும் விட மிகத்தாழ் வகுப்பிலுள்ளவர்கள்தான் வேதத்தைப்பற்றியறியாத, முருகன், காளியை வணங்குகிற முஷ்ரிக்குகள், காபீர்கள்.

இப்போது இவர்களின் நிலைமையைக் குர்ஆனைக் கொண்டு நோக்குவோம். இங்கே ஹமவோஸ்த் நூலாசிரியரால் தரப்பட்ட ஓர் ஆயத்தைத் தருகிறேன்.

*குர்ஆன் 83:15,16*
*(மஹ்ஸரில் அந்நாளில் நிச்சயமாக (காபீர்கள் முஷ்ரிக்குளான) இவர்கள் இறைவனைக் (காண்பதை) விட்டும் (திரையிடப்பட்டுத்) தடுக்கப்படுவார்கள். பின்னர் நிச்சயமாக இவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.*

இதுபோன்ற இன்னும் பல ஆயத்துக்களும் ஹதீஸ்களும் இருக்கின்றன. இந்த ஆயத்தின் மூலம் காபீர்கள் முஷ்ரீக்குகள் இறைவனை “மஹ்ஸரில்” காணமாட்டார்கள் என்பதைக் குர்ஆன் கூறுகிறதென்பது நமக்கு நன்றாய்த் தெரிகிறது. ஹமவோஸ்த் நூலாசிரியரும் இதை அறிந்துதானே எழுதியிருக்கிறார். அப்படி எழுதியபின்னும் முருகனை வணங்கியவன் காளியை வணங்கியவன். அவனவன் வணங்கிய தோற்றத்தில் இறைவனைக் காண்பான் என்று கூறுகிறாரே! இவருடைய மதிமாறாட்டமான அறிவைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

குர்ஆனால் மறுக்கப்பட்ட ஓர் விஷயத்துக்கு முரணானதை எழுத்திலும் பேச்சிலும் கூறுவது சுத்தமான “பித்அத்” அல்லவா?



இவர் கூறுவது உண்மையானால் இவர்கூறும் விபரத்திற்கு ஆதாரம் என்ன? இவ்விதமான “தஜ்ஜால்கள்” “முர்தத்”துக்களுக்கு லாஹிருடைய விபரமும் தெரியாது, பாதினுடைய விபரமும் தெரியாது. இந்த வழிகெட்ட கூட்டம் சொல்வதுதான் உண்மையென்றிருந்தால் ஒவ்வோர் நபியும் அவரவர் கூட்டத்தாருக்கு ஏற்ற விக்கிரகங்களைச் செய்துகொடுத்து அந்த விக்கிரக வணக்கத்தை ஆமோதித்தும் இருப்பார்களல்லவா? இவ்விதமான மதிகெட்ட, கக்கிவிட்டு நக்கி உண்ணும் கூட்டம்தான் வானத்தின்கீழ் மிகக்கெட்ட ஜந்துக்களாய் இருக்கிறார்கள். அப்படியானால் இவரும் இவருடைய கூட்டாத்தார்களும் இவர்களுடைய கோயில்களில் எந்த எந்தப் பன்றிகளின் உருவங்களை வைத்திருக்கிறார்களோ நமக்குத் தெரியவில்லை. இந்தப் பூசாரியார் அவர் நினைத்ததுபோல, வேண்டிய உருவத்தை ஏற்படுத்திக் கொள்ளட்டும். நமக்குக் கவலையே கிடையாது. ஆனால் இப்பேர்ப்பட்ட பித்அத் வாதிகளால் விக்கிரக வணக்கம் ஊக்குவிக்கப்படுகிறதே என்பதும் இந்த தஜ்ஜால்களைப் பின்பற்றும் பாமரமக்கள் இஸ்லாத்தையே விட்டுவிட்டு வேறுவழியில் செலுத்தப்படுகிறார்களே என்பதும்தான் மனவருத்தம். இதை எந்த ஒரு மூமீனும் முஸ்லிமும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஓர் இந்து நண்பர் கூறினார் எங்களுடைய பெரியார்கள் பல்லாயிரம் வருடங்களுக்குமுன் கூறிய உண்மையை றஊப் இப்போதுதான் கண்டுபிடித்திருக்கிறார் என்று.

இந்த ஹமவோஸ்த் நூலாசிரியர் சில வருடங்களுக்கு முன் தாத்தைப் பார்க்கலாம், தொடலாம், உண்ணலாம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தார். இது விஷயமாய் எமது மாணவர்களுக்கு நான் எழுதிய கடித்தத்தில் இந்த விடயம் நிறையக் குறிப்பிடப்படிருப்பதால் அதை மற்ற மக்களும் அறிந்திருப்பது நல்லது என்பதற்காகத்தான் இந்த நூலின் இறுதியில் அக்கடிதத்தின் ஒருசிறு பகுதியையும் இணைத்துள்ளேன். அதையும் வாசித்து விளங்கி அதன் பின் அவரை, அவரின் அறிவை எடைபோடுங்கள்.

இவ்விஷயத்தில் ஆசிரியர் ஒரு யூகத்தைக் கையாளுகிறார். அதாவது இறைவனுக்கு முருகனை உருவகமாக அமைத்து வணங்கியவன் மஹ்ஸரில் இறைவனை அவன் வணங்கிய உருவத்தில் காண்பான் என்கிறார். எப்படி அவன் காண்பான்? இறைவனுக்கு முருகன் என்ற தோற்றத்தை உருவத்தை ஏற்படுத்திக்கொண்டவன் ஷிர்க்கிலிருந்தும் விடுபட்ட முஸ்லிமாய் மூமீனாகிவிட்டதனால்தான் இறைவனைக் காணுகிறான் என்ற நம்பிக்கொண்டார்போலும். அவன் ஷிர்க்கிலிருந்து விடுபடவே யில்லை. அந்த முருகனே கடவுளென்றும் மற்றவையெல்லாம் கடவுளேயல்ல என்றும் அவன் நம்பியதால்தான் முருகனை அவன் உருப்படுத்திக் கொண்டான். அப்படியல்லாமல் எல்லாம் அவனே என்பதை அவன் அறிந்திருந்திருந்தால் எல்லாவற்றையுமல்லவா வணங்கியிருப்பான். ஆகவே, அவன் ஷிர்க்கிலிருந்து விடுபடாதவனாய் இறைவனைக் குறிப்பிட்ட உருவில் கட்டுப்படுத்திய சுத்தமான காபீராகவே இருக்கிறான்.

நாம் காட்டிய 83:15,16ஆம் ஆயத்தின் அறிவிப்பின்படி அவனால் இறைவனைப் பார்க்க ஒருபோதும் முடியாது என்பது நிச்சயமான உண்மை.

இந்த ஹமவோஸ்த் நூலாசிரியர் தன்னை ஓர் ஏகத்துவவாதி என்கிறார். இவருடைய விளம்பரப்பேச்சாளர் தன்னை ஓரிறைக்கொள்கைவாதி என்கிறார். இன்னொருவர் அறிவை விட்டுவிட்டுத் தன்னிடம் வந்தால் இறைவனைக் காட்டுவேன் என்று கூறிக்கொண்டிருந்தார். அறிவை விட்டவன் இறந்து விடுவான் என்பதை இவர் உணரவில்லை. இவருக்குச் செயல்மூலமாக விளக்கமளித்தான் இறைவன். இவர் காத்தான்குடி மார்க்கெட்டுக்குள் நிற்கும்போது இவர் அறிவை விட்டுவிட்டார். இவர் இப்போது நிலத்தில் அடக்கப்பட்டிருக்கிறார் இவரை இனி உலகில் காணவே முடியாது. இந்த வழிகெட்ட கூட்டம் இவரை ஒரு மாபெரும் மேதை என்றே மக்களிடம் கூற ஆரம்பித்தது. ஆயினும் அந்தப் படுபொய் முளைக்கவே இல்லை. இதுதான் இந்த நூலாசிரியர் கோஷ்டி.



மக்களே !

அபூஜஹ்லுக்கு ஆரம்பத்தில் இருந்த பெயர் அபுல்ஹிகம் (ஞானிகளின் தந்தை) என்பதே. இந்தப் பெயரை றசூல் (ஸல்) அவர்கள் மாற்றித்தான் ''அபூஜஹ்ல்'' மூடர்களின் தந்தை என்று கூறினார்கள். அபூஜஹ்ல் அறபு பாஷையில் ஊறிவளர்ந்தவன். இவன் சீடர்களுக்கு ஒரு இமாம் (வழிகாட்டி) ஆயினும் றசூல் (ஸல்) அவர்களின் ஞானோபதேசங்களை உணர்ந்துகொள்ள அவனால் முடியவேயில்லை. ஆகவே அறபுபாஷையைக் கொண்டுதான் இறைஞானத்தைப் பெறமுடியும் என்பது வெறும் அறியாமையாகும்.

அம்பட்டன் குப்பையைக் கிளறினால் புறப்படுவது மயிர் என்பது போல இப்படிக் குழப்பவாதிகளின் திருகுதாளங்களை வர்ணித்துக்கொண்டிருப்பதில் நமக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. பட்டம் பதவிகளிலே ஏமாறாமல் உண்மையைக் கண்டறிந்து செயல்படுங்கள்.

இதன் சாரம்-

கலிமாவைக் கொண்டு ஈமான் கொள்ளாத எவரும் மஹ்ஸரில் கூடத் தங்களிறைவனைக் காணமுடியாதென்பதே. அந்தக் காபீர்கள், முஷ்ரீக்குகள் கனவில் காணும் காட்சிகள் கூட விருப்பு, வெறுப்புக்களினால் ஏற்படும் காட்சிகளேயன்றி உண்மையான காட்சிகளேயல்ல.

மக்களே!

றசூல் (ஸல்) அவர்களுக்குப்பின் சுமார் 1400 ஆண்டுகள் வரையிலும் முஸ்லீம்கள் பல கோடாகோடிப் பேர் வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் எத்தனையோ "பித்அத்"வாதிகள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களில் எவராவது விக்கிரகம் ஏற்படுத்திக் கொண்டவன் அல்லாஹ்வை அதே உருவில் பார்க்கலாம் என்றோ விக்கிரக வணக்கத்தை அனுமதிக்கலா மென்றோ கூறியதும் எழுதியதும் கிடையாது. இந்த ஹமவோஸ்த் நூலாசிரியரான முர்த்தத் மட்டும்தான் இப்படிக் கூறுகிறார். ஆகவே என்னுடைய அறிவைக் கொண்டு இவர் தஜ்ஜாலேதான் என்று நான் தீர்ப்புக்கட்டுகிறேன். ஆதலால் இந்தத் தஜ்ஜாலை முஸ்லீம் மூமின்களாகிய நீங்கள் மார்க்க விளக்கத்தில் பின்பற்றுதல் கூடாது என்று உங்களை வேண்டிக் கொள்கிறேன். பின்பற்றுவதோ பின்பற்றாமல் விடுவதோ உங்கள் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது.

மார்க்கத்தில் உருவாக்கப்படும் "பித்அத்"துக்களைச் சட்டமேதைகள் "பித்அத் சையிஆ" (கெட்ட புதுமை) என்றும் "பித்அத் ஹஸனா" (நல்ல புதுமை) என்றும் இரண்டாய் வகுத்துக் கூறியுள்ளார்கள். ஹமவோஸ்த் நூலாசிரியரின் "பித்அத்" (புதுமை) "பித்அத்சையிஆ" (கெட்ட புதுமை) யைச் சேர்ந்தது. இதைப்பற்றி றசூல் (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸில் "பித்அத்"காரன் ஒருவன் மரணமடைந்தால் அது இஸ்லாத்துக்குப் புதிய ஒரு வெற்றியாகும் என்று கூறப்படுகிறது.

இன்னொரு ஹதீஸில் கண்ணியப்படுத்தும் நோக்குடன் பித்அத்காரன் ஒருவனை நீங்கள் நாடிச்சென்றால் இஸ்லாத்தைத் தகர்க்கும் வேலைக்கு நீங்கள் உதவி செய்தவர்களாவீர்கள் என்று கூறப்படுகிறது. இன்னொரு ஹதீஸில் ஒரு மனிதன் பித்அத்காரனை வெறுத்துப் புறக்கணித்தால் இறைவன் அவன் உள்ளத்தை அமைதியினாலும் நம்பிக்கையினாலும் நிரப்புவான் என்று கூறப்படுகிறது. இன்னொரு ஹதீஸில்



பித்அத்காரன் நிறைவேற்றுகிற தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்ஜு போன்ற எந்தச் செயலையும் இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். வில்லில் இருந்து வெளியேறிச் செல்லும் அம்பின் வேகத்தில் அவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறான்.

அன்பிக்குரிய முஸ்லிம் பெருமக்களே!

"ஹமவோஸ்த்" நூலாசிரியர் காளி முருகனை வணங்கியோர் அவ்வவ்வுருவிலேயே இறைவனைக் காண்பார்கள் என்றும், அதற்கு ஆதாரமாய் ஸஹீஹுல் புஹாரியிலுள்ள ஒரு ஹதீஸையும் காண்பித்திருக்கிறாரல்லவா? இந்த ஹதீஸ் மட்டுமல்ல இன்னும் பல ஹதீஸ்கள் ஸஹீஹுல் புஹாரியிலும் திர்மிதி, முஸ்லிம், தாவூத் முதலாம் கிரந்தங்களிலும் இடம் பெறுகின்றன. விரிவைப் பயப்படுவதால் ஒரு சில ஹதீஸ்களை மட்டும் இங்கே தருகிறேன்.

ஹதீஸ்

***ஒரு இரவில் நபி (ஸல்) அவர்களுடன் நாங்கள் இருந்து கொண்டிருந்தோம் சந்திரனை அவர்கள் பார்த்து நிச்சயமாக நீங்கள் இந்தச் சந்திரனைப் பார்ப்பது போல் உங்களுடைய இறைவனை (றப்பை) நீங்கள் காண்பீர்கள். அதனைப் பார்ப்பதில் நீங்கள் சந்தேகப்பட மாட்டீர்கள். சூரியன் உதயமாவதற்கு முன்னரும் அது அஸ்தமிப்பதற்கு முன்னரும் தொழுவதற்கு நீங்கள் மிகைப்படாமலிருக்க உங்களால் முடியுமாயின் நீங்கள் (அதனைச்) செய்யுங்கள் என்று கூறிவிட்டு "பஸப்பிஹ் பிஹம்தி றப்பிக கப்லது வ இஸ்ஸம்ஸி வகப்லல்குறூப்" என்று ஓதினார்கள்.***

அறிவிப்பாளர் : ஜரீர் (றலி)

ஆதாரம் : புகாரி

ஹதீஸ்

***யாறசூலல்லாஹ் கியாமத் நாளில் எங்கள் றப்பை நாங்கள் பார்ப்போமா? என்று ஜனங்கள் (அவர்கள் முன்னிலையிலிருந்தோர்) கேட்டார்கள். பௌர்ணமி இரவில் சந்திரனை அதற்கடியில் மேகமில்லாதிருக்கையில், பார்ப்பதில் நீங்கள் சந்தேகம் கொள்வீர்களா? என்று வினவினார்கள்.***

***மக்கள் இல்லை யாறசூலல்லாஹ் என்றார்கள். பின்னர் சூரியனை அதற்கடியில் மேகமில்லாதிருக்கையில்(அதனை) பார்ப்பதில் சந்தேகம் கொள்வீர்களா? என்று வினவினார்கள். மக்கள் இல்லை யாற சூலல்லாஹ் என்றார்கள். அதுபோலவே நீங்கள் அவனை(றப்பை) நிச்சயமாக காண்பீர்கள். கியாமத்து நாளில் ஜனங்கள் எழுப்பப்பட்டு யார் யார் எதையெதை வணங்கினார்களோ அதனதனுடன் அவர்கள் சேர்ந்து கொள்ளட்டும் என்று இறைவன் கூறுவான். அவர்களிற் சிலர் சூரியனுடன் சேர்வார்கள். இன்னும் சிலர் சந்திரனுடன் சேர்வார்கள். இன்னும் சிலர் ஷைத்தான்களுடன் சேர்வார்கள். எவர் எவர் எதையெதை வணங்கினார்களோ அவைகளுடன் அவர்கள் சேர்வார்கள். இவர்கள் அவரவர் வணங்கியவையுடன் தனித்தனிக் கூட்டமாய்ப் பிரிவார்கள். இந்த உம்மத்து எஞ்சியிருக்கும். இவர்களில் முனாபீக்குகளும் இருப்பார்கள். அப்பொழுது இறைவன் அவர்களிடம் வந்து நான் உங்கள் றப்பு என்று கூறுவான் அப்பொழுது அவர்கள் 'இல்லை எங்கள் றப்பு நீயல்ல. இது எங்களின் ஸ்தலம் எங்களுடைய றப்பு எங்களிடம் வரும்போது அவனை நாங்கள் அறிந்து கொள்வோம்' என்று கூறுவார்கள். அப்போது(அவர்கள் அறிந்து கொள்ளக் கூடிய முறையில்) வந்து நான் உங்கள் றப்பு என்றுரைப்பான். அப்போது நீ எங்கள் றப்புத்தான் என்று கூறுவார்கள் அவர்களை அவன் அழைத்துக் கொள்வான்(இப்படியொரு நீண்ட ஹதீஸ் தென்படுகிறது)***

அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி)
அதாரம் : புஹாரி

இவைபோல் இன்னும் பல ஹதீஸ்களைத் தர முடியும். இந்த ஹதீஸ்களைத் தெளிந்த மனத்தோடு நோக்குங்கள். எவன் எவன் எதையெதை வணங்கினானோ அதைக்கொண்டே அவன் மஹ்ஸறில் இறைவனைக் காண முடியாமல் திரையிடப்படுகிறான். இவ்விஷயத்தைப் புரிந்து கொள்ளாத அமாவாசை ஆலிமு அவனவன் வணங்கிய தோற்றத்திலேயே இறைவனைக் காண்பான் என்று நம்பிவிட்டார். ஐயோ! பாவம். இந்த ஹதீஸ்கள் யார் முன்னிலையில் எடுத்தோதப்பட்டன என்பதை நோக்குங்கள். ஸஹாபாக்களான மூமீன்கள் முஸ்லீம்கள் முன்னிலையில்தான் கூறப்பட்டன. ஆகவே ஹதீஸ் கிரந்தங்களில் தென்படுகிற இது



சம்பந்தமான எந்த ஒரு ஹதீஸும் குர்ஆனுடைய ஆயத்துக்கு மாற்றமானதேயல்ல.

குர்ஆன் 83:15
*நிச்சயமாகக் காபீர்கள் மறுமையில் இறைவனைக் காண முடியாமல் திரைபோடப்படுவார்கள்.* இப்போதாவது அமாவாசை ஆலிமு கொஞ்சம் சிந்தனை செய்யட்டும்.

6ஆவது கேள்வி
"ஹமவோஸ்த்" நூலின் 82ஆவது பக்கம் ஹிறாக் குகையில் ஜிப்ரீல் (அலை) வஹி கொண்டுவந்த போது நெற்றியில் கையை வைத்த வண்ணம் படுத்துக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்களில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறைவனைக் கண்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் உண்மைதான் என்ன?

பதில்
அப்படியானால், அர்ஷில் இருக்கிற இறைவனுக்குத் தூக்கம் மிகைத்தபோது ஐயோ! பாவம் ஹிறாக்குகைக்குள் வந்து நபியில் புகுந்து உறங்கியிருந்தால் அவனை நாம் இறைவன் என்று எப்படிக் கூறுவது. நபியில் இறைவனைக் கண்ட ஜிப்ரீலும் ஹுலுல் இத்திஹாதில் இருந்தார் என்றல்லவா தெரிகிறது. இதுதானா மெய்ஞ்ஞானம்?

ஒன்றை மட்டும் சுருக்கமாகக் கூறுகிறேன். நல்லடியார்களின் பேச்சை எழுத்தை விளங்கிக்கொள்ள முடியாத முட்டாள்களின் பேச்சு இது. இதை உதறித் தள்ளிவிடுங்கள். ஏனென்றால் நான் இப்படிக் கண்டேன் என்று ஜிப்ரீல் (அலை) மனிதர்கள் யாரிடமாவது அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்று நிரூபிக்கமுடியுமா? சரி அந்த நபி (ஸல்) அவர்களாவது ஜிப்ரீல் (அலை) அவர்கள், என்னில் ஏறிப்படுத்துக் கொண்டிருந்த இறைவனைக் கண்டார்கள் என்று எங்கேயாவது கூறியிருக்கிறார்களா? இது வழிகெட்ட முர்த்தத்துக்களின் தஜ்ஜால்களின் வாதமல்லவா?

சகோதரர்களே!
லாஹிறுருடைய உலமாக்களும் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட சாதாரண மக்களும் "தன்ஸீஹ்" என்ற அடிப்படையிலேயே ஊறியுள்ளவர்கள். றசூல் (ஸல்) அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஷஹாபாக்களைத் தவிர மற்றும் ஷஹாபாக்களும் தன்ஸீஹ் என்ற அடிப்படையில்தான் "ஷரீயத்" விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஒருசில ஷஹாபாக்களுக்கு மட்டும்தான் தன்ஸீஹுடைய, தஷ்பீஹுடைய விளக்கமும் கூறியுள்ளார்கள். அந்த "அஸ்ஹாபுல்யமீன்" என்ற ஸஹாபாக்கள் அவசியமான மக்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய ஒருசில மக்களுக்கேயன்றி தஸ்பீஹின் விளக்கத்தைக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

ஆகவே பின்வந்த இமாம்கள் எல்லோரும் "ஷரீயத்" துடைய விளக்கத்தைத் "தன்ஸீஹ்" என்ற அடிப்படையில்தான் விபரித்துள்ளார்கள், இன்று நம்மிடையேயுள்ள பெரும்பாலான கிதாபுகள் இவ்வினமானவைதான். அதாவது இறைவனைப்பற்றிக் கூறும்போது கண்ணின்றிப் பார்ப்பவன், காதின்றிக் கேட்பவன், நாவின்றிப் பேசுபவன், உருவமில்லாதவன் என்பன போன்ற விபரங்களையே தந்திருக்கிறார்கள். இது நியாயமான ஒரு விபரம்தான். ஏனென்றால், சிந்தனை குறைந்த ஆராயும் ஆற்றலில்லாத மக்களிடையே பக்திவிசுவாசத்தை ஊட்டி அவர்களை மனிதர்களாக வாழச்செய்து வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்பதுதான் நோக்கம். ஷரீயத்துடைய விஷயத்தில் றசூல் (ஸல்) அவர்களுடைய முழு நோக்கமும் இதுதான்.

ஆகவே, இவ்விதமான லாஹிறுருடைய உலமாக்கள் குர்ஆன் ஹதீஸ்களில் தன்ஸீஹுக்கு முரணான பதப்பிரயோகங்கள் வரும்போது இலக்கிய வழக்கைக் கையாண்டு தன்ஸீஹுக்கு விரோதமில்லாத முறையிலேயே பொருள் கொள்கிறார்கள். பாமரமக்களுக்கும் விளக்குகிறார்கள். உதாரணமாக இறைவனுடைய முகம், கை, வானத்திலிருந்து குர்ஆன் இறங்கியது, அல்லாஹ் தஹஜ்ஜத்துடைய வேளையில் முதலாம் வானத்துக்கு



வருகிறான் என்பவை போன்ற விஷயங்களில் சிற்சில இடங்களில் சிக்கிக்கொள்கிறார்கள். இவ்வின மக்களுக்கு அப்து, றப்பு, வுஜுது, மவ்ஜுது போன்ற சொற்களுக்கும் தன்ஸீஹ் என்ற கொள்கைக்கும் அகராதி அர்த்தம் தெரியுமேயன்றி அவற்றின் உண்மையான அகமிய அர்த்தங்கள் அவர்களுக்குத் தெரியாது. ஆகவே அகராதி அர்த்தத்துக்கு முரணாண விபரம் தரப்படும்போது நிச்சயமாகக் காபீர் என்றும் முர்த்தத் என்றும்தான் கூறுவார்கள். இவ்வின மக்கள் பகுத்தறிவு தொழிற்படாதவர்கள்.

குர்ஆன் ஹதீஸுகளை, அவற்றின் வெளி வியாக்கியானங்களைப் பாடமிட்டுக்கொண்ட இந்த மக்களை நாம் தவறாய் எடைபோட்டுக் கொண்டு அவர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தை திடீரென விளக்கமுடியாது. இவர்களுக்கு அப்படியான அகமிய விளக்கங்களைப் புகுத்த வேண்டும் என்று நினைப்பவர் மூடராகவே இருப்பார். ஏனென்றால், எல்லா மக்களுமே அவ்விதமான அகமியங்களை அறிய ஆற்றல் பெறமாட்டார்கள். அப்படி ஆற்றல் உடையவர்களாய் இருப்பவர்கள்கூடச் சரியான அணுகுமுறைப்படி விளங்கினாலேயன்றி விஷயம் சித்திக்காது.

ஆகவே, காமில்களான பெரியார்கள் எவரும் மேடையிலேறி அல்லாஹ்வுக்குக் கையும் காலுமுண்டு, அல்லாஹ்வுக்கு கையும் உடையும், தலையும் உடையும் என்றெல்லாம் உளறியது கிடையாது. ஹிறாக்குகையில் இறைவன் தலையில் கைவைத்துப் படுத்துக்கொண்டிருந்தான் என்று கூறியதும் கிடையாது. அறபு பாஷையைக் கொண்டேயல்லாமல் மற்றெந்தப் பாஷையைக் கொண்டும் அவ்லியா ஆகமுடியாதென்று கூறியதும் கிடையாது.

இந்தப் பெரியார்கள் குர்ஆன் ஹதீஸ் போன்ற உறுதியான ஆதாரங்களைக் கொண்டேயன்றி குணங்குடி மஸ்தான் சாஹிப் அவர்களின் பாடல்களைக் கொண்டோ பீர்சாய்பு அவர்களின் பாடல்களைக் கொண்டோ தௌஹீதை நிரூபிக்க முற்படவேயில்ல. குர்ஆனில் நீர் கவிஞருமல்ல, உமக்கு அது தகுதியானதுமல்ல

என்றும், கவிஞர்களைப் பின்பற்றுபவர்கள் வழிகெட்டவர்கள்தான் என்றும் இறைவன் கூறுகிறான். தௌஹீதை நிரூபிக்க உறுதியான ஆதாரங்கள் இருக்கும்போது ஹுலூல் இத்திஹாது கலந்த பாடல்கள் எதற்கு?

குர்ஆன் ஹதீஸுகளில் சிற்சில இடங்களில் பாவிக்கப்படுகிற சிற்சில வசனங்கள் "தன்ஸீஹ்" என்ற நிலைமைக்கு மாற்றமானவைபோல் தென்படுகின்றன. உண்மையில் அவை அப்படி மாற்றமானவையல்ல. இவ்வித பதப்பிரயோகங்களை அறபு மொழியில் "இஸ்திஆரா" என்று கூறப்படும். இதற்கு இரவல் வாங்குவது என்பது பொருள். உதாரணமாக, கொழும்பு நகரம் ஒருவருடைய கையில் இருக்கிறது என்று கூறும்போது அவருடைய கையில் அவர் கொழும்பு நகரைத் தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறார் என்பது பொருளல்ல. அவர் இரு கைகளை இழந்தவராய் இருந்தாலும் கூட அவர் கையில் இருக்கிறது என்று கூறும்போது அவர் ஆட்சியின்கீழ் இருக்கிறதென்றே நாம் பொருள் கொள்ளவேண்டும். இவ்வசனத்தில் தஸ்பீஹும் உண்டு என்பதை அறிய மிக நுண்ணறிவு வேண்டும்.

இதைப்போலவே ஒரு ஹாலில் உள்ள ஓர் ஆரிபு அல்லாஹ்வையன்றி நான் காணவில்லையென்னும் போது அவர் கண்டுகொண்டிருக்கிற நாய், பன்றி, மலஜலம் எல்லாமே அல்லாஹ்தான் என்று அவர் கூறுவதாக நாம் பொருள்கொள்ள முடியாது. ஆரிபு நாய், பன்றி முதலாம் சகல வஸ்த்துக்களும் வெறும் நாமங்களேயன்றிப் பொருளில்லை என்பதை முற்றாய் உணர்ந்தவராய் இருப்பதால் வுஜூதை, அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லையென்ற பொருளில், வுஜூதை மட்டும் நிலைப்படுத்தும் நோக்கமாகவே அப்படிக் கூறுகிறார்.

இதை விளங்கிக் கொள்ளாத அமாவாசை ஆலிம் பாமரமக்களிடையே தொட்டுப்பார்ப்பதும் உண்டுபார்ப்பதும் தாத்தைத்தான் என்று கூறினால் பாமரமக்களின் நிலைமை என்னாகும்?



றப்பு என்ற நாமத்தின் தஜல்லிக்கும் அல்லாஹ் என்ற நாமத்தின் தஜல்லிக்கும் மற்றும் ஒவ்வொரு நாமத்தின் தஜல்லிக்குமிடையிலுள்ள வேறுபாடு என்ன? என்பதை அனுபவ வாயிலாய் அறியாத அறிவிலிகள் தௌஹீதின் உண்மையை மக்களுக்கு எப்படி உணர்த்துவார்கள்? இவர்கள் உணரமுடியாமையால்தான் மேடைகளில் கூட அல்லாஹ்வுக்கு கையும் உடையும், காலும் உடையும் என்று உளறுகிறார்கள். மீனை வாங்கிக்கொண்டு வரும்போது அல்லாஹ்வையே வாங்கிக்கொண்டு வருகிறேன் என்கிறார்கள். இஸ்லாம் எப்படி எங்கே போய்கொண்டிருக்கிறது என்பதை நோக்கிப் பாருங்கள். இவ்வித அமாவாசை ஆலிமைத் தஜ்ஜால் என்று கூறுவதில் என்ன தவறு? ஆகவே அகராதி அர்த்தத்தை மட்டும் வைத்துக்கொண்டு குர்ஆன் ஹதீஸுகளுக்குப் பொருள் கூறுவது எல்லா இடங்களுக்கும் சரியானதல்ல. பேச்சை, எழுத்தை, நோக்கும் மக்களின் அறிவுக்கேற்றபடி பேசாவிட்டால் எழுதாவிட்டால் அந்த மக்கள் இருளில் தள்ளப்படுகிறார்கள் என்பதே அர்த்தம்.

மார்க்கம் என்பது எல்லோராலும் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்றுதான். மனிதன் அதைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்றோ மனிதனுக்கு அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லையென்றோ யாரும் சொல்லமுடியாது. ஆனால் மார்க்கத்திலுள்ள எல்லாவற்றையும் எல்லா மனிதர்களும் புரிந்துகொள்ள முடியாது என்பதை வழிகாட்டிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளுக்கு முற்றும் மாறுபோல் தென்படுகின்ற விஷயங்களில் சிக்கிக் கொள்ளக்கூடிய மக்கள் வீண்வாதங்களில் ஈடுபட்டுத் தங்களுக்குத்தாமே இம்மையிலும் மறுமையிலும் அழிவைத் தேடிக்கொள்வார்கள் என்பதை அமாவாசை ஆலிம் இதுவரை உணர்ந்துகொள்ளாதது ஆச்சரியம்தான்.

இஸ்லாத்தின் மூலக் கொள்கைக்கு மாறுபோல் தென்படுகிற அநேக விஷயங்கள் குர்ஆன் ஹதிஸுகளில் தென்படுகின்ற இவற்றில் சிலவற்றை விளக்கிக்கூறும்போது பாமர மக்களும் புரிந்துகொள்ளக்கூடும். வேறு சில விஷயங்கள் பாமரமக்களால் மட்டுமல்ல, ஒரு சில அறிவாளர்களாலும் கூட விளங்கிக்கொள்ள முடியாததவையாகும். இப்படிப்பட்ட சில விஷயங்கள் ஞானமேதைகளான மகான்களின் தனிப்பட்ட சொத்துக்கள். றப்பைக் காண்பது, அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு, என்பவையெல்லாம் இவ்வினத்தைச் சேர்ந்தவை. இவற்றை உரியமக்களுக்கேயன்றி எவருக்கும் விளக்கம் தர முடியாது. அதேபோல அவற்றிற்குரிய அனுபவ அறிவுள்ள மக்களேயன்றி அமாவாசை ஆலிம்களால் விளக்கவும் முடியாது. கடலோரத்தில் நீந்தக் கற்றுக்கொண்டிருக்கிற ஒருவர் நடுக்கடலில் மூழ்கி முத்துக்களை எடுத்துக்கொண்டு வருவாரென்றும் நமக்கும் தருவாரென்றும் எப்படிக் கூற முடியும்?

ஞான மார்க்கத்தில் பேராற்றல் படைத்த ஒரு மேதை ஓர் இளம் வாலிபனின் கேள்விக்குப் பதில்கூற யோசிக்கிறார். வாலிபன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

கேள்வி என்ன தெரியுமா? எங்கள் வீட்டில் எல்லோரும் இறைவனை வணங்குகிறார்கள். அவர்களைப்போல் நானும் வணங்க ஆசைப்பட்டேன். என் வீட்டவர்களை நோக்கி இறைவன் எங்கே இருக்கிறான் என்று கேட்டேன் அவன் வானத்தின் மேல் அர்ஷில் இருக்கிறான் என்று விடை கிடைத்தது. அவன் வானத்தில் இருந்தால் நாமும் வானத்தை நோக்கித்தானே ஸுஜுது செய்யவேண்டும். ஆனால் எல்லோரும் தலையை நிலத்தில் வைத்துத்தானே ஸுஜுது செய்கிறார்கள். இதன் காரணம் என்ன?

யாருக்கு எதை எப்படிச் சொல்லவேண்டும் என்பதை அனுபவவாயிலாய் அறிந்திருந்த அந்த மேதை என்ன கூறினார் தெரியுமா?



ஆமாம், இறைவன் வானத்தில்தான் இருக்கிறான். ஆனால் அவனுடைய கால்கள் மண்ணில் இருக்கின்றன, அவை எல்லா இடங்களிலும் நிரம்பி இருக்கின்றன. ஆயினும் நம் கண்களால் அக்கால்களைக் காணமுடியாது. நாம் தலையை நிலத்தில் வைக்கும்போது அவனுடைய கால்களில்தான் வைக்கிறோம். இதுதான் மேதையின் பதில். வாலிபன் திருப்தியடைந்தான். வாலிபனுக்கு இப்போது அவசியமானது தொழுகைதான். ஞானமார்க்கமல்ல.

இவ்விதமான வழிவகைகளைச் சிந்தனைசெய்து தெளிவுபெறாமல் எல்லா மக்களும் ஒரே வகுப்பார்தான் என்று எடைபோட்டுக்கொண்டு தௌஹீதைத் தன் கருத்துக்கேற்றபடி உளறிக்கொண்டிருப்பது வழிகேடேயன்றி வேறு என்ன? ஆகையால்தான் இவ்வித வழிகாட்டிகளை "ளால்லுன் முளில்லுன்முப்தினுன்" - வழிகெட்டவன், வழிகெடுக்கிறவன், விஷமம் செய்கிறவன் என்று நிச்சயமாகக் கூறமுடியும்.

குர் ஆன் 2:217
*விஷமம் கொலையைவிட மிகக் கொடியது.*

7ஆவது கேள்வி
ஹமவோஸ்த் என்ற நூலின் 63ஆவது பக்கத்தில் முஹம்மதுவாக வந்தவன் அல்லாஹ்தான் என்று கூறப்பட்டுள்ளது. இது உண்மையா?

பதில்
அப்படி முஹம்மதுவாக வந்தவன் அல்லாஹ்தான் என்றால் மற்றும் சிருஷ்டிகளாகவும் அல்லாஹ்வே வெளியாகியுள்ளான் என்று நூலாசிரியர் கூறுவது தவறாகுமல்லவா? அதாவது முஹம்மதாக வந்தவன் அல்லாஹ்தான் என்றால் மற்றும் சிருஷ்டிகள் அல்லாஹ் அல்ல என்றாகும். குர்ஆனுடைய 8:24ஆவது ஆயத்தில் *விசுவாசிகளே! உங்களுக்குப் புத்துயிர் அளிப்பதன்பால்*

*அவர் உங்களை அழைத்தால் அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் பதில் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மனிதனையும் அவனுடைய இருதயத்தையும் சூழ்ந்து நிற்கிறான் என்பதையும், நிச்சயமாக நீங்கள் அவனிடமே ஒன்று சேர்க்கப்படுவீர்கள் என்பதையும், உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்* என்றுதான் இறைவன் கூறுகிறான். இதில் முஹம்மது என்று கூறப்படாமல் றசூல் (ஸல்) என்றுதான் கூறுகிறான். முஹம்மது என்பதுவும் றசூல் (ஸல்) என்பதுவும் வெளிநோக்கில் ஒன்றுபோல் தென்பட்டாலும் விஷயம் வேறாய் இருக்கிறது. முஹம்மது என்பதும் மற்றும் சிருஷ்டிகளைப்போல் உள்ள ஒரு சடம்தான். ஆனால், றிஸாலத் என்பது வேறு. இது இறைவனுடைய அறிவைச் சேர்ந்தது.

இந்த முஹம்மது என்ற உடலுக்கு நம்மைப்போல் மலஜலம் எல்லாமே உண்டு. ஆனால், றசூலுக்கு மலஜலம் நிழல் எதுவுமே இல்லை. இவ்விரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை விளக்குவதானால் மிக நீளமாய் எழுத வேண்டிவரும்.

குர்ஆன் 56:85
*ஆயினும் நாம் அவனுக்கு உங்களைவிட நெருங்கியிருக்கிறோம். எனினும் நீங்கள் நம்மைப் பார்ப்பதில்லை* என்றுதான் இறைவன் கூறுகிறான். நம்மைப் பார்ப்பதில்லையென்று இறைவன் சுட்டிக்காட்டுகிறானே அது எதை? வுஜூதையா? வுஜூதை என்று கூறினால் அடியான் என்பது வுஜூதின் நாமமும் ஸிபத்துமே என்பதும் அவ்விரண்டுடன் வுஜூதும் மறைந்திருக்கிறது என்பதும் புலனாகும், ஆகையால்தான் நம்மை நீங்கள் பார்ப்பதில்லையென்று கூறுகிறான். அப்படியில்லாமல் அந்த அடியானும் வுஜூதோன் என்றால் வுஜூது இரண்டு என்றாகும். ஏனென்றால் அடியான் என்னும் வுஜூதோடு நெருங்கியிருக்க இன்னொரு வுஜூது தேவையாகும். இது ஞானமுமல்ல, உண்மையுமல்ல.



அடியான் என்பது அல்லாஹ்வின் இலாஹியான ஒரு திருநாமத்தின் ஸூறத்தாகும். இதைத்தான் நாம் பார்க்கிறோம். இந்த ஸூறத் உருவாகத் துணைக் காரணமாயிருந்தது ஸிபத்தாகும். இந்த விஷயத்திற்கு மூலகாரணமாய் இருப்பது வுஜூதாகும். ஆகவே, நெருங்கியிருக்கிறான் என்பது அஸ்மா என்னும் அடியானுடன் மறைந்துள்ள ஸிபத்தையும் வுஜூதையும் குறிப்பிட்டதாகும். ஆகவே, அஸ்மாவான அடியானைப் பார்ப்பதும் அவ்வஸ்மாவுடனுள்ள ஸிபத்தை அறிவதும் அவற்றிற்கு மூலாதாரமான வுஜூதைப் பார்க்க அறியமுடியாதென்பதும் பிரத்தியட்சமான உண்மை.

வுஜூது எவ்வித மாறுபாடுமின்றி இருந்தபடியேயிருக்கச் ஸிபத்தைக் கொண்டு அஸ்மா வெளியாகி சிருஷ்டி என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. ஆகவே, வெளியானதெல்லாம் அஸ்மாக்களேதான். அஸ்மா பொருளாய்த் தென்படுவது எமது புலனுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையாகும். புலனாட்சியற்ற போது வுஜூதையன்றி எதுவுமே இராது. இந்த அஸ்மாவும், ஸிபத்தும், வுஜூதும் ஒன்றைவிட்டு ஒன்று வேறானதுமல்ல, பிரிக்கக்கூடியதுமல்ல. ஆகவே எப்பொருளை நாம் பார்க்கும்போதும், அத்துடன் ஸிபத்தும் வுஜூதும் ஒன்றாய்த்தான் இருக்கிறது. அஸ்மாவைப் பார்க்கிறோம், ஸிபத்தை அறிகிறோம், வுஜூதைப் பார்ப்பதுமில்லை அறிவதுமில்லை.

விஷயம் அப்படியிருக்க, அல்லாஹ்தான் முஹம்மதுவாக வந்தான் என்றால் மற்றதெல்லாம் அல்லாஹ் அல்ல என்றாகும். மேலும், இக்கருத்து இந்துக்கள் கூறுவதுபோல் ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், முஹம்மது அவதாரம் என்றாகும். இது இஸ்லாத்தின் மூலக்கொள்கைக்கு நேர்மாறான ஒரு பித்அத்தாகும். இப்போது ஒரு பைத்தை நோக்குங்கள்

"தூதனுப்பியவன் வேறின்றித் தங்கள் தூதுவேலைக்காக றசூலுல்லாஹ் வந்தார்களென்றறி. அனுப்பியவனும் தானாய்

அனுப்பப்பட்ட றசூலும் தானாய் (கல்காகிய) தன்னிடத்திற்கே றசூலுல்லாஹ் எழுந்தருளினார்கள் என்றறி.''

இந்த பைத்து எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற முதலாம் பதிப்பு நூலில் 338ஆவது பக்கத்தில் இடம் பெறுகிறது.

அந்த பைத்தில் கூறப்பட்டுள்ளதுதான் வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கை. இதைத்தவிர முஹம்மதுவாக வந்தவன் அல்லாஹ்தான் என்பது இந்துக்களின் அவதாரம் போன்ற பித்அத்தான கொள்கையாகும். ஹமவோஸ்த் நூலாசிரியர் ஞான ஒளியின் ஓர் அணுவைக்கூட அனுபவிக்கவில்லையென்பதும் ஓர் உளநோயாளியென்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. அல்லாஹ் என்ற நாமத்தை எந்த ஒரு சிருஷ்டியின்பேரில் நடாத்துவதும் ஷிர்க்கு ஆகும்.

ஏதோ நல்லடியார்களின் கிதாபுகளை வாசித்திருக்கலாம். பாடமிட்டிருக்கலாம். ஆனால், அவற்றில் உட்பொருளையுணராமல் உளறுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

''தத்துவ விசாரணையில் கைதேர்ந்த தௌஹீது வாதியான பக்கா மனிதர்களுடைய வார்த்தைகளை அவ்விசாரணையில்லாத துவித சித்தாந்தி (ஓரிறைக்கொள்கை வாதி) கச்சா மனிதன் உணர்ந்து கொள்ளமாட்டான். ஆகவே பேச்சைச் சுருக்குவது அவசியம் என்று மௌலானா றூமி அவர்கள் மஸ்னவியில் கூறுகிறார்கள்.

றசூல் (ஸல்) அவர்கள் ஒருபோது நான் மீம் அல்லாத அஹ்மதுவாய் இருக்கிறேன் என்று கூறியுள்ளார்கள். அதாவது, நான் அஹதாய் இருக்கிறேன் என்பது பொருள். இது முஹம்மது என்ற திரையிலிருந்து இறைவன் கூறிய கூற்றேயன்றி முஹம்மது என்ற மனிதர் கூறியதாய்க் கொள்வது சுத்தப்பிசகாகும்.



முஹம்மதுற்றசூலுல்லாஹ் என்பதும் இதேபோலத்தான். நுட்பமாய் உணர்பவர்களுக்கு இவ்வளவே போதும்.

8ஆவது கேள்வி

ஹமவோஸ்த் என்ற நூலின் 99ஆவது பக்கத்தில் கலிமாவிலுள்ள ''இலாஹு''என்ற சொல்லுக்கு தெய்வம், நாயன் என்ற பொருள் கூறப்பட்டிருக்கிறதே! அது சரியா? மேலும் அல்லாஹ் தவிர நாயன் இல்லையென்றாலும் தெய்வமில்லையென்றாலும் ஒன்றுதான் என்று கூறப்பட்டிருக்கிறதே அதன் உண்மைதான் என்ன?

பதில்

கலிமாவின் சரியான விபரங்களையும் கலிமாவில் உள்ள இலாஹு என்ற சொல் எந்தக் கருத்தோடு நபிமாரால் பாவிக்கப்பட்டது என்பதையும் எமது ''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் ஓரளவு விளக்கியுள்ளேன். சாதாரண மக்களுக்கு அவ்வளவே போதுமானது. ஆயினும் அந்த நூலில் விபரிக்கப்படாத சில அம்சங்களை இங்கே விளக்கிவைக்கிறேன்.

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற தௌஹீதுக்கலிமா ஷிர்க் அல்லது இணை ஏற்படுத்தல் என்னும் தவறான கொள்கையை மறுத்து உண்மையை வெளிப்படுத்துவதற்காகவே இறைவனால் நபிமார்கள் மூலம் அறிவிக்கப்பட்டது என்பதில் எவருக்குமே ஆட்சேபனையில்லை. ஆனால், இந்தக் கலிமாவால் உணர்த்தப்படும் தௌஹீது எனும் உண்மையில்தான் உலமாக்களிடையே அபிப்பிராயபேதங்கள் உண்டு. இவை நாலுவகையானவை. இவற்றில் இப்போது அவசியமான ஒருவகையை மட்டும் இங்கு கூறுவோம். மற்ற விபரங்களை விளக்க இந்த நூல் இடந்தராது. இந்த ஒருவகையை ''உலூஹியத்''தில் ஒருமைப்படுத்தல் என்று கூறப்படும். ஹமவோஸ்த் நூலாசிரியருடைய தௌஹீதும் இந்த ஒருமைப்படுத்தலேயாகும்.

அதாவது, இதன் விபரம் என்னவென்றால் அல்லாஹ்வுடைய நாயகத்தன்மையை அல்லது தெய்வீகத்தன்மையை அல்லது இறைமைத்தன்மையை ஒருமைப்படுத்தல் என்பதே இதன் சாரம். இதைத்தான் உலூஹியத்தில் ஒருமைப்படுத்தல் என்று ஒருசாரார் கூறுகிறார்கள். இன்னும் விபரமாய்க் கூறினால் ஒரே தெய்வத்தை ஏற்றுக்கொண்டால் அல்லது ஒரே நாயனை ஏற்றுக்கொண்டால் அல்லது ஒரே இறைவனை ஏற்றுக்கொண்டால் அதுதான் தௌஹீது அல்லது ஒருமைப்படுத்தல் என்கிறார்கள். ஒரே இறைக்கொள்கை என்பதும் ஒரே நாயன் கொள்கை என்பதும் ஒரே தெய்வக்கொள்கை என்பதும் இதுதான்.

இந்தக் கொள்கையைத்தான் கலிமாவினால் வலியுறுத்தப்பட்டதா? இது சரியான கொள்கையா? பிழையான கொள்கையா? என்பதை எமது இமாமும் நீதிபதியுமான குர்ஆனைக் கொண்டே நோக்குவோம்.

தௌஹீது என்பதற்கு நேர்மாறான ஷிர்க் (இணை ஏற்படுத்துதல்) என்பது இந்தக் கொள்கையை நோக்கும்போது ஒரே தெய்வத்தை ஏற்றுக்கொண்டவன் தௌஹீதுவாதியென்றால், ஒரே தெய்வத்தை ஏற்றுக் கொள்ளாதவன் முஷ்ரீக் (ஷிர்க்குடையவன், இணைவைப்பவன்) ஆக இருக்க வேண்டும். தௌஹீதுக்கு நேர்முரணானதுதானே ஷிர்க் என்பது. சாதாரண மக்களாகிய நீங்கள் இன்னும் நுட்பமாய் நோக்குங்கள்.

ஒரே தெய்வத்தை ஏற்றவன் - மூமீன்
ஒரே தெய்வத்தை ஏற்காதவன் - முஷ்ரிக்
ஒரே நாயனை ஏற்றவன் - மூமீன்
ஒரே நாயனை ஏற்காதவன் - முஷ்ரிக்
ஒரே இறைவனை ஏற்றவன் - மூமீன்
ஒரே இறைவனை ஏற்காதவன் - முஷ்ரிக்

இதுதான் இக்கூட்டத்தாரின் கொள்கை விளக்கம். ஹமவோஸ்த் ஆசிரியரின் கொள்கையும் இதுதான்.



## *இப்போது குர்ஆனை நோக்குவோம்*

*குர்ஆன் 23:86*
*“ஏழு வானங்களைப் படைத்தவனும் கனம் தங்கிய அர்ஷைப் படைத்தவனுமாகிய இறைவன் யார்? என்று அந்த முஷ்ரிக்கீன்களைக் கேளும். அல்லாஹ்தான் என்று கூறுவார்கள்.*

குர்ஆன் 43-9
*வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீராயின் மிகைத்தோனும் (அஸீஸ்) ஞானமுடையோனும் ஆகிய (அலீம்) அல்லாஹ்தான் என்று நிச்சயமாக கூறுவார்கள்.*

குர்ஆன் 29-61
*வானங்களையும் பூமியையும் படைத்து, சந்திரனையும் சூரியனையும் (தன் திட்டப்படி) அடக்கி ஆள்பவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீராயின் அல்லாஹ்தான் என்று நிச்சயமாகக் கூறுவார்கள். அவ்வாறாயின் அவர்கள் எங்கு வெருண்டோடுகின்றனர்.*

குர்அன் 29:63
*மேகத்திலிருந்து மழையை வருசிக்கச் செய்து அதனைக்கொண்டு இறந்த பூமியை உயிர்ப்பிப்பவன் யார்? என்று அவர்களை நீர் கேட்பீராயின் அல்லாஹ்தான் என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள். அதற்கு நீர் புகழடங்கலும் அல்லாஹ்வுக்கே என்று கூறுவீராக. எனினும் அவர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை*

இந்த ஆயத்துக்களைச் சிந்தித்துப் பாருங்கள். அறபு நாட்டு உம்மிகளான மக்களை நோக்கித்தான் றசூல் (ஸல்) அவர்கள் வாயிலாக இந்த ஆயத்துக்களை இறைவன் அருளினான். அந்த

அறுபுமக்கள் படைத்தல், அழித்தல், காத்தல் முதலாம் சகல வல்லமைகளையும் கொண்ட அல்லாஹ் ஒருவன் உண்டு என்பதை அறிந்தே இருந்தார்கள். இதை 43:9ஆவது ஆயத்தும் “அஸீஸ்” என்ற சொல்லைக் கொண்டு நமக்கு விளக்கம் தருகிறது. இச்சொல்லை விளக்கித்தர இந்நூல் இடம்தராது. மேலும், சர்வத்தையும் அறிந்தவன் (அலீம்) என்றும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இந்தச் சொல்லை விளக்கவும் இந்த நூல் இடம்தராது. அப்படி விளக்கினாலும்கூடத் தத்துவ ஆராய்வில்லாத மக்களால் புரிந்துகொள்ளவும் முடியாம லிருக்கும். இதன்சாரம் என்னவென்றால், “அஸீஸ்” ஒன்றுக்கும் நிகர் பெறாதவன் என்பது இந்தச் சொல்லின் ஓர் கருத்து. இது “லைஸக்கமித்லிஹிஷையுன்” என்ற ஆயத்தின் கருத்தையே விபரம் தருகிறது. அதாவது அவனைப் போன்றது இல்லை என்பதே அதன் பொருள். ஆகவே சர்வ உலகங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளும் அவனைப் போன்றவையல்ல. அவனல்லாதவைதான் சிருஷ்டிகள் என்பதை முழுமனதாக அந்த முஷ்ரிக்கீன்கள் ஒப்புக்கொண்டிருந் திருக்கிறார்கள்.

சிருஷ்டிகளின் அறிவு ஓர் கட்டுப்பாட்டுக்குள் கட்டுண்ட தென்றும் இறைவனின் அறிவு கட்டுப்பாடற்ற வெளி உள் விஷயங்கள் யாவையும் முற்றாய்ச் சூழ்ந்து அறியக்கூடியது என்பதையும் அந்த முஷ்ரிக்கீன்கள் அறிந்தே இருந்தார்கள். றசூல் (ஸல்) அவர்களால் “றப்பு”, “றஹ்மான்” என்று கூறப்பட்ட வேளைகளில், அல்லாஹ் என்ற சொல்லுக்கும் மற்றும் சொற்களுக்கும் பேதம் காணமுடியாமல் திணறியிருக்கிறார்கள்.

மேலும், அந்த அல்லாஹ் உருவமற்ற அரூபி என்பதையும் அவர்கள் அறிந்தே இருந்தார்கள். ஆகையினால் தான் ஓ! முஹம்மதே உம்முடைய இறைவனின் வர்ணிப்பை எங்களுக்குக் சொல்லும். அவன் எந்தவஸ்துவால் ஆனவன்? பொன்னினாலா? என்று கேட்டிருக்கிறார்கள்.



நாம் இறைவனைத் தற்போது அறிந்திருப்பது போலவே அவர்களும் அல்லாஹ்வைப்பற்றித் தெளிவாய் அறிந்தே இருந்தார்கள். அவன் ஒருவனே நாயன், அவன் ஒருவனே தெய்வம், அவன் ஒருவனே இறைவன் என்பதை அறிந்தே இருந்தார்கள். மேலும், அவன் இணைதுணையில்லாத அரூபி என்றும் அறிந்தே இருந்தார்கள். அப்படி அறிந்திருந்த மக்களை நோக்கித்தான் முஷ்ரிக்கீன்கள் என்று இறைவன் கூறினான்.

குர்ஆன் 39:3
ஆலிஹத்துக்கள் (இலாஹுகள்) அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி மற்றப்படி நாங்கள் வணங்குவதில்லை, என்றுதான் அவர்கள் கூறினார்கள். இந்த இலாஹுகள் அல்லாஹ்வைப் போன்றவை என்றோ அவை அல்லாஹ்வேதான் என்றோ அவர்கள் எப்போதும் எங்கேயும் கூறியதே இல்லை.

இவ்விபரங்களை இன்னும் நுட்பமாய் விளக்கலாம். பாமரமக்களால் புரிந்து கொள்ள முடியாதிருக்குமாதலால் இவ்வளவையே நோக்குவோம்.

நாம் இறைவனை எப்படி அறிந்திருந்தோமோ அப்படித்தான் அவர்களும் அறிந்திருந்தார்கள். இவர்களை நோக்கியே இறைவன் முஷ்ரிக்கீன்கள் என்றும் பெரும்பாலார் அறியாதவர்களென்றும் எங்கே வெருண்டோடுகிறார்கள் என்றும் கூறினான். ஆகவே, ஒரே நாயனை ஏற்றிருந்தாலும் ஒரே தெய்வத்தை ஏற்றிருந்தாலும் அவன் முஷ்ரிக்காகவே இருக்கின்றான் என்பது மேற்காட்டிய ஆயத்துக்கள் மூலம் வெளிப்படையாகவே தெரிகிறது. அப்படியானால் இந்த ஏகதெய்வ, ஏகஇறைவ, ஏகநாயகக் கொள்கைக்குமாறான ஏதோ ஓர் கொள்கையை ஏற்றுக்கொண்டவனே மூமினாய் இருக்கிறான் என்பது மிகத்தெளிவாய் விளங்குகிறதல்லவா?

இங்கே முக்கியமான ஒரு விஷயத்தை நீங்கள் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். அதாவது நான் தற்கால முஸ்லீம்களை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக முஷ்ரிக்கீன்கள் என்று கூறுவதாக நீங்கள் விளங்கிக் கொள்ளக்கூடாது. நான் கூறுவது குர்ஆனுடைய அபிப்பிராயத்தையன்றி என்னுடைய அபிப்பிராயத்தையல்ல. கலிமாவைக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவியுள்ள அத்தனை மக்களையும் முஸ்லீம்களாக நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இவ்விஷயத்தை எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலில் முதலாம் பதிப்பில் 279ஆவது பக்கத்தில் ஒரு அறிவிப்பு என்ற தலைப்பில் விளக்கியுள்ளேன்.

இப்போது சிந்தனைக்கெடுங்கள். ஹமவோஸ்த் ஆசிரியர் அல்லாஹ்வைத்தவிர தெய்வமில்லை என்று கூறுவது சுத்தமான முஷ்ரிக்கீன்களுடைய கொள்கையேயல்லாமல் தௌஹீது வாதிகளான மூமீன்களின் கொள்கையேயல்ல. இந்த விபரத்தை இப்போது உள்ளத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

இங்கே ஒரு சந்தேகம் பிறக்கிறது. அதாவது ஸ்பிரித், சாந்து, பரிசுத்த ஆவி என்பவை மூன்று தெய்வங்கள் என்று நம்பிய ஒரு சில கிறிஸ்தவர்களையும் படைத்தல், அழித்தல், காத்தல் என்ற முத்தொழில்களைச் செய்யும் மூன்று தெய்வங்கள் என்று நம்புகின்ற இந்துக்களைப்போன்ற மக்களையும் நோக்கியே இந்த ஆயத்துக்கள் அருளப்பட்டிருந்தால் ஒரே தெய்வக்கொள்கையே அவர்கள் விஷயத்தில் போதுமானது தானே என்று ஒரு சந்தேகம் ஏற்படலாம். இது தவறான சந்தேகமாகும்.

ஏனென்றால் நாம் மேலேகாட்டிய ஆயத்துக்கள் றசூல் (ஸல்) அவர்கள் காலத்திலிருந்த முஷ்ரிக்கீன்களை முன் நிலையாக்கி றசூல் (ஸல்) அவர்களுடைய வாய்மூலமாகவே இந்த ஆயத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறான் இறைவன். இதில் யாருக்கும் சந்தேகமே இல்லை. அந்த அறபு நாட்டுமக்கள்



அப்போது சுமார் 365 விக்கிரகங்களை வணங்கிக் கொண்டிருந்தபோதும் இறைவன், தெய்வம் என்பதெல்லாம் அல்லாஹ் ஒருவன் என்றே ஏற்றிருக்கிறார்கள். இதைக் குர்ஆன் நமக்கு விளக்கம் தருகிறது. ஆகவே, இந்தச் சந்தேகம் வீண் சந்தேகமாகும்.

அதுமட்டுமல்லாமல் ஸ்பிரித், சாந்து, பரிசுத்த ஆவியை ஏற்படுத்திக்கொண்டவர்களும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன், என்ற முத்தெய்வங்களை ஏற்படுத்திக்கொண்டவர்களும் இறைவன், கடவுள் என்று ஒரே பொருளின் வெவ்வேறு பெயர்களே என்றும் கூறியிருக்கிறார்கள். இவர்களுடைய ஆகமங்களைக் கொண்டு இவ்விஷயத்தைத் தெளிவாய் விபரித்துக் காட்டமுடியும். மேலும், கடவுளே இல்லையென்பவன் கூட ஓரே தெய்வத்தை ஏற்றிருக்கிறான் என்பதை நிரூபித்துக் காட்டமுடியும். அவ் விபரங்களை விளக்க இந்த நூல் இடம்தராது.

*மக்களே!*

இப்போது சிந்தனை செய்து பாருங்கள் கலிமத்துத்தையிபாவான "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற பரிசுத்த வாக்கியம் றசூல் (ஸல்) அவர்களால் மட்டும்தான் உபதேசிக்கப்பட்டதா? இல்லை! இல்லவே இல்லை. 124,000 நபிமார்களும் இக்கலிமாவைக் கொண்டுதான் உபதேசம் செய்திருக்கிறார்கள். இவர்களில் முதலாவது நபி ஆதம் (அலை) அவர்கள். இவர்களுடைய காலத்தில் சிருஷ்டிகளான தெய்வங்கள் எதுவுமே இருந்ததில்லை. நாயன்கள், இறைவர்கள் இருந்ததே இல்லை. அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்களை இவர்கள் அறிந்ததே இல்லை. இவர்கள் செய்த குற்றம் அல்லாஹ்வுடைய சொல்லுக்கு மாறுசெய்தது மட்டும்தான். வேறு தெய்வங்களையோ நாயகர்களையோ இவர்கள் எடுத்துக்கொண்டதே கிடையாது. அப்படியிருக்கும் போதும்தான் இந்தக் கலிமாவைக் கூறி ஜெயம் பெற்றார்கள். இது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே.

ஆதம் (அலை) அவர்கள் அல்லாஹ்வை முற்றாய் ஒரே தெய்வமாய் ஏற்றிருந்தபோது அல்லாஹ்தவிர தெய்வம் இல்லை என்று கலிமாவுக்குப் பொருள் கொண்டிருக்க முடியாது. ஏன்? அவர்கள் வேறு தெய்வங்கள் இருப்பதாய் அறியவில்லையே. அப்படி வேறு தெய்வங்களும் உண்டு என்று அவர்கள் அறிந்திருந்தால்தானே அல்லாஹ்தவிர தெய்வம் இல்லையென்று கூறியிருப்பார்கள். ஆகவே ஆதம் (அலை) அவர்கள், தெய்வீகத்தன்மையில், நாயகத்தன்மையில், இறைமைத் தன்மையில் ஒருமைப்படுத்த வேண்டிய அவசியமற்றவர் களாகத்தான் இருந்திருக்கிறார்கள். இவ்விதமான ஒருமைப்படுத்தல் அவர்களுக்கு அவசியமே இல்லை.

ஆதம் (அலை) அவர்கள் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லைக் கொண்டு எப்பொருளைக் கருதினார்களோ அதே பொருளைக் கொண்டுதான் நபிமார்கள் வந்திருக்க வேண்டும். அப்படி ஆதம் (அலை) அவர்கள் இலாஹு என்ற சொல்லுக்கு எந்தப் பொருளைக் கொண்டிருந்தார்களோ அதே பொருளைத்தான் நபிமார்களும் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏனென்றால், கலிமாவின் பொருள் காலாகாலம் அவசியத்துக்கேற்றபடி மாற்றப்படக் கூடியதல்ல. கலிமாவோ ''முஹ்கமு''வைச் சேர்ந்தது என்றும் மாற்றப்புரட்ட, வலிந்துரைகொள்ள அவசியமில்லாதது என்றும் எல்லா நபிமார்களும் அக்கலிமாவுக்கு ஒரே பொருளையே கொண்டிருந்தார்கள் என்றும் எமது ''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளேன். நியாயமான ஆதாரங்களையும் அதில் கூறியுள்ளேன். நிற்க,

ஹமவோஸ்த் நூலாசிரியர் வணக்கத்துக்குரிய நாயன் என்பது பிழையென்றும் ''இலாஹு'' என்ற சொல்லுக்கு நாயன், தெய்வம் என்று கொள்வதே சரியென்றும் கூறுகிறார். இவருடைய ஞானத்தைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதாய் இருக்கிறது. இப்போது நோக்குங்கள்.



நாயன் - வணக்கத்துக்குரிய நாயன்
தெய்வம் - வணக்கத்துக்குரிய தெய்வம்
இறைவன் - வணக்கத்துக்குரிய இறைவன்

மேலே காட்டிய இவைகள் எல்லாம் ஒரே கருத்தைக் கொண்டவைதான். நாயன் என்பது நாயகத்தன்மையைப் பெற்றவன் என்ற பொருளைத் தருவதால் நாயகனை வணக்கத்துக்குரியவன் என்று ஏற்றுக்கொள்வது தவறில்லையே! தெய்வம் என்பது தெய்வீகத் தன்மையுடையதாய் இருப்பதால் வணக்கத்துகுரிய தெய்வம் என்பதில் தவறில்லையே! இறைவன் என்பது இறைமைத் தன்மையைக் கொண்டிருப்பதால் வணக்கத்துக்குரிய இறைவன் என்று கூறுவதில் பிழை இல்லையே!

நாயகத்தன்மை என்பதிருந்தால் நாயகத்தன்மை யற்றவையும் உடனிருந்தே ஆகவேண்டும். இல்லையானால் நாயன் என்ற சொல் அர்த்தமற்றதாகிவிடும். அதாவது நாயகத்தன்மை நிலைப்பட அதற்கு நேர் எதிரான ஒன்றும் அவசியமாகும்.

தெய்வத்தன்மை என்பதிருந்தால் அதற்கு நோர்மாறான ஓர் தன்மையுள்ள அதாவது தெய்வீகத்தன்மை அற்றதும் உடனிருந்தே ஆகவேண்டும்.

இறைமை இருந்தால் அதாவது றப்பு என்னும் தன்மை என்பது இருந்தால் அதற்கு நோர்மாறான அப்துவும் இருந்தே ஆகவேண்டும். அப்படியில்லாவிட்டால் தெய்வம், நாயன், இறைவன், றப்பு என்ற சொற்கள் கருத்தில்லாதவையாய் ஆகிவிடும். ஒன்றை உறுதிப்படுத்த அதன் எதிரிடை அவசியம். இது ஓர் தத்துவம். இதைப்பகுத்தறிவுடைய எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான்.

ஆகவே, கலிமாவிலுள்ள ''இலாஹு'' என்ற சொல்லுக்கு நாயன், தெய்வம், இறைவன் என்று பொருள்கொண்டால் தௌஹீதுக்கு, ஒருமைப்படுத்தலுக்கு எதிர்மாறான ''ஷிர்க்'' இணை

ஏற்படுத்தலையே உறுதிப்படுத்தும். தையிபாவான கலிமா கபீஸாவாக மாற்றமடையும். அதாவது வஹ்தத்துல் வுஜூதைத் தரிபடுத்த எடுத்துக்கொண்ட கலிமா அதற்குமாறான கொள்கையையே நிலைப்படுத்தும். இன்னும் விபரமாய்க் கூறினால் தெய்வமும் அதற்குமாறான தெய்வமற்றதும் உண்டு என்பதையே உறுதிப்படுத்தும். நாயன் இறைவன் என்ற சொற்களும் இப்படித்தான். அதன் எதிர்மறையும் உண்டு என்பதையே உறுதியாக்கும்.

கலிமா தரப்பட்ட நோக்கம் தௌஹீதை, வுஜூதை நிலைப்படுத்துவதற்கேயல்லாமல் ''றப்பையும் அப்தையும்'' வெளிப்டுத்துவதற்காக அல்ல. இப்படி நாயனையும் தெய்வத்தையும் அவையல்லாதவற்றையும் வெளிப்படுத்திகாட்டு வதற்காக அல்ல. வணக்கங்களான இபாதத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுவது கலிமாவின் நோக்கமல்ல. ஸிறாத்து என்பதும் தீன் என்பதும் தௌஹீது என்பதே வணக்கம் இபாதத் என்பதுதான் ஷரீஅத். அதன் விதிகள்தான் ''ஸறகு'' என்பது.

இப்போது நோக்குங்கள். தெய்வம், இறைவன், நாயன் என்ற சொற்களையெல்லாம் அல்லாஹ்வை நோக்கியே கூறப்பட்டது என்று கொண்டால் ''இலாஹு'' என்ற சொல்லுக்கு அல்லாஹ் என்பதே பொருத்தமானது. அப்படியானாலும் கூடத் தௌஹீது அதன் இபாரத்துன்னஸ், தலாலத்துன்னஸ் இஸாரத்துன்னஸ், இஹ்திலாவுன்னஸ் என்ற நாலு பிரமாணங்களாலும் உறுதிப்படாது. மிகக்கஷ்டப்பட்டு உறுதிப்படுத்தினாலும் கூட மாபெரும் மேதைகளால் மட்டும்தான் இதை உணரமுடியுமல்லாமல் சாதாரண மக்களால் உணரவே முடியாது. ஆனால் கலிமாவோ பாமரமக்களை முன்னோக்கியே கூறப்பட்டது. அதை அவர்கள் தெளிவாய் விளங்கியதனாலும் அதன் கருத்தை மனதார ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததனாலும்தான் நபியே! நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை, நீர் எதைக்கொண்டு வந்தீரோ அதையே பொய்யாய்க் காணுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.



இவ்விபரம் நமது ''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளது.

மக்களே!

ஷிர்க் என்பது உள்ளத்தில் ஏற்படுகிற ஒரு நோயாய் இருக்கிறது. இதன் வெளிக்கோலம்தான் சிலை வணக்கம் போன்ற ஷிர்க்குடைய கருமங்கள். இந்த உளநோயை நீக்கிக்கொள்ளாவிட்டால் சிலை வணக்கமற்ற முஸ்லீம்களின் இபாதத்துக்களில் கூட ஷிர்க் இருந்துகொண்டேயிருக்கும். இது அறிஞர்களுக்குப் புரியலாமேயன்றிப் பாமரமக்களுக்குப் புரியவே புரியாது.

கலிமா என்பது சிபத்தின் பேரில் மவுசூபைக் கஸ்று செய்கிறவகையைச் சேர்ந்ததேயன்றி மவுசூபின் பேரில் சிபத்தைக் கஸ்று செய்கிறவகையைச் சேர்ந்ததேயல்ல என்றும் அதுவும் கஸ்றுல்கல்பியென்ற இனத்தைச் சேர்ந்தது என்றும் எமது முதல் நூலில் முதலாம் பதிப்பில் 574, 575 பக்கங்களில் தர்க்கரீதியான ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறேன். அங்கே கண்டுதெளிக.

மேலும், கலிமா ''ஈஜா'', பிஸல்பி என்ற இரு ஹுக்கும்களைக் கொண்டுள்ளதென்றும் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஒன்றை நீக்கவேண்டும் என்றும் அதே நூலில் கூறியுள்ளேன்.

பொதுப்படையாய்க் கூறுவதானால் ''இலாஹு என்பது பொதுப் பெயர்ச் சொல்லாகும். உலகம், சோலை என்பவைபோன்ற ஒரு சொற்தான் ''இலாஹு'' என்பதும். இவ்விஷயத்தைக் குர்ஆன் ஹதீஸ்கள் மிகத்தெளிவாய் விபரம் தருகின்றன. இந்த ஆதாரங்களை இங்கேதர இந்த நூல் இடம்தராது. இலாஹு என்ற அறபுச்சொல்லுக்கு நேர் பொருள் தரக்கூடிய வேறு தனிச் சொற்கள் உலகில் எப்பாசையிலுமே கிடையாது. ஆகவே, இலாஹு என்ற சொல்லை வியாக்கியானம் செய்து விளக்கலாமேயன்றித் தனிச் சொற்களால் விளக்கமுடியாது. அப்படி விளக்கமுற்பட்டால் கலிமா ஷிர்க்கையே உறுதிப்படுத்தும்.

இப்போது நமக்கிருக்கிற பிரச்சினை நபிமார்கள் ''இலாஹு'' என்ற சொல்லைக் கொண்டு எதைக் கருதினார்கள் என்பதை அறிவதே. இலாஹு என்ற சொல்லைக் குர்ஆன் விளக்குவதுபோல் பொதுப் பெயர்ச்சொல்லாய் எடுத்துக்கொண்டால் கலிமாவின் பொருள்.

றப்பும் இல்லை பௌதீக சூட்சும சிருஷ்டிகளும் இல்லை, அல்லாஹ்வைத் தவிர என்பதே. இப்படி ஏற்றுக்கொள்ளும் இடம்தான் குத்பியத் என்பது. இதில் அல்லாஹ் என்பதைக் கொண்டு தாத்து, சிபாத்து, அஸ்மா மூன்றும் வெளிப்படை உள்படையாவும் அடங்கியிருக்கின்றன. இந்தப் பொதுப்படை வியாக்கியானத்தினால் வுஜூதையன்றி இல்லை என்றே பெறப்படுகிறது. இது இபாரத்துன்னஸ் என்று கூறப்படும். அதாவது, வெளிச்சத்தப் பிரமாணத்தினால் இது தென்படுகிறது. இப்பேது கருத்துப் பிரமாணமான தலாலத்துன்னஸ்ஸினால் ''இருப்பது வுஜூதே'' என்று பெறப்படுகிறது. மற்ற இரு பிரமாணங்களான ''இஸாரத்துன்னஸ்' 'இஹ்திலாவுன்னஸ்' என்பவை சாதாரணமக்கள் விளங்குவதற்காகத் தரப்பட்டவையே. மேலே நாம் காட்டிய வுஜூதையன்றி இல்லை ''இருப்பது வுஜூதே'' என்பதுதான் கலிமாவின் உண்மைப் பொருள். இது தான் குத்புக்கள் குத்புல் அக்தாபுகளால் விளக்கப்பட்ட உண்மை. இதைத் தெளிவாய் விளங்கிக்கொண்ட பெரும் பெரும் மேதைகளான குத்புக்கள் குத்புல் அக்தாபுகள் தங்கள் நூற்களில் கூறியுள்ள உண்மையை விளங்க முடியாத ஹமவோஸ்த் ஆசிரியர் போன்ற அஞ்ஞானிகள் தொட்டுபார்ப்பதும் நக்கிப்பார்ப்பதும் வுஜூதைத்தான் தாத்தைதான் என்று கூற ஆரம்பித்தார்கள். ஹமவோஸ்த் நூலாசிரியர் இப்படியெல்லாம் பிதற்றுவதற்குக் காரணம் ''ஷிர்க்'', ''தௌஹீது'' என்பவற்றின் சரியான விபரங்களைப் புரிந்துகொள்ளாமைதான். இவர் இவ்விஷயங்களை விளங்கியவராய் இருந்திருந்தால் காளியை, முருகனை வணங்கியவன் மஹ்ஸரில் அதே தோற்றத்தில் இறைவனைக் காண்பான் என்று கூறியிருப்பாரா?



ஐயோ பாவம்! குரங்கின் கையில் பூமாலை அகப்பட்டதுபோல இந்த நூலாசிரியர் கையில் ''வஹ்தத்துல் வுஜூத்'' கொள்கை சிக்கிக்கொண்டதால் அனேகமக்கள் வழிகெட்டுப்போக வாய்ப்பாய் அமைந்துவிட்டது.

ஹமவோஸ்த் நூலாசிரியரை அவருடைய கூட்டத்தினர் ஸம்ஸுல் உலமா என்றழைப்பதை விட ''ஆலிமுன்ளால்லுன் வமுதில்லுன்'' தானும் வழிகெட்டுப் பிறரையும் வழிகெடுக்கும் ஆலிம் என்று அழைப்பதே பொருத்தமாய் இருக்கும்.

வுஜூதையன்றி இல்லை என்னும்போது எவருக்கும் எவ்விதப் பேச்சுமே கிடையாது. ஏனென்றால், இந்த உண்மை எப்போது கல்பில் பதிந்ததோ அப்போது அங்கே வுஜூதையன்றி இல்லை என்றாகும். இதைத்தான் மூமீன்களின் அவ்லியா அல்லாஹ்தான் என்று இறைவன் கூறுகிறான். றசூலின் உண்மை இந்த நிலைமைதான். இதை இன்னும் விளக்கினால் பாமரமக்களிடையே அமைதியின்மை ஏற்படலாம். ஆகவே இத்தோடு நிறுத்துவோம். அவசியமானோர், அறிவுத்தாகமுடையோர் நேரில் கண்டுபேசி விளங்கி அறியட்டும். மிஹ்றாஜ் என்பதன் இரகசியம் இதுதான்.

மக்களே!

கலிமா என்பது அல்லாஹ் தன்னுடைய வஹ்தத்தைத் தரிபடுத்த நாடித் தானே கூறிய ஒரு வாக்கியமாய் இருக்கிறது. இதை ஒரு பெரியாரிடம் விளங்கியறிந்து ஒருமுறை கூறினால், அவரின் கூற்று உள்ளத்தில் உறுதிப்பட்டது உண்மையானால், கடலில் கரைந்த உப்புக்கல்லைப் போல் அடுத்த நேரத்தில் பனாவில் மூழ்கிவிடுவார். குன் என்ற சொல்லினால் கட்டுண்ட கட்டிலிருந்தும் விடுபட்டு இன்ஸானியத்து அற்று வுஜூதிலேயே நிலைப்படுவார். பின் அவருக்கு இன்ஸானியத்தென்னும் நிலைமையையும் சில பரிவட்டங்களையும் கொடுத்து மக்களுக்கு வழிகாட்டுவதற்காக இறைவன் அவர்களை நியமிக்கிறான் இதுதான் றசூல் (ஸல்)

அவர்களுடைய இரகசியமும் அவர்களைப் பின்பற்றிய குத்புகள், குத்புல் அக்தாபுகளுடைய நிலைமையும் ஆகும். இவர்களுடைய நிலைமையை, எழுத்துக்களைப் பேச்சுக்களை விளங்கிக்கொள்ளாத அஞ்ஞானிகள் தரும் விளக்கங்கள் அவர்களால் திறக்கப்பட்ட வாசலை மூடுவதாகவே முடியும். மேலதிக விபரங்களை அறியவிரும்புவோர் நேரில் உரையாடி விளங்கவேண்டியவர் களாவார்கள்.

இதன் சாரம் என்னவென்றால், ''இலாஹு'' என்ற சொல்லைப் பொதுப்பெயர்ச் சொல்லாய்க் கொள்ளாமல் நமது இஷ்டம்போல நாயன், தெய்வம் என்று பொருள்கொண்டால் அது ஷிர்க்கிலேயே நுழைக்கும் என்பதுதான்.

அன்புக்குரிய அறிவுள்ள மக்களே!

கலிமாவின் உண்மைப் பொருளை விளங்கிக்கொள்வதில் பல நுட்பங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் இங்கே விபரிப்பதற்கு இந்த நூல் இடம்தராது. ஆயினும் ஒரு நுட்பத்தை மட்டும் இங்கே தருகிறேன்.

ஆரம்பகால ஆரிபீன்களிடையே தௌஹீது விஷயமாக இருவித அபிப்பிராயங்கள் இருந்திருக்கின்றன. வஹ்தத்துல் வுஜூதுக்கொள்கை என்பது ஒன்று. வஹ்தத்துஸ் ஸுஹூதுக்கொள்கை என்பது மற்றொன்று. இவ்விரு கொள்கைகளும் ஏறக்குறைய ஒன்றுபோல் தென்பட்டாலும் இவ்விரு கொள்கைகளிலும் மிக மிக ஏற்றத்தாழ்வு தென்படுகிறது. ஆயினும் பிழையானவை என்பது கருத்தல்ல. வஹ்தத்துல் வுஜூது என்பதன் அர்த்தம் உள்ளது வுஜூது மட்டுமே என்பது. வஹ்தத்துஸ்ஸுஹூது என்பதன் அர்த்தம் காட்சிப்பொருள் ஒன்றே என்பது. இக்கொள்கைகள் ஏன் இப்படி அமைகின்றனவென்றால் கலிமாவை விளங்கிக்கொள்வதிலுள்ள அறிவின் தன்மையே ஆகும்.



லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்குச் சர்வசிருஷ்டிகளும் சிருஷ்டிகர்த்தாவும் என்றே இருசாராரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வஹ்தத்துஸ் ஸுஹூதையுடையவர்கள் சிருஷ்டிகளும் சிருஷ்டிகர்த்தாவும் இல்லை அல்லாஹ்வைத்தவிர என்று கலிமா கூறுவதால் இருப்பவையாவுமே, நாம் காண்பதுயாவுமே அல்லாஹ்வைத்தான் என்று கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள ஒரு பெரிய தவறு என்னவென்றால், லா என்ற சொல்லைக்கொண்டு இலாஹுவை (சிருஷ்டிகளையும் சிருஷ்டிகர்த்தாவையும்) அழித்தொழித்த பின்பும் சிருஷ்டி இருப்பதாய்க் காண்பதால்தான் அல்லாஹ்வையே ஸுஹூது செய்கிறோம் என்று கூறுகிறார்கள். இவர்கள் பனாபித்தௌஹீதில் நுழையமுடியாதவர்களாய் இருக்கிறார்கள். ஏனென்றால் ஸுஹூது செய்யும்தானும் ஸுஹூது செய்யப்படும் பொருளான அல்லாஹ்வும் இருப்பதாய்க் காண்பதால் உயர் பதவியுடைய காமீல்களேயல்ல.

வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கையுடைய மகான்கள் முன்கூறியவர்களைவிட மிகமிக உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். இதைச் சுருக்கமாகக் கூறினால் இவர்கள் இறைவனுடைய (சிர்றாக) இரகசியமாக இருக்கிறார்கள். இவர்களைப்பற்றி ''என்னுடைய அடியானுக்கும் எனக்குமிடையில் ஒரு சிர்று இருக்கிறது அதைப் பெற்றுக்கொள்ள முற்ஸலான நபிமார்களோ முகர்ரபான மலக்குகளோ இடம் பெறமாட்டார்கள்'' என்று இறைவன் கூறுவதாக றசூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். இது ஹதீஸுல் குத்ஸியில் இடம் பெறுகிறது.

இவர்கள் ஏன் இப்படி உயர் நிலையைப் பெறுகிறார்கள்? ''லா'' என்ற சொல்லைக் கொண்டு இலாஹு என்ற (சிருஷ்டியையும், சிருஷ்டிகர்த்தாவையும்) அறிவைக் கொண்டே அழித்துக்கொண்ட தால் தங்களையும் இழந்துவிடுகிறார்கள். அதாவது அனாநிய்யத்தை மாய்த்து விடுகிறார்கள். ஆகவே வுஜூதுக்கும் தமக்குமிடையில் இரண்டு அல்லது வேறு என்பது முற்றாய் நீங்கிவிடுகிறது. இந்த

நிலைமையில் இவர்களில் வெளியாவது யாவும் இறைவன் செயலேயன்றி வேறில்லை. இவர்களைத்தான் அவ்லியாக்கள் என்று இறைவன் கூறுகிறான். இவர்கள்தான் 'பனா','பகா' என்ற நிலைமையைப் பெற்றவர்கள். இன்ஸானுடைய இறுதி எல்கை இதுதான். இந்த நிலைமையை விளங்கி மக்களை அழைத்துச் செல்வதற்காகத்தான் நபிமார் றசூல்மார்களைக் கொண்டு இறைவன் கலிமாவை அனுப்பினான். இந்த நிலைமையைப் பெறுவதானால் பொறுமையோடு கலிமாவைச் சரியான ஆசிரியர்கள் மூலம் விளங்கித் தெளிவுபெறத்தான் வேண்டும்.

ஹமவோஸ்த் நூலாசிரியர் கூறுவதுபோல் இலாஹு என்ற சொல்லுக்கு நாயன் அல்லது தெய்வம், இறைவன் என்றெல்லாம் பொருள் கொண்டால் கடைசிவரையிலும் ஷிர்க்கில் இருந்து விடுபடவே முடியாது என்பதை நாம் உணரவேண்டும். மக்களை ஏமாற்றி தலைமைப்பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற "ரியா" உடையவர்கள் எப்படியும் கலிமாவுக்குப் பொருள் கூறட்டும். நமக்குக் கவலையில்லை. கலிமாவின் பன்னிரண்டு பொது விபரங்களுக்கும் நாலு நிலைமைகளுக்கும் இபாரதுன்னஸ், தலாலத்துன்னஸ், இஸாரத்துன்னஸ், இஹ்திலாவுன்னஸ் ஆகிய நாலு பிரமாணங்களுக்கும் அமைவாய்க் கலிமாவை விளக்கம் தருவதானால் எவ்வளவோ அதிகமாக எழுதவேண்டி ஏற்படும். இந்த நூல் அதற்கு இடம்தராது.

மனிதன் இன்ஸான் என்ற உண்மையான நிலையில் அமைவதானால் கலிமாவை விளங்கியறிந்தாலேயன்றி அமையாது. தெய்வீகத்தன்மை வெளியாகும் இடம் இன்ஸானியத்தும் ஜின்ஸானியத்தும்தான். இதன் அந்தரங்கத்தை வெளிப்படுத்துவது தான் "வமாகலக்கத்துல் ஜின்னவல் இன்ஸ இல்லாலியஹ்புத்தூன்" என்ற வசனத்தின் உள்நோக்கம். கலிமாவை விளங்கி அறிந்தால் தெய்வீக அரவணைப்புக் கிடைத்தே ஆகும் என்பதற்கு நபிமார்களும், விசேடமாக றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுடைய ஸஹாபாக்களும், அவர்களைப் பின்பற்றிய



நல்லடியார்களான அவ்லியாக்களுமே நமக்கு உதாரணத்திற்குப் போதுமானதாகும்.

ஆகவே, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்நாளை வீணாக்கிவிடாமல் நல்லாசிரியர்களை அடுத்து உண்மையை விளங்கியறிந்து வெற்றிபெறுவீர்களாக. இந்த நிலைமையில் செல்லத் தங்களுக்கு இயலாது என்று காண்பவர்கள் இயன்றவரையில் ஷரீயத்துடைய அமல்களையாவது சரிவரச் செய்துவாருங்கள். றசூல் (ஸல்) அவர்களுடைய ஸபாஅத்தைக் கொண்டாவது ஓரளவு வெற்றிபெறலாம். இதைத்தவிர முர்த்தத்துக்களான வழிகேடர்களைப் பின்பற்றி ஈர்உலகவாழ்வையும் இழந்துவிடாதீர்கள்.

## முடிவுரை

எனது அன்பிற்குரிய முஸ்லீம் மக்களே!

இஸ்லாம் ஐந்து காரியங்களைக் கொண்டு நிலைப்படுத்தப்பட்ட பரிசுத்தமான ஒரு சம்பூர்ணமான மார்க்கம் என்பதும், இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட பரிசுத்தமான மார்க்கம் என்பதும் நம் அனைவருக்கும் தெரிந்த ஒரு விஷயம். இந்த மார்க்கத்தின் மூலாதாரமான விஷயங்கள் இரண்டு என்பதும் மற்றும் மூன்று விஷயங்களும் உபகாரியங்களே என்பதும் நமக்குத் தெரியாத விஷயமல்ல. அதாவது, இற்றைக்குமுன் சென்றுபோன நபிமார்கள் அனைவரும் (வேதம் கொடுக்கப்பட்ட, கொடுக்கப்படாத யாவரும்) அறிவு விளக்கத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கொள்கையையும் (சித்தாந்தம்) அந்த அறிவு விளக்கமான கொள்கையில் நிலைப்படுத்துவதற்கான ஒரு செயல் விளக்கத்தையும்தான் உலகமக்களுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்விஷயத்தை குர்ஆன் நமக்கு விளக்கம் தருகிறது.

குர்ஆன் 7:59
*திடமாக நூஹு நபியை நாம் அவருடைய கவுமுகளிடம் (ஜனங்களிடம்) அனுப்பினோம். அவர் என்னுடைய சனங்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை. உங்களுக்கு மகத்தான ஒரு நாளின் வேதனைக்குப் பயப்படுகிறேன் என்று கூறினார்.*

குர்ஆன் 7:95
*ஆதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஹூது நபியை அனுப்பினோம். அவர் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை என்று கூறினார்.*

குர்ஆன் 7:72
*ஸமூதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரரான ஸாலிஹு நபியை அனுப்பினோம். அவர் என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை என்று கூறினார்.*

குர்ஆன் 7:85
*மதியன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸுஜபுநபியை அனுப்பினோம். அவர் என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.*

குர்ஆன் 41:43
*உமக்கு முன்வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையேயன்றி உமக்குக் கூறப்படவில்லை.*



குர்ஆன் 21:25
*உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத்தவிர வேறு இலாஹு இல்லை. என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமல் இல்லை.*

மேலேகாட்டிய ஆயத்துக்களைத் தெளிந்தமனத்தோடு நோக்கிப்பாருங்கள், அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லை என்பதைப் போதிப்பதுதான் நபிமார்களின் கொள்கையாகவும், பிரச்சாரமாகவும் இருந்திருக்கிறது. இந்தக் கொள்கையில் மக்களை உறுதிப்படுத்துவதற்காக விக்கிரக (சிருஷ்டி) வணக்கத்தை நீக்கி இறைவணக்கத்தைக் கற்பிப்பதுதான் அந்த நபிமார்களின் செயலாக (இபாதத்தாக) இருந்திருக்கிறது. மற்ற விஷயங்களெல்லாம் இவ் விரண்டுக்கும் பிந்தியவைதான். இந்த ஆயத்துக்களில் அல்லாஹ்வையே வணங்கும்படி கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் என்ற சொல் தன்ஸீஹை நோக்கியதென்று நாம் முன்பு விளக்கியுள்ளேன். ஆகவே அல்லாஹுவுக்கு எந்த உருவத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் நபிமார்கள் அனைவரும் சிருஷ்டி வணக்கத்தை எதிர்த்திருக்கிறார்கள்.

றசூல் (ஸல்) அவர்கள் காலத்திலும் அவர்களை அடுத்த காலங்களிலும் சில பொய் நபிமார்களே தோன்றியிருக்கிறார்கள். அதன்பின் காலாகாலம் பற்பல நாடுகளிலும் பல இனமான பிதுஅத்வாதிகள் தோன்றியிருக்கிறார்கள். இந்தப் பொய் நபிமார்களோ, பிதுஅத்வாதிகளோ அவர்களுடைய வாதாட்டங்களின் போது விக்கிரக (சிருஷ்டி) வணக்கத்தை ஆதரித்ததோ அல்லது விக்கிரக வணக்கம் செய்தவன் அவன் கற்பனைபண்ணிய அல்லது வணங்கிய விக்கிரகத்தின் தோற்றத்திலேயே மஹ்ஸரில் இறைவனைக் காண்பான் என்றோ கூறியதும் எழுதியதும் கிடையவே கிடையாது.

ஆனால் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ அப்துல் றஊப் என்பவர் மட்டும்தான் விக்கிரக வணக்கம் செய்தவன் அந்த விக்கிரகத்தின் தோற்றத்தில் இறைவனை அவன் காண்பான் என்று அவருடைய "ஹமவோஸ்த்" நூலின் 23ஆம் பக்கத்தில் கூறுகிறார். மேலும் அந்த நூலின் 20ஆம் பக்கத்தில் ஸஹீஹுல் புஹாரி பாகம் 30ஆம் பக்கத்தில் 1106இல் கூறப்பட்ட ஒரு ஹதீஸை விளங்கிக்கொள்ள ஆற்றலில்லாமையால் அவருடைய கொள்கைக்கு ஆதாரமாகவும் காட்டுகிறார்.

குர்ஆன் 83:15
*நிச்சயமாக காபீர்கள் மறுமையில் இறைவனைக் காணாமல் திரையிடப்படுவார்கள்.* என்ற ஆயத்தை இவர் ஏன் மறந்தாரோ தெரியவில்லை. இந்த ஆயத்துக்கு மாற்றமில்லாத அந்த ஹதீஸை ஆராய்வு செய்யாமல் அவருடைய கொள்கைக்கு ஆதரவாக ஏன் எடுத்துக்கொண்டாரோ அதுவும் தெரியவில்லை.

அடுத்து இவருடைய வாய்ப்பேச்சும் எழுத்தும் வஹ்தத்துல் வுஜூதை நிரூபிப்பதே என்கிறார். ஆனால் அவர் கலிமாவுக்குக் கொண்டிருக்கும் கருத்தோ வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கைக்கு முற்றும் முரணான கலிமதுல் கபீஸாவாக (ஷிர்க்கை உறுதிப்படுத்துவதாக) இருக்கிறது.

ஆகவே நபிமார் கொண்டுவந்த உண்மையான கொள்கை விளக்கத்துக்கும் செயல் விளக்கத்துக்கும் முற்றும் மாறாகவே "ஹமவோஸ்த்" நூலாசிரியர் கூறுகிறார். இதன்படி தான் திட்டவட்டமான ஒரு முர்தத்தேதான் என்பதை நமக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார். ஆகையால்தான் நான் இவரை அமாவாசை ஆலீம் என்றும் நவீன ஆபூஜஹீல் என்றும் கூற விரும்புகிறேன்.

மார்க்கத்தில் பலாத்காரம் கிடையாது. ஆகவே, ஒவ்வொரு மனிதரும் அவரவர் விருப்பம் போல் நடந்துகொள்ளலாம். ஆனால் ஒரு முஸ்லீம் வழி தவறும்போது அவர் நல்வழியில் திரும்பக்கூடிய



நல்லுபதேசங்களைக் கூறுவது ஒவ்வொரு முஸ்லீமுக்கும் கடமையாய் இருக்கிறது. ஆகையால்தான் நான் இவ்வளவு தூரம் கூறினேன். ஏற்பதும் விடுவதும் உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. இறைவன் முஸ்லீம்கள் மூமீன்கள் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

இப்படிக்கு
எம்.எஸ்.எம் அப்துல்லாஹ் (பயில்வான்)

இங்கே தரப்படுகிற விபரம் எம். எஸ். எம் அப்துல்லாஹ் (பயில்வான்) அவர்களால் தங்கள் மாணவர்களுக்கு 05-10-85இல் எழுதிய ஒரு கடிதத்தின் ஒரு சிறுபகுதியாகும்.

## எனது அன்பிற்குரிய மாணவர்களுக்கு!

நாம் தொட்டுப்பார்க்கும் பொருட்கள் எல்லாம் தாத்துத்தான் என்றும் தாத்தைத் தொட்டுப்பார்த்தேயல்லாமல் உணர முடியாதென்றும் ஒருசில புகைஞானவான்கள் கூறுவதாயும் நான் அறிந்தேன். இந்தக் கூற்று உண்மையானால் இவ்வித ஞானிகள் தலைக்குள் மூளையென்பதே கிடையாது என்றே கூறவேண்டியதாய் இருக்கிறது. ஏனென்றால் எல்லாச் சிருஷ்டிகளும் தாத்துத்தான் என்றால் மலக்குகளும், ஜின்களும், காலம், ஒளி, இருள், ஆகாயம் போன்றவையும் தாத்துத்தானே! மலக்காய் இருக்கும் தாத்தையும் ஜின்னாய் இருக்கும் தாத்தையும் ஆகாயத்தையும் நாம் எப்படித் தொட்டுப்பார்ப்பது? தொட்டறிய முடியாததென்று கூறினால் மலக்கும் ஜின்னும் ஆகாயமும் தாத்து அல்ல என்றல்லவா ஏற்படும். இது மூளையுள்ள மனிதன் அறிஞன் தரும் விளக்கம்தானா? மதிமயக்கத்தில் உளறுகிற மூடர்களின் பேச்சல்லவா?

தொட்டுப்பார்த்துக் கண்டறிவது அறிவைக்கொண்டா? விரலைக்கொண்டா? விரலுக்கு அல்லது உடலுக்கு அறிவுண்டா? இல்லவே இல்லையே! மனிதனுக்குள்ள ஐந்து புலன்களையும் கருவியாகக்கொண்டுதான் மனிதன் ஒரு பொருள் இருப்பதாய்

அறிவைக்கொண்டறிகிறான். ஆகவே தொட்டுப்பார்க்கலாம் அறிவினால் அறியமுடியாததென்று ஒருவர் கூறினால் இதன் அர்த்தம்தான் என்ன? சாதாரண பாமர மனிதன்தானும் இப்படிக் கூறுவானா இல்லை, இது பிதற்றலேயன்றிப் பகுத்தறிவுடைய மனிதனின் பேச்சேயல்ல. இதுதானா கஞ்சா ஞானம்?

இவ்விதமான மதிமாறாட்டமுள்ள மனிதர்களுக்கு "தாத்து" "ஸிபாத்து" "அஸ்மா" "இலாஹி" "கௌனி" என்பவற்றின் வரைவிலக்கணங்களும் கலிமாவின் உண்மைப்பொருளும் தெரியவே தெரியாது. மேலும் கலிமாவில் தாத்தென்றோ ஸிபத்தென்றோ அஸ்மா என்றோ கூறாமல் அல்லாஹ் என்ற சொல் ஏன் பாவிக்கப்பட்டதென்ற உண்மை தெரியாது. அது மட்டுமல்ல; தாத்தைக்கொண்டே வெளியானான் என்பதிலுள்ள வெளியானான் என்ற தமிழ்ச் சொல்லுக்குக்கூட விரிவுரை தெரியாதென்றே கூறலாம். இவ்விதமான முர்தத்துக்கள் முஷ்ரிக்குகளால்தானா வஹ்தத்துல் வுஜூதுக்கொள்கையை விளக்கம் கொடுக்கமுடியும். ஆரிபீன்களின் பரிபாஷைகள், பைத்துக்கள், வசனங்களும் இவை சம்பந்தமாய் (வஹ்தத்துல்வுஜூத்) சம்பந்தமாய் குர்ஆன் ஹதீஸுகளில் இடம்பெறுகிற சிற்சில நுண்விபரங்களுக்கும் இவர்களால் விளக்கம் தரவே முடியாது. இவர்கள் ஆரிபீன்களின் கிதாபுகளை மேலோட்டமாய் வாசித்துக்கொண்டு வஹ்மு என்ற மயக்கத்தில் மக்களை வழிகெடுக்கிறார்கள்.

மக்களே!

முகாஸபத்துடைய இல்மு, வஹ்தத்துல் வுஜூதுடைய விளக்கம் என்பது ஆழம் காண, எல்லை காணமுடியாத மாபெரும் கடலாய் இருக்கிறது. இந்த ஆழம் காணமுடியாத கடலில் குரங்கு கிணற்றாழம்பார்க்க வாலைவிட்டதுபோல நாமும் அறபு, உர்து , இங்கிலீஷ், தமிழ் போன்ற பாஷைகளைக் கொண்டு ஆழம் காணமுடியாது. இந்த வஹ்தத்துல்வுஜூதின் சரியான



உண்மையையும் தாத்து, சிபத்து, அஸ்மாக்களின் விபரங்களையும் ஓரளவாவது விளங்கக்கூடியவகையில் எமது முதல் நூலில் "சிருஷ்டிகளின் உண்மையென்ன" என்ற தலைப்பில் நான் விளக்கியிருக்கிறேன். தாத்தைக்கொண்டே வெளியானான் என்பதையும் தாத்தை நாம் தொட்டோ அல்லது புலன்களைக் கொண்டோ அறியமுடியாதென்பதையும் நாம் காணும் அத்தனையும் அவனுடைய நாமங்களே என்பதையும் இந்த நாமங்களைவிட்டும் சிபாத்தும் தாத்தும் என்றும் பிரியாமல் என்றைக்கும் இருந்ததுபோலவே இருக்கிறதென்பதையும் ஓரளவு எம்நூலில் விளக்கியிருக்கிறேன். இதைக் கடிதமூலம் விளக்குவது முடியாத ஒன்றாகும். ஆகவே எமது நூலையே வாசித்துத் தெளிவு பெறுங்கள். முடியாவிட்டால் என்னை நேரில் சந்தித்து உரையாடி விளங்கியறியுங்கள். கஞ்சாஞானிகளின் மயக்குவார்த்தைகளில் கட்டுண்டு உங்கள் வாழ்வை மண்ணாக்கிக் கொள்ளாதீர்கள். அவ்வளவுதான்.

இப்போது உங்கள் நலனுக்காக "தாத்து, "அல்லாஹ்" என்ற இரு பதங்களுக்குரிய விளக்கங்களை மட்டும் மிகமிகச் சுருக்கமாய் இங்கு எழுதுகிறேன்.

## 1. தாத்து

தாத்து என்ற இந்தச் சொல் அல்லாஹ் உடைய திருநாமங்களிலுள்ள ஒரு திருநாமமா? அல்லது ஒரு கலைச்சொல்லா என்பதை முதலில் நாம் கண்டறிய வேண்டியதாய் இருக்கிறது. இவ்விஷயத்தில் அறிஞர்களிடையே அபிப்பிராய பேதங்கள் தென்படுகின்றன. ஆரிபீன்களிடத்தில் பெரும்பாலும் பேதம் இல்லை. ஆகவே ஆரிபீன்களின் இறுதியான முடிவை மட்டும் இங்கே நாம் விளக்குவோம். ஆரிபீன்களின் அபிப்பிராயப்படியும் அறபு அகராதிகளின் மூலம் ஆராய்ந்தறிந்த ஆராய்வின்படியும் என் சொந்த அனுபவம் படியும் "தாத்" என்பது உண்மையாகவே ஓர் கலைச் சொல்லாகவே இருக்கிறது. இப்போது கலைச்சொல்

என்பது என்ன? என்பதை நாம் விளக்கவேண்டியதாய் இருக்கிறது. ''தாத்து'' என்பது பெயர்ச் சொல்தான் என்றாலும் நான் மறுக்கவில்லை. அதனால் எம் விளக்கத்துக்குத் தவறில்லை. அறியாமல் இருந்து நாம் அறிந்துகொண்ட ஒரு பொருளுக்கு உலக பாஷைகளில் அகராதிகளில் அல்லது சொல்வழக்கில் சொல் இல்லையானால் அந்தப் பொருளை மக்கள் விளங்கிக்கொள்வதற்காக, அந்தப் பொருளுக்கு நாம் விரும்பிய ஒரு புதுச்சொல்லைக் குறிப்பிடுகிறோம். இப்படிக் குறிப்பிடப்படும் ஒரு சொல்லுக்குத்தான் கலைச்சொல் என்று கூறப்படும். உதாரணமாக இன்றைய விஞ்ஞானிகள் ஏதாவதோர் புது நோயை, அல்லது ஒரு புது மருந்தை அல்லது ஒரு புதுக்கருவியைக் கண்டறிந்தால் அதற்கு உலக பாஷைகளில் சொல்லுமில்லா திருந்தால் கண்டறிந்த அந்தப் பொருளுக்குப் புதிதாய் ஒரு சொல்லை அமைத்துக் கொள்கிறார்கள். இப்படி அமைத்துக் கொள்ளப்பட்ட ஒரு சொல்லுக்குத்தான் கலைச்சொல் என்று நாம் கூறுகிறோம். இதுபோல் ஞானம் (வஹ்தத்துல் வுஜூத்) என்ற ஆழம் காணமுடியாத ஞானக்கலையில் மூழ்கித்தேர்வுபெற்ற அன்பியாக்களென்ற நபிமார்களான கலைஞர்களால் இறையுதவிமூலம், ஞானக்கலையின் ஒரு அம்சத்தை மக்கள் விளங்கிக்கொள்வதற்காக எமக்குத்தந்த ஒரு கலைச்சொல்தான் ''தாத்து'' என்ற சொல்.

இவ்விஷயத்தில் ஆராய்வில்லாத ஒரு சில அறிஞர்கள் ''தாத்து'' என்ற சொல் பெயர்ச்சொல்லென்று சில இடங்களில் கூறிக்கொண்டிருந்தாலும் சரியான ஆதாரங்களோடு இதை ஆராய்ந்துபார்த்தால் ''தாத்து'' என்ற சொல் ஒரு கலைச்சொல் என்பதைத் தெளிவாய்க் காணலாம். விரிவை அஞ்சுவதால் நாம் அதிகமான விபரம் தரமுடியாமல் இருக்கிறது. இந்தச் சொல் மனிதனால் அறியமுடியாத ஏதோ ஒன்றுக்கு இடப்பட்ட கலைச்சொல்லாய் இருப்பதால் தாத்து என்று கூறும்போது இச்சொல்லினால் குறிப்பிடப்படுகிற ஏதோ ஒன்றுண்டு என்று நாம் அறிந்துகொள்கிறோம். ''தாத்து'' என்ற இந்தச் சொல்லை நாம்



ஓரளவு திரிபுபடுத்தினால் அல்லது எழுத்துக்களை மாற்றினால் குறிப்பிடப்பட்ட அந்தப் பொருளை எம்மால் அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். உதாரணமாக தாத்து என்பதை 'துத்தா' அல்லது ''துத்'' அல்லது ''த்துதா'' என்பவைபோல் மாற்றிக் கொண்டால், அல்லது ஒன்றிரண்டு எழுத்துக்களை நீக்கிக்கொண்டால் நாம் குறிப்பிட்ட அந்த உண்மைப்பொருளை உணரவோ அறியவோ முடியாமல் போய்விடும். ஆகவே இது ஞானக்கலையிலுள்ள ஒரு கலைச்சொல்லேயல்லாமல் முழுமுதற்பொருளான இறைவனின் ''இஸ்முல் அஹ்லம்'' என்ற பெயராய் இருக்கமுடியாதல்லவா? இஸ்முல் அஹ்லம் என்ற இறைவனுடைய உண்மையான பெயரை எப்படி மாற்றிப்புரட்டி அழித்தாலும் அது குறிப்பிட்ட பொருளையே உணர்த்தும் இதை சமீபத்தில் (இதே கடிதத்தில்) விளக்கித்தருகிறேன். ஆகவே நாம் மிகச்சுருக்கமாய்க் காட்டிய இந்த நுட்பத்தை உணர்ந்து கொண்டால் ''தாத்து'' என்பது ஞானக்கலையில் பாவிக்கப்படுகிற ஒரு கலைச்சொல்லாய் இருப்பதனால்தான் உலகிலுள்ள எந்த தரீக்காவிலும் இந்த ''தாத்து'' என்ற சொல்லை ஆரிபீன்கள் திக்றாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது ''தாத்து'' என்றால் என்ன? அதனால் உணர்த்தப்படும் உண்மையின் வரைவிலக்கணம் என்ன என்பதை நோக்குவோம்.

## 1ஆவது

''தாத்து'' என்பது ''காபிலியத் இஹ்திஹ்தாது'' என்ற எதையும் ஏற்கும் தன்மை இல்லாததாகும். இதன் சொந்த நிலைமையில் (வேறு எதுவுமே உடனில்லாமிலிருப்பதால்) இதற்கு நிறமோ உருவமோ உட்படை வெளிப்படையென்ற தன்மைகளோ கிடையாது. மனித அறிவில் அமையும் எத்தன்மையும் இல்லாத எத்தன்மையையும் ஏற்றுக்கொள்ளாத விளக்கமுடியாத ஒன்றாயிருப்பதால் மனித அறிவிலோ மலக்கு மற்றும் சிருஷ்டிகளின் அறிவிலோ அமையாத ஒன்றாகும். ஒன்று என்று விளங்கிக்கொள்வதற்காக கூறலாமே தவிர ஒன்று என்ற

இலக்கத்திலும் கூடக் கட்டுண்டதே அல்ல. ஆகையால்தான் ‘தாத்து’ என்றும் ‘குன்ஹு’ என்றும் கூறப்படுகிற இந்தச் சுய நிலைமையில் அல்லாஹ்வை நான் கண்டேன் என்று ஒருவன் கூறுவானேயானால் அவன் பொய்யனும் பன்றியுமாய் இருக்கிறான் என்று பல ஹதீஸ்களில் வெளிப்படையாகவே வந்திருக்கிறது. மூஸா (அலை) இறைவனே நான் உன்னைப் பார்க்க விரும்புகிறேன் என்று கேட்டபோது நீ என்னைப் பார்க்கவே மாட்டாய் என்று கூறப்பட்டதும் இந்த ‘‘தாத்து’’ என்ற நிலையைத்தான். இவ்விபரங்களை குர்ஆன் ஹதீஸ்களில் நிறையக் காணலாம். இந்த தாத்தைக் காணத் தொட முடியாதென்பதற்கு உறுதியான பல ஆதாரங்கள் இருக்கின்றன. எமது முதல் நூலிலும் இந்த ஆதாரங்களில் சிலவற்றை நான் விளக்கியுள்ளேன்.

2ஆவது
தாத்து என்றால் மனிதன் மட்டுமல்லாமல் எந்தச் சிருஷ்டிகளுடையவும் வெளிப்புலன்கள் வாயிலாக உணர, அறிய, அனுபவிக்க முடியாத ஒன்றேயாகும்.

3ஆவது
தாத்து என்பது குணி என்னும் மூலப்பொருளைக் குறிக்கும் மூலச்சொல்லாயிருப்பினும் அதன் குணங்களை (ஸிபத்து அஸ்மா) எவ்வகையிலும் வெளிப்படுத்தாமல், வெளிப்படுத்தத் தேவையில்லாமல் எல்லாவற்றையும் தன்னுள்தானே அடக்கிக்கொண்டதாகும். அதாவது தாத்து என்ற சொல்லினால் உணர்த்தப்படும் முழுமுதற் பொருள் குணியென்றும் குணமென்றும், நாமமென்றும் வேறுபாடில்லாமல், பிரித்தறிய முடியாமல் தன்னில்தானே நிலைப்பட்டதாய் இருப்பதாகும். ஆகையால் இதன் சொந்த நிலைமை (தாத்தை) வுஜுத் என்றும் “குன்ஹு” என்றும் “பிரம்மம்” என்றும் ஞானிகள் கூறுகிறார்கள். அதாவது ஆதாரப் பொருள் என்பதே அதன் சாரம்.



4ஆவது
“தாத்து” என்ற சொல் அதன் தனித்தன்மையை “வுஜுதை”ச் சுட்டுமேயல்லாது வுஜுதின் ஸிபத்து, நாமம் என்ற தனித்தனித் தன்மைகளை விளக்காது.

5ஆவது
“தாத்து” என்பது அந்தச் சொல்லைக்கொண்டு அனுமானிக்கப் பட்டதேயல்லாமல் மனித அறிவினால் கண்டறிந்த கண்டறியக்கூடிய ஒன்றல்ல.

6ஆவது
“தாத்து” என்றால் குணி மட்டும் என்பது பொருளல்ல.

7ஆவது
“தாத்து” என்றால் ஸிபத்து என்பதும் பொருளல்ல.

8ஆவது
“தாத்து” என்றால் (அஸ்மா) நாமம் மட்டும் என்பதும் பொருளல்ல. தாத்து என்பது நாமம் ஸிபத்து இல்லாத ஒரு தனிப் பொருளுமல்ல.

9ஆவது
“தாத்து” என்றுமே அழிவில்லாத நிலையானது.

10ஆவது
“தாத்து” மாறுபடாதது, அதாவது எப்போதுமே விகாரப்படாமலும் அழியாமலும் சதா இருந்துகொண்டிருப்பது.

11ஆவது
இதன் இருப்புக்கு இடமும் காலமும் கிடையாது.

12ஆவது
“தாத்து” என்ற சொல் ஆதேயமான சிருஷ்டிகளைக் குறிப்பிடாமல் அவற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்ட ஆதாரத்தை மட்டுமே குறிப்பிடும். (இதை மிக மிக அவசியமாய்
மனதில் பதித்துக் கொள்ளவேண்டும்.)

13ஆவது
“தாத்து” என்பதே காலமாய் இருப்பதால் இது காலம் என்பதிலோ இடம் என்பதிலோ கட்டுண்ணமாட்டாது.

14ஆவது
“தாத்து” என்பது சிருஷ்டி என்னும் ஆதேயத்தில் கட்டுண்ணாமல் “தாத்தி”லேயே சிருஷ்டி என்னும் ஆதேயம் கட்டுண்டிருக்கிறது,

15ஆவது
“தாத்து” சிருஷ்டி வெளியாவதற்கு முன்பும் சிருஷ்டி வெளியானபோதும் சிருஷ்டி அழிந்துபோன பின்பும் என்றும் ஒரே தன்மையில் எவ்வித மாறுபாடுமின்றி நிலையாய் இருப்பது இவ்விஷயத்துக்குரிய ஆதாரங்களில் சிலவற்றை எமது முதல் நூலில் முதலாம் பதிப்பில் 29:19, 21:30, 76:12, 41:11, 2:29, 22:62, 6:98 போன்ற ஆயத்துக்கள் மூலம் விளக்கியிருக்கிறேன். எமது முதல் நூலில் முதலாம் பதிப்பில் 527ஆவது பக்கத்திலும் வேறு சில இடங்களிலும் பார்வையிடலாம்.

மேலே காட்டிய வரைவிலக்கணங்கள் அறிஞர்களாலும் ஆரிபீன்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இவற்றை நான் பல கிதாபுகளிலிருந்து தொகுத்துத் தந்துள்ளேன். என் சொந்த அனுபவமும் இதுதான். இதை மாணவர்களாகிய நீங்கள் மனதில் இருத்திக்கொள்ளுங்கள். இப்போது “ஸிபாத்” என்னும் பண்பு, அல்லது குணம் என்பதன் வரைவிலக்கணத்தை ஆராய்வோம்.



## “ஸிபாத்து”

‘ஸிபாத்து’ என்ற சொல்லை நோக்கினால் இதிலும் அறிஞர்களிடையே அபிப்பிராயபேதமுண்டு. ஆரீபீன்களிடத்தில் எவ்வித அபிப்பிராய பேதமுமே கிடையாது. “ஸிபாத்து” என்பதையும் கலைச்சொல்லாகவே கொள்ள வேண்டும். அதாவது “ஸிபாத்து” என்பது குணங்களைச் சுட்டிக்காட்டும் கலைச்சொல்லே ஆகும். ஆகையால்தான் ஆரிபீன்கள் ஸிபாத்தென்னும் சொல்லையும் திக்றாக ஆக்கிக்கொள்ளவில்லை. அது அல்லாஹ்வுடைய பெயர்தான் என்றிருந்தால் இந்தச் சொல்லையும் ஆரிபீன்கள் திக்றில் இடம்பெறச் செய்திருப்பார்கள். ஸிபத்து என்றால் குணம், சக்தி, வல்லமை, ஆற்றல் என்பதே பொருளாகும். இதன் வரைவிலக்கணம் என்னவென்றால்.

1ஆவது
குணம் என்ற ஸிபத்து தாத்தை (குணியை) விட்டும் எந்த நிலைமையிலும் வேறுபடாது

2ஆவது
ஸிபத்து என்ற குணம் இலாஹியான அஸ்மாக்கள் மூலமாகவேயன்றி இயங்காது. அதாவது ஸிபத்து என்பது “இலாஹி”யான நாமம் வெளிப்படாமல் (சிருஷ்டி வெளியாகாமல்) இருக்கும் போதும் தாத்திடத்தில் இயங்குவதாயும் சிருஷ்டிகளிடத்தில் இயங்காததாயும் இருக்கிறது.

3ஆவது
ஸிபத்தின் இயக்கத்தை இலாஹியென்ற அஸ்மாக்களான சிருஷ்டிகளைக் கொண்டேயன்றி அறியவோ உணரவோ முடியாது. (அறிவது புலன்கள் வாயிலாக மனமேயன்றிப் புலன்களல்ல என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.)

4ஆவது
‘ஸிபத்து’ என்னும் குணம் இறைவனிடத்தில் ஒன்றுதான் என்றாலும் அது மனிதனிடத்தில் மட்டுமன்றி இறைவனிடத்திலும் கூட எண்ணிக் கணிக்க முடியாத அளவு விபரமாயும் தனித்தனியாயும் ஒன்றுக்கொன்று விரோதமாயும் உணரப்படுகிறது. இறைவனிடத்திலும் கூட என்று நான் கூறுவதால் இறைவனாலும் அதைக் கணிக்க முடியாது என்று விளங்கிக்கொள்ள வேண்டாம். இறைவனால் அது முடிந்த விஷயம்தான். நான் கூறுவது என்னவென்றால் இறைவனிடத்தில் வேறுபாடற்ற பொதுப்பண்பாயும் விபரப்பண்பாயும் இருக்கிறது என்பதே.

(இறைவனின் அறிவுக்கு நம்மால் எல்லை கணிக்க முடியாது. அவனுடைய அறிவிலுள்ள இலாஹியான அஸ்மாக்களுக்கும் எல்லை இல்லை. அந்த அஸ்மாக்களின் தோற்றமாய் வெளியாகும் சிருஷ்டிக்கும் எல்லையோ கணிப்போ நமக்குத் தெரியாது.வெளியான,வெளியாகிக் கொண்டிருக்கிற, வெளியாகவேண்டிய அத்தனை சிருஷ்களுமே ஆதியில் இறைவனின் தாத்தோடுள்ள அறிவாயும் ஆலம் மிதாலில் மிகமிகச் சூட்சும சிருட்டியாயும் அதாவது இறைவனின் இலாஹியான நாமமாயும், மலக்கூத்துடைய ஆலத்தில் மலக்கு என்னும் சூட்சும சிருஷ்டியாயும், ஆலமுல் அஜ்ஸாமில் பௌதீக சிருஷ்டியாயும் வெளியாகியிருப்பதால் எந்தச் சிருஷ்டியில் இருந்து வெளியாகும் எந்தப் பண்பும் (சக்தியும்) தாத்துடைய சக்தியேயாகும். இதை நமது முதல் நூலில் “சிருஷ்டிகளின் உண்மை என்ன?” என்ற தலைப்பில் விளக்கியிருக்கிறேன். அங்கே வாசித்துத் தெளியுங்கள்.

5ஆவது
ஸிபத்தைப் புலன்கள் வாயிலாக அறிவைக்கொண்டு ஓரளவு உணரலாம், அறியலாமேயன்றிச் சிருஷ்டிகளால் பூரணமாய் அறியவேமுடியாது. (இந்தக் குணத்தில் குறிப்பிட்ட ஒவ்வோரு அளவு அவரவர் நிலைமைக்கேற்றபடி உணரப்படுவதைத் தஜல்லியென்றும், வெளியாகும் அற்புதங்களைக் கறாமாத்து)



என்றும் கூறப்படும். இறைவனுடைய பூரண நிலைமை சிருஷ்டிகளில் எதிலுமே பூரணமாய் வெளியாவதே இல்லை.

இங்கே விளக்கிக்காட்டிய விபரம்தான் ஸிபத்துடைய வரைவிலக்கணமாகும். இதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் கூறிய விபரம் அறிஞர்களாலும் ஆரிபீன்களாலும் ஏகமனதாய் ஏற்றுக்கொண்ட ஒன்றேயாகும். இப்போது அஸ்மா என்னும் நாமத்தை ஓரளவு நோக்குவோம்.

## ‘அஸ்மா’ நாமம் (இலாஹி) (கௌனி)

அல்லாஹ் உடைய நாமங்களுக்கு எண்ணிக்கை நமக்குத் தெரியாது. அதை அல்லாஹ்தான் அறிவான். இறைவனால் அறிவிக்கப்பட்ட நாமங்களேயல்லாது வேறு நாமங்கள் எவருக்குமே தெரியாது. ஆயினும் அல்லாஹ்வுடைய நாமங்களுக்கெல்லாம் மணிமகுடமாயுள்ள, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட “இலாஹி”யான அல்லாஹ் என்ற நாமத்தை மட்டும் நாம் இங்கே எடுத்துக்கொள்வோம். இந்த “அல்லாஹ்” என்னும் சொல் எல்லா நாமங்களையும் (இலாஹி, கௌனி) அத்தனையையும் தன்னுள் பொதிந்து கொண்டிருப்பதால் அறிஞர்களும் ஆரிபீன்களும் இந்த நாமத்தையே “இஸ்முல் அஹ்லம்” என்று கருத்துவேறுபாடு இல்லாமல் ஏகமனதாய் ஏற்றிருக்கிறார்கள். இந்த அல்லாஹ் என்ற சொல்லை ஆதாரங்களோடு ஆராய்ந்தால், இது கலைச்சொல்லாயும், பெயர்ச்சொல்லாயும், வேறுபாடில்லாமல் இருக்கிறது. இந்தப் பெயர்ச்சொல் சுட்டுப் பெயரா? இடுகுறிப்பெயரா? எப்பெயராய் இருக்கிறதென்று ஆராய்ந்தால் என்னால் மட்டுமல்ல இதுவரையிலும் மனிதர் எவராலும்தான் விபரம்தர முடியாமல் இருக்கிறது. ஏனென்றால், எல்லாவகையான பெயர்களையும் எல்லாவகையான பொருள்களையும் (கருத்துக்களையும்) தன்னுள் பொதிந்து கொண்டதாய் இருக்கிறது. ஆகவே இதை இடுகுறிப்பெயரென்று கூறுவதே பொருத்தமானதென்று ஆரிபீன்களும் அறிஞர்களும் கூறிய அபிப்பிராயத்தையே நானும்

கொண்டிருக்கிறேன். ஆகவே "இஸ்முல் அஹ்லம்" ஆன இந்த அல்லாஹ் என்ற நாமத்தின், சொல்லின் தன்மையை விளக்குவதற்காக பிக்ஹு என்ற கலையின் சட்டத்தைக்கொண்டு ஒரு நுட்பத்தை முதலில் விளக்கிக்காட்டுகிறேன்.

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள முற்படும்போது நாம் முதலில் கலிமாச் சொல்லிக் கொடுக்கிறோமல்லவா? இந்த மூல மந்திரமான "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவில் முழு முதற்பெயரான இந்த "அல்லாஹ்" என்ற நாமம்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஈமான் கொள்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர் இந்தக் கலிமாவையும் அதில் பொதிந்துள்ள அல்லாஹ் என்ற நாமத்தையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டால் (கூறினால்) தான் அவரை முஸ்லீமாக மூமீனாகச் சட்டம் ஏற்றுக்கொள்கிறது. அல்லாஹ் என்ற நாமத்துக்குப் பதிலாக இறைவனுடைய வேறு எந்த நாமத்தையும் அல்லது வேறு எந்தக் கலைச்சொல்லையும் அவர் கூறுவாரேயானால் அதாவது கலிமாவில் அல்லாஹ் என்ற நாமத்தை நீக்கிவிட்டு அல்லாஹ்வுடைய வேறோர் நாமத்தைப் பிணைத்துக்கொண்டு கலிமாவைக் கூறுவாரேயானால் அவர் முஸ்லீமாகவோ முமீனாகவோ அனுமதிக்கப்படமாட்டார். உதாரணமாக லாஇலாஹ இல்லாறஹ்மான், லாஇலாஹ இல்லாறஹீம், லாஇலாஹ இல்லாதாத்து, லாஇலாஹ இல்லாஸிபாத்து என்பவை போல் கூறினால் கூறியவர் முஸ்லீமாய் முமீனாய் அங்கீகரிக்கப்படமாட்டார்கள். இது பிக்ஹுவிலுள்ள ஒரு சட்டமாகும். இதை எல்லா இமாம்களுமே ஏற்றிருக்கிறார்கள். ஆகவே இது "இஜ்மாஉ" என்றாகிறது. றசூல் (ஸல்) அவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்றே கூறிக்காட்டியிருப்பதால் இது கியாஸும் ஆகிறது. இதே கருத்தைத்தான் குர்ஆன் ஹதீஸுகளும் ஏற்றுக்கொண்டிருப்பதால் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதே உண்மையான கலிமா என்று நிரூபணமாகிவிட்டது. "அல்லாஹ்" என்ற சொல்லே இஸ்முல் அஹ்லம் என்பதும் நிரூபணமாகிவிட்டது.



இந்த அல்லாஹ் என்ற திருநாமத்தின் விஷேட சிறப்பம்சங்களின் மூன்றை மட்டும் நோக்குவோம். அவற்றில் ஒன்று கலிமாவில் (லாஇலாஹ இல்லல்லாஹ்) என்ற அறபு எழுத்துக்கள் மொத்தம் 12 இருக்கின்றன. அந்த 12 எழுத்தையும் உற்று நோக்கினால் உள்ள எழுத்துக்கள் அலிப், லாம், ஹே என்ற மூன்றெழுத்துக்கள் மட்டிலும்தான். இப்போது அல்லாஹ் என்ற சொல்லை நோக்குங்கள். அதில் 5 எழுத்துக்கள் இருக்கின்றன. சரியாய் உற்றுநோக்கிப் பாருங்கள். "அலிப், லாம், ஹே" என்ற இந்த மூன்று எழுத்துக்கள் மட்டும்தான் இருக்கின்றன. கலிமாவில் இருப்பது இந்த மூன்று எழுத்துக்கள் மட்டும்தானே. அப்படியானால் அல்லாஹ் என்ற சொல்லுக்கு அப்ஜத்தில் என்ன கூட்டுத்தொகை உண்டோ அதே தொகைதானே கலிமாவுக்கும் ஏற்படுகிறது. ஆகவே அல்லாஹ் என்ற சொல் கலிமாவைக் கூட்டித் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது என்பது தென்படுகிறதல்லவா?

இப்போது இன்னோர் சிறப்பம்சத்தை நோக்குவோம். "யா" என்ற வினா (அல்லது விளி)வை அல்லாஹ்வுடன் சேர்த்துக் கொண்டால் அதாவது யா அல்லாஹ் என்றால், அல்லாஹ் என்ற சொல்லில் உள்ள 'அலிப்' அழிவைப் பெறாமலே இருக்கும், ஆனால் 'அர்றஹ்மான்' 'அர்றஹீம்' என்பவை போன்ற சொற்களுடன் யா என்ற வினா சேர்ந்தால் யார் 'றஹ்மான்' என்றோ யார் 'றஹீம்', என்றோ வராது. இதற்குமாறாக 'அர்றஹ்மான்' 'அர்றஹீம்' என்ற சொல்லிலுள்ள அலிம் மறைந்தொழிந்துவிடும். ஆகவே 'யாறஹ்மான யாறஹீம்' என்றுதான் வரும். இது ஒரு சிறப்பம்சம். இப்போது இன்னொரு சிறப்பம்சத்தை நோக்குவோம்.

இந்த 'அல்லாஹ்' என்ற நாமம் இறைவனுடைய சகல பண்பு (ஸிபத்து) (சக்தி)களையும் தன்னுள் பொதிந்து கொண்டிருப்பதால் "இஸ்மேதாத்" ஆக இருக்கிறது. அதாவது தாத்துக்குரிய நாமமாகவே இருக்கிறது. ஆகவே தாத்து நாமம் என்ற திரையில் வெளியானதால்தான் சிருஷ்களாகிய நாம் அந்தத்

தாத்தை 'அல்லாஹ்' என்றறிந்தோம் ஆகவே இறைவனுடைய உட்படை, வெளிப்படை, "பாத்தின், லாஹிர்" அவ்வல், ஆகிர் ஆகிய எல்லா நிலைமைகளுக்கும் இந்த அல்லாஹ் என்ற நாமம் பாவிக்கக் கூடியதாய் இருக்கிறது. இறைவனுடைய மற்ற நாமங்கள் இப்படியில்லாதிருப்பதால் இந்த 'அல்லாஹ்' நீங்கலாகவுள்ள மற்றெல்லாத் திருநாமங்களுக்கும் 'இஸ்மேஸிபாத்தி' என்று கூறப்படுகிறது. ஆகவே அல்லாஹ் என்ற நாமம் மட்டும்தான் இஸ்மே "தாத்துல் முத்தலக்"காக இருக்கிறதென்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த (நாமம்) அல்லாஹ் என்ற சொல் எந்தச் சொல்லடியாய்ப் பிறந்தது என்பதை நோக்கினால் இறைவனுடைய ஹகீகத்தை முற்றாய் எம்மால் அறியமுடியாதது போலவே அவனுடைய அல்லாஹ் என்ற நாமத்தின் பிறப்பிடத்தை (மூலச்சொல்லை) யும் எம்மனிதராலும் அறியமுடியாமல் இருக்கிறது. இந்த நாமத்தைப்பற்றி நாமறிந்த அளவுமட்டும் விளக்கம் தருவதானாலும் கடிதமோ சிறு நூற்களோ இடம்தராது.

இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் இந்த அல்லாஹ் என்ற நாமத்திலுள்ள அலிபை நீக்கிவிட்டால் "லில்லாஹி" என்றாகும். அதிலிருந்து அலிபையும் லாமையும் நீக்கிவிட்டால் 'லஹு' என்றாகும் அதில் நின்றும் மற்றொரு லாமை நீக்கிவிட்டால் 'ஹு' என்றாகும். இரண்டு லாம்களில் ஒரு லாமை நீக்கிவிட்டால் 'இலாஹு' என்றாகும், இரண்டு லாம்களையுமே நீக்கிவிட்டால் 'ஆஹ்' என்றாகும். ஒரு லாமையும் ஹேயையும் நீக்கிவிட்டால் 'இல்' என்றாகும். இதுபோல் அல்லாஹ் என்ற சொல்லிலுள்ள எந்த எழுத்தை நீக்கிவிட்டாலும் மற்ற எழுத்துக்களின் புணர்ப்பு அல்லாஹ் என்பதையே குறித்து நிற்கும். ஆகையால்தான் தரீக்காக்களின் மூல புருஷர்களான ஆரிபீன்கள் அவரவர் வசதிக்கேற்றபடி மேலே கூறிய அத்தனை சொற்களையும் திக்றுகளாக அமைத்திருக்கிறார்கள். இதுபோல் இன்னும் எத்தனை எத்தனையோ விஷேட அம்சங்களை விளக்கிக்காட்ட முடியும். ஆரம்ப நிலையிலுள்ள உங்களுக்கு இவ்வளவே போதும். இப்போது நாம் காட்டிய விபரங்கள் ஞானத்தின் தத்துவ



விளக்கங்களிலுள்ள ஒரு அம்சம் மட்டுமேயாகும். இந்த வலுப்பமான இஸ்முல்அஹ்லமான 'அல்லாஹ்' என்ற சொல்லைத்தான் இறைவன் கலிமாவில் பிணைத்துள்ளான். 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்றுதான் கூறியுள்ளான். இந்தக் கலிமாவில் "தாத்து" அல்லது "ஸிபாத்து" என்பவைபோன்ற கலைச்சொற்களையோ வேறு திருநாமங்களையோ சேர்க்கப்படாமல் அல்லாஹ் என்ற சொல்லைத்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. நாம் முன்பு விளக்கிக்காட்டியது போல் "தாத்து" "ஸிபாத்து" "அஸ்மா" என்பவற்றையும் "அவ்வல்" "ஆகிர்", "லாஹிர்", "பாதின்" (ஆரம்பம், இறுதி, வெளிப்படை, உட்படை) ஆகிய தன்மைகள் யாவற்றையும் தெளிவாய் விளக்கித்தருவதாய் இருக்கிறது இந்த அல்லாஹ் என்ற சொல். நாம் முன்பு விளக்கிக்காட்டிய வரைவிலக்கணங்களோடும் இப்போது "தாத்து" என்ற சொல்லையும் 'அல்லாஹ்' என்ற சொல்லையும் ஒப்பிட்டு நோக்கிப்பாருங்கள்.

1ஆவது

"தாத்து" என்ற சொல் இறைவனின் "குன்ஹு" என்றும் "வாஜிபுல் வுஜூத்" என்றும் வருணிக்கப்படுகிற இறைவனின் சுய தன்மையை மட்டுமே சுட்டிக்காட்டும். இத்தன்மை மனித அறிவுக்கு அமையாதது என்பதை நான் முன்பு கூறியிருக்கிறேன். "அல்லாஹ்" என்னும் சொல் சுயதன்மையான "குன்ஹு" என்ற நிலைமையையும் (பாதினையும்) வெளிப்படையான (லாஹிறையும்) நிலைமையை யும் அவ்வல், ஆகிறு என்ற நிலைமைகளையும் ஏக காலத்திலேயே சுட்டிக்காட்டுகிறது. ஆயினும் லாஹிறை அறிஞரேயன்றி உணரமுடியாது.

2ஆவது

"தாத்து" என்ற சொல் மனித புலன்களான (ஸ்பரிசம்) தொட்டுணர்வு, பார்வை, கேள்வி, மூச்சு, சுவை என்பவற்றில் அடங்காதவொன்றை விளக்கம் தருவதால் அச்சொல்லால் சுட்டப்படும் பொருளை எப்போதுமே மனிதனால்

உணரவேமுடியாது. அதாவது அறியப்படும் பொருள், அறிவு, அறிபவன் ஆகிய இம்மூன்றில் எது ஒன்று இல்லையானாலும் நாம் அனுபவத்தைப் பெறவே முடியாது. இதன் விபரத்தையும் நமது முதல் நூலில் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். "அல்லாஹ்" என்ற சொல் அறியமுடியாத, புலன்களுக்கெட்டாத நிலைமையை மட்டுமல்லாமல் புலன்களுக்கு எட்டக்கூடிய, தெளிவாய் அறியக்கூடிய இறைவனுடைய வெளிப்படையென்ற லாஹிறையும் விளக்கிக் காட்டுவதால் மனிதனால் சுட்டிக்காட்டப்படும் பொருளை அறிவினாலும் அனுபவத்தினாலும் பெறக்கூடியதாய் இருக்கிறது, ஷரீயத்தில் இதை இஸ்தியாரா என்று கூறப்படும்.

3ஆவது

"தாத்து" என்பது பொருளை உணர்த்தக்கூடிய வெறும் சொல்லாக மட்டுமே (கௌனி) இருக்கிறது, இதை மனிதனால் என்றுமே காண அனுபவிக்க முடியாது.பண்பைக்கொண்டல்லாது உணரமுடியாது. "அல்லாஹ் என்ற சொல் "இலாஹி" "கௌனி" ஆகிய இருவகைச் சொல்லாயும் பொருளாயும் இருக்கிறது. ஆகவே இதை மனிதனால் உணரமுடியும். மாணவர்களாகிய உங்களுக்கு இப்போது "அல்லாஹ்" என்ற சொல்லைக் கலிமாவில் இறைவன் ஏன் கூறினான் என்பதை ஓரளவு அறிந்துகொள்ள நான் காட்டிய மூன்று நுட்பங்களுமே போதுமானதாகும்.

இப்போது நான் கூறிய வரைவிலக்கணங்களையும், வியாக்கியானத்தையும் ஒன்றுசேர்த்துத் தொகுத்து நோக்கிப்பாருங்கள். தொட்டுப்பார்ப்பது தாத்தேதான் என்றும், தொட்டுப்பார்க்கலாமே அல்லாமல் அறிவால் அறியமுடியாதென்றும் கூறுகிற ஒருவரை நீங்களே எடைபோடுங்கள்.

1. தொட்டுபார்த்த பொருள் இறைவனின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் என்று ஒருவர் கூறினால் அவர் கூறியது உண்மைதான். இவர் ஓரளவு விளங்கியறிந்த பகுத்தறிவாளராய் இருக்கிறார். இவர் ஒரு முஸ்லிம்தான்.



2. நான் தொட்டுப்பார்த்தது இறைவனின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான். இந்த வெளிப்பாடு வெறும் நிறமும் தோற்றமுமேயல்லாது உண்மையில் பொருளேயல்ல என்று ஒருவர் கூறினால் இவர் கூறுவதும் உண்மைதான். இவர் தௌஹீதை ஓரளவு புரிந்த நிலைமையில், ஓரளவு வஹ்மு நீங்கியவராயும் இருக்கிறார். இவர் முஸ்லீம் மட்டுமல்ல மூமீனாகவும் இருக்கிறார்.

3. நான் தொடுவதும் காண்பதும் (சர்வ சிருஷ்டிகளும்) இறைவனின் வெளிப்பாடே என்றும், இந்த வெளிப்பாடு தோன்றிமறையும் கனவைப் போன்றதேயென்றும், இந்த வெளிப்பாடு யாவும் இறைவனின் இலாஹியான நாமங்களே என்றும், இந்த இலாஹியான நாமங்கள் ஸிபத்து எனும் சக்தியால் நிறம் தோற்றமாய் (பொருளாய்)க் காட்சியளிக்கிறதென்றும், இந்தச் சக்தி தாத்தில்லாமல் ஏற்படமுடியாது. ஆகையால், தாத்தைக் கொண்டே சக்திமூலமாய் நாமம், பொருளாய்க் காட்சியளிக்கிறதென்றும் நாம் நாவினால் கூறும் பெயர் முஸம்மாவுக்கு முஸம்மாவான கௌனியென்றும் ஒருவர் கூறுகிறார். அதுமட்டுமல்ல தாத்தைக்கொண்டே சர்வமும் வெளிப்பட்டு நிலை பெற்றதாய்க் காட்சியளிப்பினும், தாத்தை என்னால் அறியமுடியாதென்றும், (ஸிபத்து) பண்பு என்னும் சக்தியை என்னால் உணர அறியமுடியும் என்றும், என் புலன்களால் தொட்டு, பார்த்து, நுகர்ந்து, சுவைத்து, கேட்டு அறிவதெல்லாம் இலாஹியான நாமத்தையேயென்றும், தாத்து, ஸிபாத்து, நாமம் ஆகிய மூன்றும் ஒன்றைவிட்டொன்று பிரியாமல் என்றும், இருந்ததுபோலவே இருக்கிறதென்றும் அவர் கூறுகிறர். இவர் உண்மையான ஒரு ஆலிமாகவும் முஹக்கிக்கூன்களை (தத்துவ சாஸ்திரிகளை)ச் சேர்ந்தவராயும் இருக்கிறார். இவர் மக்களுக்கு நல்லறிவு கூறவும் மார்க்க விளக்கம் தரக்கூடியவரும்தான் என்பதில் எவ்விதச் சந்தேகமும்

இல்லை. ஏனென்றல் இவர் கூறும் கூற்றுக்கு குர்ஆன் ஹதீஸ், இஜ்மா, கியாஸ்களில் உறுதியான ஆதாரங்கள் இருக்கின்றன. இவருக்கு மேம்பட்ட அவ்லியாக்களின் நிலைமை இன்னும் தெளிவானதாயும், உறுதியானதாயும் இருக்கிறது. இவர்களுடைய விபரம் இப்போது உங்களுக்கு அவசியமில்லை.

4. நான் தொடுவது திட்டவட்டமாகத் தாத்தைத்தான் என்றும தாத்தைத் தொட்டேயல்லாது அறிவினால் அறிய முடியாதென்றும் கூறுகிற ஒருவரை நீங்களே ஹதீஸ்களுடையவும், குர்ஆன் ஆயத்துக்களுடையவும் ஆதாரங்களைக் கொண்டும் எடைபோடுங்கள். நான் மௌனம் சாதிக்கிறேன்.

இறைவனைப் பார்க்கலாம் என்பது அவனுடைய வெளிப்பாடான அஸ்மாவுடைய (லாஹிருடைய) விஷயமாயும் அவனைப் பார்க்க முடியாதென்பது "தாத்துடைய (பாதினுடைய ) விஷயமாயும் இருக்கிறது. இலாஹு என்பது சிருட்டியையும் சிருஷ்டிகர்த்தா வையும் வேறு பிரித்துக்காட்டாத ஒரு சொல் என்பதையும், இந்தச் சொல்லைக்கொண்டு அல்லாஹ் நாடியது வணங்கப்படுகிற பௌதீக, சூட்சும சிருஷ்டிகளையும் தன்னையுமேதான் என்பதை உறுதிப்படுத்துவதற்காகத்தான் என்பதையும் நான் முன்பே விளக்கியிருக்கிறேன். இதன்படி மனிதன் தன்புலன்கள் வாயிலாய் அறிவது இறைவனில் வெளிப்பாடான சிருஷ்டிகளேயன்றி தாத்தையல்ல என்பதை ஞாபகம்வையுங்கள்.

## தாத்து என்றால் என்ன?

நாம் ஒருவருக்கு அகமது என்று கற்பனையாய்ப் பெயர்வைத்துக்கொண்டு விளங்குவோம். "மும்கினுல்வுஜூத்" ஆதேயம் என்று கூறப்படுகிற அகமது பிறக்கும் முன்பு இந்திரியமாயும் அதற்குமுன் இரத்தமாயும் அதற்குமுன் உணவாயும்



இருந்தார். (மறுபிறவியை நான் இங்கே கூறுவதாய் விளங்கிக் கொள்ளவேண்டாம்.) இஸ்லாத்தில் மறுபிறவி மறுக்கப்பட்ட ஒன்று என்பதை ஞாபகம் வையுங்கள். (நுட்பமாய் உணருங்கள்) இந்த அகமது இறந்தபின் அழுகிக் கரைந்து மண்ணாய், தண்ணீராய், காற்றாய், நெருப்பாய் மாறிக் கொண்டிருக்கிறார். இந்த முன் பின் ஏற்பட்ட மாறுதல்களால் அவர் எவ்வளவோ நிறம் தோற்றங்களைப் பெற்றபோதும் "மும்கினுல்வுஜூது" (ஆதேயம்) ஆன அகமதின் உண்மையான "வுஜூது" அல்லது "தாத்து" எப்போதும் இருந்தபடியே எவ்வித மாற்றமும் இல்லாமல்தான் இருக்கிறது. ஆனால் (ஒரு நிலைமையில்) பிள்ளையாகப் பெறப்பட்ட போதுதான் அகமது என்று பெயர் சூட்டப்பட்டது. பிறப்பதற்கு முன்னுள்ள ஒவ்வொரு நிலைமையில் (மர்த்தபாவில்) இரத்தம், இந்திரியம், உணவு என்பவைபோன்ற பற்பல நாமங்களைப் பெற்றிருந்தது போலவே இறந்தபின்பும் பிணம், மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்று ஒவ்வோரு (மர்த்தபா) நிலைமையில் ஒவ்வொரு பெயரை ஒவ்வொரு நிலைமையில் பெற்றிருந்தது. ஆனால் அகமது என்ற பெயர் சிசுவாய் வந்தபோதுதான் வைக்கப்பட்டது. அகமது என்ற பெயர் சூட்டப்பட்ட "வுஜூது" "தாத்து" வெவ்வேறு (மர்த்தபாவில்) நிலைமையில் வெவ்வேறு தோற்றங்ளோடும் வெவ்வேறு பெயரோடும் இருந்தது தான், இருக்கப்போவதும்தான். ஆகவே வுஜூதின் தோற்றமான (இலாஹியான அஸ்மாவின் தோற்றமான) தோற்றங்களுக்கு நாம் சூட்டிய நாமங்களெல்லாம் 'கௌனியான' நாமங்களாகவே இருக்கின்றன. நாமமும் தோற்றமும் எப்படி மாறுபடினும் வுஜூது என்னும் அறிவுக்கெட்டாமல் நின்ற பொருள் என்றும் இருந்ததுபோல் இருக்க அதன் தோற்றங்கள்தான் வெவ்வேறு பொருட்களாகக் காட்சியளித்தது பெயரைப்பெற்றது. வுஜூது எப்போதும் உள்ளதுதான் என்பதற்குப் பொருள் என்னவென்றால் எதனுடைய இருப்பு அவசியமாயும் அதைவிட்டு நீங்குவது கூடாததாயும் இருக்கிறதோ அந்த ஒன்றேயாகும். நாம் முன்புகூறிய அகமதுடைய வுஜூது (தாத்து) என்பது (மப்தவுல் ஆதாரி) பல பண்புகளும் குணங்களும் வெளிப்படுத்துவதற்குச் சாதனமாய், ஆதாரமாய்

அமைந்திருந்த ஒன்றேயாகும். அந்த வுஜூது (தாத்து) நாம்கூறிய உணவு, இரத்தம், இந்திரியம், கரு, சிசு, அகமது, பிணம், போன்ற எந்த (மர்த்தபா) நிலைமையிலும் அகமதை விட்டும் நீங்கவேயில்லை. நீங்கியதெல்லாம் குறிப்பான சிற்சில பண்புகள் மட்டும்தான். இந்தப் பண்புகள் நாமமும், நிறமும், உருவமும் அல்லாமல் பொருளேயல்ல. இந்த நாமம், நிறம், உருவம் போன்ற பண்புகள் அழிவதால் வுஜூது என்னும் தாத்து அழிவதோ ஒழிவதோ இல்லை. எப்படியென்றால், அகமது பிள்ளையாய் இருந்து வாலிபத்துக்கும், வயோதிபத்துக்கும் மாறி மாறி வந்துகொண்டிருந்த போதும் அகமதில் வுஜூது என்றும் இருந்தது போலவேதான் இருந்தது. நுட்பமாய் உணரவேண்டும். இப்போது நோக்கிப் பாருங்கள். நாம் அகமதின் எந்த மர்த்தபாவிலும் கண்ட காட்சி, பெயர் யாவும் ''வுஜூதின்'' ''தாத்தின்'' நிறம் தோற்றம் நாமங்களையேயல்லாது வுஜூதின் உண்மையான ''குன்ஹு'' என்னும் சுயதன்மையல்ல. ஆகையால்தான் தாத்தை ''வாஜிபுல் வுஜூது'' என்றும் சிருஷ்டிகளான நிறம், தோற்றம், நாமங்களை ''மும்கினுல் வுஜூது'' என்றும் கூறுகிறோம். ''தாத்து'', ''வுஜூது'' என்றால் ஆதாரப்பொருள். இதற்கு அழிவில்லை. மும்கினுல் வுஜூது என்றால் இது மாறிமாறி அழியக்கூடியது, விகாரப்படக் கூடியது நிலையில்லாதது. இப்படி நிலையில்லாமல் கடல் அலைபோலத் தோன்றிமறைந்தொழியும் நாமரூப பேதங்களைத்தான் சிருஷ்டி என்று நான் பலமுறை விளக்கித் தந்திருக்கிறேன். இந்தச் சிருஷ்டியை விட்டும் தாத்து வேறானதேயல்ல. ஆனால் நாம் தாத்தைப் பார்ப்பதோ, தொட்டறிவதோ கிடையாது. நாம் எம்முடைய புலன்களின் அளவாகத்தான் உலகை இந்தத்தோற்றத்தில் பார்க்கிறோம் என்றும், புலன்கள் வேறுவகையாய் மாற்றப்பட்டால் இதே உலகை நாம் வேறு வகையாய்க் காண்போம் என்றும் நான் விளக்கம் தந்திருக்கிறேன்.

ஒருசிலர் பௌதீகத்தை அழித்தொழிக்க முடியாதென்றும் வாதிப்பதாயும் நான் அறிகிறேன். இது தவறு. குர்ஆனுக்கும் விஞ்ஞானத்துக்கும் விரோதமான வாதம். இது சம்பந்தமான ஆயத்துக்களை குர்ஆனிலிருந்து நான் விளக்கியிருக்கிறேன் 55:26,27, 20:19, 21:30,76,12, 41:11, 2:28, 22:62, 6:98 போன்ற குர்ஆன் வசனங்களை (ஆயத்துக்களை)ப் பலமுறை பல கோணங்களில் ஆராய்ந்து விளங்கியறியுங்கள். இதில் இன்னோரு ஞான நுட்பம் இருக்கிறது. இங்கே இப்போது நமக்கு அது அவசியமில்லை. இன்றைய விஞ்ஞான உலகம் பௌதீகத்தை அழித்தொழித்தால் அளவிடமுடியாத மாபெரும் சக்திமட்டுமே மிஞ்சும் என்பதை அனுபவவாயிலாகவே கண்டறிந்திருக்கிறது. நிரூபித்துக் குர்ஆனின் கூற்றை உண்மைப்படுத்தியிருக்கிறது. மேலே நான் கூறிய விஷயங்களைக் கவனத்தில் இருத்துங்கள். மேலே காட்டிய ஆயத்துக்கள் எமது முதல் நூலில் முதலாம் பதிப்பில் 295, 269ஆம் பக்கங்களில் இடம்பெறுகின்றன.



அடுத்ததாக புத்துஹாத்துல் மக்கியா போன்ற சில கிதாபுகளில் தொட்டறிவது தாத்தைத்தான் என்று கூறியிருப்பதாயும் அதனால்தான் நாங்களும் இப்படிக் கூறுகிறோம் என்று சிலர் விவாதிப்பதாயும் நான் கேள்விப்பட்டேன். இது மாபெரும் மேதைகள் மீது குறைகூறுவது போன்றிருக்கிறது.

விஷயம் அப்படியல்ல. நான் தெளிபுபடுத்திய அதே வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கையைத்தான் அவர்களும் விளக்கியிருக்கிறார்கள். ஆயினும், இது அந்தக் கிதாபுகளின் சொல் விபரங்களை ஆழமாய் நோக்காமல் மேலோட்டமாய் வாசித்துக்கொண்டு அவர்களின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியாத ஒரு சில கல்விமான்களின் தவறாகும்.

நாம் தாத்தைத் தொட அல்லது உணர முடியும் என்றிருந்தால் கலிமாவில் அல்லாஹ் என்ற சொல்லுக்குப் பதிலாக தாத்து என்ற சொல்லையே இறைவன் அமைத்துத் தந்திருப்பான். ஆகவே எந்தப் பொருளைப் பார்த்தும் தொட்டும் இது தாத்துத்தான் என்று கூறுவதாகாது. ஆயினும், இதுவும் அல்லாஹ்தான் என்று

அல்லது இதுவும் அல்லாஹ்வுடைய தோற்றங்களில் ஒன்றுதான் என்று கூறுவதுதான் பொருத்தமானது இதில் சில நுட்பங்கள் இருக்கின்றன.

என்றாலும் இவ்விடத்தில் ஒரு சட்ட நுட்பம் தென்படுகிறது. அதாவது அல்லாஹ் என்ற நாமத்தைச் சிருஷ்டிகளின் பேரில் நடாத்துவதாகாது என்றும், இறைவனுடைய மற்றத் திருநாமங்களை இறைவனே சிருஷ்டிகளின்பேரில் குர்ஆனிலேயே கூறியுள்ளான் என்றும், எமது முதல் நூலில் ஆதாரங்கள் காட்டி விளக்கியிருக்கிறேன். இது ஷரீயத்துடைய மக்களான அவாம்களை நோக்கிய விஷயமாய் இருக்கிறது. சிருஷ்டியைப் பார்த்து "அல்லாஹ்" என்று கூறுவது பொருந்தும் என்பது "கவாஸுகள்" கவாஸுல் கவாஸுகளைப் பொறுத்த ஒரு விஷயமாய் இருக்கிறது. இதை இப்போது விளக்கித்தர அவகாசம் கிடையாது. இங்கு அவசியமுமில்லை. ஆயினும் இப்படிக் கூறுபவர்களும் திரையிடப்பட்டவர்கள் தான். இதை நாம் ஆதாரமாக்கொள்ள முடியாது.

ஆரிபீன்களின் நிலைமை (ஹால்)களும் மகாம்களும் பற்பல படித்தரங்களாய் இருக்கின்றன. இந்த ஆரிபீன்களுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் இவர்களுடைய பேச்சுக்களை, அவர்களுடைய கருத்துக்களை விளங்கியறியமுடியாது. ஆகையால்தான் ஆரிபீன்களின் "புத்துஹாத்துல் மக்கிய்யா" போன்ற நூல்களை வாசிப்பவர்கள் விளங்கிக்கொள்ளாமல் எதிரிடையாய்ப் பொருள் கொள்ள வேண்டாம் என்று பல அறிஞர்கள் நீண்ட நாட்களுக்கு முன்பே விளக்கியிருக்கிறார்கள். இதை றஊப் (மௌலவி) அவர்களே ஏற்றுக்கொண்டு அவருடைய "ஞானச்சுரங்கம்" 3ஆம் இதழில் 21ஆம் பக்கம் கூறியிருப்பதைக் புரட்டிப்பாருங்கள்.

றஊப் (மௌலவி) அவர்கள் தாத்து விஷயமாய்த் தாத்தைக் காணமுடியாது என்றே முன்பு ஏற்றுக்



கொண்டிருந்தார்கள். தாத்தைத் தொட்டுக் காட்ட முடியாதென்றே மனப்பூர்வமாய் ஒத்துக்கொண்ட அவர்தான் தற்போது தாத்தைத் தொடமுடியும், அறிவினால் அறியமுடியாதென்று கூறுகிறார். நான் கூறுவது பொய்யா? இல்லை. அவருடைய "ஞானச்சுரங்கம்" 6ஆம் இதழில் 48ஆம் பக்கம் 3ஆம், 4ஆம் பந்திகளில் என்ன எழுதியிருக்கிறார் என்பதை வாசித்துப்பாருங்கள். அவருடைய நூலில் இருந்து இன்னும் பல ஆதாரங்களைச் சமயம் வாய்க்கும்போது இன்ஷா அல்லாஹ் நான் விளக்கிக்காட்டுவேன். பொறுமையடையுங்கள்.

நான் காலத்துக்காலம் வேஷம் மாற்றுபவனல்ல என்பதை நீங்கள் அறியுங்கள். உங்களை குழப்பிப்புரட்டுகிற மஸ்த்தான்களின் உண்மையான குறிக்கோள் என்ன என்பதையும் கண்டறியுங்கள். மேலும் இதோ கேளுங்கள்.

றஊப் (மௌலவி) அவர்களின் "ஞானச்சுரங்கம்" 3ஆவது இதழின் 19ஆம் பக்கம் மேற்படி மௌலவி அவர்களாலேயே எழுதப்பட்ட "ஹமவோஸ்த்" "எல்லாமவன் வெளிப்பாடுகள்" ஏகத்துவம் தரும் ஞானம் என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையைத் தயவுசெய்து வாசித்துத் தெளிவு பெறுங்கள். அதே ஞானச் சுரங்கம் 2ஆம் இதழில் 46ஆம் பக்கம் மௌலவி இப்றாஹீம் (நத்வி) எழுதிய கட்டுரையின் இறுதியில் ஆரிபீன்கள் அஸ்மாஸிபாத்துக்கள் மூலம் இறைவனை அறிந்தவர்கள் என்று கூறுகிறார். இவரிடம் ஆரிபீன்கள் தாத்தைத் தொட்டறிந்ததுண்டா? என்று கேட்டால் அப்போது என்ன பதில் தருவாரோ தெரியாது. ஞானசுரங்கம் 4ஆம் இதழில் 38, 39, 41ஆம் பக்கங்களில் "எல்லா வஸ்த்துக்களையும் இறைவன் சூழ்ந்துள்ளான்'' என்று குர்ஆன் தரும் ஆயத்துக்கு மௌலவி தந்துள்ள விளக்கத்தைப் படித்துப்பாருங்கள். இந்த விளக்கப்படி தொடுவது தாத்தேதான் என்றால் சூழ்தல் என்பதன் அர்த்தமென்ன? என்பதை யோசித்துத தெளிவுபெறுங்கள். மேலும் அதே "ஞானச்சுரங்கம்" இதழ் 7இல் 22, 23ஆம் பக்கங்களை வாசியுங்கள். 23ஆம் பக்கத்தில் 3ஆவது

பந்தியில் தாத்து, அமா என்ற நிலைகளை எப்படி விளக்கி யிருக்கிறார்கள் என்பதை நோட்டமிடுங்கள்.

இவற்றையெல்லாம் வாசித்தபிறகு காற்றடிக்கும் பக்கமெல்லாம் மௌலவி சாய்வதேன்? என்று கணியுங்கள். இவற்றைக் குருவும் மாணவர்களும் உணரவேண்டும். செத்தபிறகுதான் தெரியும் செட்டியார் வாழ்வு என்றெல்லாம் எழுதுவதன், பேசுவதன் உள்நோக்கம் என்ன? என்ற விஷயங்களைப் பகுத்தறிவைக்கொண்டு எடைபோடுங்கள். புத்தகப்பொதி சுமந்த கழுததைகளுக்கொப்பான கஞ்சா ஞானிகளின் கபட நாடகத்தை மூடிமறைக்கக் கையாளும் பல குழப்பவாதங்களுக்கெல்லாம் நாம் உங்களுக்கு விளக்கம் தரவேண்டியதாய் இருக்கிறது. இப்போது அதற்கு அவகாசம் போதாது. இன்ஷா அல்லாஹ் மீதி விபரங்களை நேரிலோ கடிதமூலமோ அறிவோம்.

இப்படிக்கு.
M.S.Mஅப்துல்லாஹ் (பயில்வான்)



# பாகம் - 2

بسم الله الرحمن الرحيم

*சர்வசக்தனான அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். மழ்கருல் அதமியான மகான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களைப் பின் தொடர்ந்த நல்லடியார்கள் யாவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக.*

*புத்திஜீவிகளான இஸ்லாமியப் பெருங்குடிமக்களே!*

11-09-1992இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ. அப்துல் றஊப் என்பவரால் எழுதப்பட்டு காத்தான்குடி ஹாஜாஜி கலை இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்ட "நனவாகும் ஒரு கனவு" என்ற நூலைப் பார்வையிடக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்த நூலில் 104ஆம் பக்கம் முடிவுரை என்ற தலைப்பில் ஏ. அப்துல் றஊப் கூறிய விஷயத்தில் ஓர் பொய்யும், இஸ்லாத்துக்கு நேர்முரணான கொள்கை விளக்கமும் இருப்பதைக் கண்டேன். எனவே, உண்மை தெரியாமல் திணறிக் கொண்டிருக்கின்ற முஸ்லீம்களுக்கு உண்மையை எத்திவைக்க வேண்டுமென்ற நன்னோக்கோடு இந்நூலை எழுதியிருக்கின்றேன். தக்கதறுவாயில் இச்சிறு நூலை எழுதுவதற்கு உதவி செய்த அல்லாஹ்வுக்கு முதலில் "அல்ஹம்துலில்லாஹ்" என்று நன்றி கூறுகிறேன். அத்துடன் எனக்கும் ஏ.அப்துல் றஊப் என்பவருக்கும் இடையே உள்ள தொடர்புகளுக்கு பூரண சாட்சியாக உள்ள அல்ஹாஜ் கே.ஆதம்லெப்பை ஜே.பீ (எச்.ஐ) அவர்கள், ஏ.அப்துல் றஊப் அவர்கள் கூறியுள்ள பொய்களை அம்பலப்படுத்த வேண்டும் என்ற



ஒரே நோக்குடன் இந்நூலில் அவரின் விடயங்களுக்குப் பூரண சாட்சியாக இருப்பதற்காக அவர்களுக்கு எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

## அன்புப் பொதுமக்களே!

ஏ.அப்துல் றஊப் அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பென்ன? என்பதை ஓரளவு விளக்கிக்காட்டிய பிறகு அவருடைய கொள்கையை அம்பலத்திற்கு கொண்டு வரலாமென நினைக்கின்றேன். 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஓர் நாள் அல்ஹாஜ் எச்.ஐ அவர்களின் வீட்டில் நான் பலருடன் தௌஹீது விடயமாய்ப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஏ. அப்துல் றஊப் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார். எனது பேச்சை அவர் ஆழமாக அவதானித்துக் கொண்டிருந்தார். நான் பேசுகிற விஷயத்தை புத்தக ரூபமாய் வெளியிடவும் உத்தேசித்துள்ளேன் என்றும் கூறினேன். ஏ. அப்துல் றஊப் நான் எழுதிய கையெழுத்துப் பிரதியைத் தனது பார்வைக்குத் தரும்படியும் பார்வையிட்டபின் எச்.ஐ ஹாஜிரியாரின் உதவியுடன் அச்சிட்டுத் தருவதாகவும் கூறினார். நான் அவருடைய கூற்றை நம்பி எனது மாணவர் எம். ஐ. எம் முபாரக் மூலம் கொடுத்து அனுப்பியிருந்தேன். ஏற்கனவே தௌஹீத் விடயமாக என்னால் பேசப்பட்ட ஆறு ஒலிப்பதிவு நாடாக்கள் அவரின் வேண்டுகோளுக்கிணங்க அவரிடம் எச். ஐ ஹாஜியார் மூலமாக ஒப்படைக்கப்பட்டது. மூன்று மாதங்களாகியும் ஏ.அப்துல் றஊப் தன் வாக்கைக் காப்பாற்றுவதாய்த் தெரியவில்லை. மிகக்கஷ்டப்பட்டு முடிவில் கையெழுத்துப் பிரதியை வாங்கிக்கொண்டேன். அந்த நூல்தான் "ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலாகும்.

ஏ. அப்துல் றஊப் என்பவர் எனது கையெழுத்துப் பிரதியை வாசித்தபின் தௌஹீதைப் பற்றி எப்படி? என்ன? விளக்கம் பெற்றாரோ நான் அறியேன். ஆயினும் தொட்டுப்பார்த்தே தாத்தை அறியலாம் என்றும், கண்ணால் காணமுடியாது என்றும் வேறு

சிற்சில தவறுகளுடனும் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். இப்படி பிரச்சாரம் செய்வது தவறு என்று பலமுறை நான் அவருக்கு எடுத்துக்கூறியிருக்கிறேன். இதேவிஷயத்தை எனது "ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலில் முதலாம் பதிப்பில் 54ஆம் பக்கத்தில் கூறியிருக்கிறேன். ஆயினும் எனக்கும் அவருக்குமிடையில் வேறு எதுவித மனஸ்தாபமும் கிடையாது. அவரின் பிரச்சாரம் முறை கேடானது என்று எனது நூலில் குறிப்பிட்டுமிருந்தும் குற்றத்தை ஒப்புக்கொண்டு எனது நூலை விற்பனை செய்தாரே தவிர குற்றத்தை, தவறைத் திருத்திக் கொள்ளவில்லை. ஏ. அப்துல் றஊப் "ஞானச்சுரங்கம்" என்ற மாதப் பத்திரிகையை ஆரம்ப வெளியீடு செய்ய சூபி ஹஸரத் அவர்களைக் கூப்பிட்டபோது அவர் மறுத்து விட்டார். அத்துடன் ஏ. அப்துல் றஊப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட மெஞ்ஞானப் பேரவையையும் சூபிஹஸரத் அவர்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏ. அப்துல் றஊப் என்னை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டதால் நானே ஞானச்சுரங்கம் என்ற பத்திரிகையை வெளியிட உதவினேன். அந்த ஞானச் சுரங்க ஏடுகளில் ஏற்பட்ட பிழைகளை நான் அவருக்கு அடிக்கடி சுட்டிக்காட்டி இனிமோலாவது திருத்திக்கொள்ளும்படியும் ஆலோசனை கூறியிருக்கின்றேன். காத்தான்குடி மக்கள் மிக அனேகருக்கு இவ்வுண்மை தெரியும். இதன்பின் எனக்கும் அவருக்குமிடையில் சில திருமண விடயங்களிலும், வேறுசில "ஷரீஅத்" நடைமுறைகளிலும் கருத்து முரண்பாடு தொடரலாயின. எனவே, எனக்கு விரோதமாகவும், கிண்டலாகவும் துண்டுப் பிரசுரம் ஒன்றை அவர் வெளியிட்டார். "வல்ஹான் B பால அலா பயில்வான்" (பயில்வானின் தலையில் ஷைத்தான் சிறுநீர் கழித்துவிட்டான்) என்பதே அவருடைய துண்டுப் பிரசுரத்தின் தலையங்கமாகும். அவரின் துண்டுப் பிரசுரத்துக்கு எதிராய் அவர் காட்டிய போலிக் குற்றங்களை மறுத்து நான் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டேன் "அஷ்ஷெய்த்தான் தகவ்வத அலாலிசானி றஊபில் கத்பான்"(றஊபின் நாவில் ஷைத்தான் மலம் கழித்துவிட்டான்) என்பது எனது பிரசுரத்தின் தலையங்கமாகும். விரோதம் வளர்ந்து கொண்டிருந்தது. முடிவில்



அவருடைய கொள்கையை விளக்கிய "ஹமவோஸ்த்" என்ற நூலுக்கெதிராய் "பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி" என்ற நூலை எழுதி வெளியிட்டேன். அந்த நூல் மௌலவியின் அறிவுக்கண்ணை ஓரளவு திறந்து விட்டது போலும். அல்லாஹ் தவிர நாயன் இல்லையென்பதே கலிமாவின் பொருள் என்று கூறிக்கொண்டிருந்த றஊப் எமது நூலைக் கண்டபின் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு நாயன் என்று பொருள் கூறுவதை மாற்றிக்கொண்டார். அத்துடன் அல்லாஹ் தவிர நாயன் இல்லை என்று எழுதி அவரின் பள்ளியில் தொங்கவிடப்பட்டிருந்த விளம்பரப் பலகையையும் அகற்றிக் கொண்டார்.

பல வருடங்களுக்குப் பின் என்னோடு சமாதானம் செய்து கொள்ளும் நோக்கோடு பலரைப் பலமுறை என்னிடம் அனுப்பியிருந்தார். இச்சமாதானத்துக்கு முயற்சி செய்தவர்களில் மிக முக்கியமானவர் அல்ஹாஜ் எச். ஐ அவர்கள்தான். சென்ற சில மாதங்களுக்கு முன்பு கூட சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தது. நான் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைக்கு எதிராய்த் தாக்கல் செய்துள்ள வழக்கு முடியாமலும், அவர் அவரின் தவறைத் திருத்தி தௌபாச் செய்யாத வரையிலும் எவ்வித நடவடிக்கையிலும் என்னால் இறங்கமுடியாதென்று நான் ஆணித்தரமாகக் கூறிவிட்டேன்.

விஷயம் இப்படியிருக்கும்போது அவருடைய சகாக்களில் பலர் அவருடைய கொள்கை, முன்னுக்குப்பின் முரணானபேச்சு, முறைகேடான செயல்களில் அதிருப்தியடைந்த காரணத்தால் எம்மிடம் வந்து தௌஹீதை விளங்கித் தெளிவுபெற்று எமது மாணவர்களாய்ச் சேர்ந்து கொண்டார்கள். இந்த நடவடிக்கை றஊபுக்கு ஓர் உளநோயை (பொறாமையை) ஏற்படுத்தி விட்டிருக்கிறது. எனவே மீண்டும் எம்மைத்தாக்க, எமது தரீக்காவைச் சிதறச் செய்ய முனைந்துதான் மீண்டும் தாத்தைத் தொடலாம், பார்க்கமுடியாது என்றெல்லாம் எழுத முற்பட்டுள்ளார். இவருக்கும் இவருடைய கொள்கைக்கும் இன்ஷாஅல்லாஹ் இந்த

நூலில் போதியளவு வாய்ப்பு கொடுத்துள்ளேன். பொறுமையோடு வாசியுங்கள். அத்துடன் அவர் கூறியுள்ள பொய்களையும் சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன்.

30-09-1984இல் திகதியிட்டு றஊப் என்னை அவசியம் சந்திக்க வேண்டுமென்றும், சில விபரங்களைக் கலந்துரையாட வேண்டுமென்றும் கடிதமூலம் கேட்டிருந்தார். நானும் கடிதமூலம் உடனே வரும்படி தேதி குறிப்பிட்டிருந்தேன். எனது கடிதம் 05-10-1984ல் எழுதப்பட்டது. அக்கடிதத்தில் நீங்கள் மௌலவியென்ற திமிரையும், மேலெண்ணமென்ற திரையையும் கழற்றி வீசிவிட்டுத்தான் என்னைச் சந்திக்க வேண்டுமென்று கண்டிப்பாக எழுதியிருந்தேன். எனது கடிதத்திற்கு அமைய 20-10-1984 சனிக்கிழமை அஸர் தொழுகையின்பின் அவர் சில நண்பர்களுடன் எனது வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அவர் வந்தபோது உங்களுடைய கழற்றவேண்டிய ஜுப்பாவை கழற்றிவிட்டு வந்தீர்களா? என்று நான் கேட்டேன். அவர் இல்லையென்றே பதில் கூறினார். அப்படியானால் நீங்கள் வந்த நோக்கம் என்னவென்று கேட்டேன். ''கர்ன்'' என்ற சொல்லுக்கு விளக்கம் பெறுவதே நோக்கம் என்றார். இதைப்பற்றி கலந்துரையாடினோம். அரபு, ஆங்கிலம், தமிழ் தப்ஸீர்களை எடுத்துக்காட்டி என் கருத்தை உறுதிப்படுத்தினேன். மௌலவியும் அவருடைய சகாக்களும் எனது விளக்கத்தைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டதாய்க் கூறினார்கள். இவ்விடயங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடா இன்றும் என்னிடம் உள்ளது. அதன்பின் தாத்தைக் கண்ணால் காணமுடியாது என்றும் தொட்டுத்தான் பார்க்க வேண்டும் என்றும் நீங்கள் ஏன் கூறுகிறீர்கள்? ஏன் எழுதுகிறீர்கள்? இவ்விஷயத்தையும் இப்போதே பேசிமுடித்தால் நல்லதல்லவா? எனக் கேட்டேன். அதற்கவர் இப்போது அதற்கு அவகாசம் இல்லையென்று கூறிவிட்டுத் தாத்தைக்கொண்டுதான் அல்லாஹ் வெளியானானா? என்று அவர் கேட்டார். நான் இருந்த பாயில் கையால் அடித்து ஆம்! நிச்சயமாக தாத்தைக் கொண்டுதான் அல்லாஹ் வெளியானான். ஆனால் தொட்டுப்பார்ப்பது வெறும் ஸூரத்தேயன்றிப்



பொருளல்ல என்று, நான் கூறினேன். அத்துடன் தாத்துடைய விஷயத்தைப் பேசி முடிக்கவேண்டுமென்று கூடியிருந்த பெருந்திரளான மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். மௌலவி முடியாது என்று மறுத்துவிட்டார். இவரின் மறுப்பால் ஆத்திரம் கொண்ட பார்வையாளர்கள் றஊப் மௌலவியை நையப்புடைக்க முனைந்தார்கள். நான் தலையிட்டு சலசலப்பையடக்கி மௌலவியை நானே கூட்டிச்சென்று வாகனத்தில் ஏற்றி வழியனுப்பினேன். இதுதான் உண்மை. அங்கு சமூகம் கொடுத்திருந்த அனைவரும் இதற்கு சாட்சியாக இருக்கின்றனர். என்னைத் தேடி வந்தவரை பாதுகாப்பாக வழியனுப்புகின்ற எனது கடமையை நான் நிறைவேற்றியுள்ள திருப்தியுடன் சமாதானமடைந்தேன். இப்போது அவசியமான விஷயத்திற்கு வருவோம்.

# "தாத்து" என்றால் என்ன? தாத்தைத் தொட்டறியலாமா?

உலகில் வாழும் மனித குலத்தின் கல்வி இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று உலகக் கல்வி. இக்கல்வி கல்விக்கூடங்கள், கலாசாலைவாயிலாகப் பெறப்படுகிறது. மற்றொன்று தௌஹீதுடைய ஞானக்கல்வி. இக்கல்வியைக் குர்ஆனில் ஹிக்மத், தஸ்கியா என்றும் ஹதீஸ்களில் இஹ்ஸான் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. நல்லடியார்கள் இக்கல்விக்கு "தசவ்பு" என்று பெயர் சூட்டியுள்ளனர். இக்கல்வி கல்விக் கூடங்களில், கலாசாலைகளில் முறையாக கற்பிக்கப்படுவதில்லை. குர்ஆன், ஹதீஸ்களும், அனுபவஅறிவும் தொட்டுப்பார்க்கக்கூடிய வஸ்துக்களான பௌதீக உலகு "ஹுறூர்", மாயை, மயக்கு என்று விபரம் தருகின்றன. முதலில் மாயையென்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால் தாத்துடைய விடயத்தில் தலையிட முடியாது. எனவே, நாம் காணும் சிருஷ்டி உலகு மாயைதானா என்பதைச் சுருக்கமாகக் கவனிப்போம். கடும் வெப்பத்தின்போது பாலைவனத்தில் தென்படுகின்ற கானலை நீராகக் காண்பதே மாயை என்று கூறலாம். ஓர் நெருப்புப்பந்தத்தைக் கயிற்றில் கட்டிச் சுழற்றினால் நெருப்பினாலான ஓர் வளையத்தைக் காணுகிறோம். உண்மையாக அப்படியோர் நெருப்புவளையம் இல்லவேயில்லை. உள்ளது நெருப்புப்பந்து மட்டும்தான். தொடர்ந்து சுழற்றப்படுவதனால் நெருப்பு வளையத்தைக் காணுகிறோம். இதற்கு மாயை, மருட்சி, ஹுறூர் என்று கூறப்படும். இந்த நெருப்பு வளையம் ஏன் தென்படுகிறது என்பதை விளக்க மிக நீண்ட



நேரம் தேவை. இங்கே அவ்விபரம் அவசியமில்லை. உலகு "ஹுறூர்" என்பதை நிரூபிக்க 3:185 போன்ற ஆயத்துக்கள் ஆதாரமாக இருக்கின்றன. இன்னும் ஓர் சிறு உதாரணம் மிகச் சுருக்கமாகத் தரப்படுகிறது.

கனவின்போது நல்லவை தீயவை யாவையும் காணுகிறோம், அனுபவிக்கிறோம். கண்ணை விழித்துக் கொண்டால் கனவில் கண்ட யாவும் மறைந்து விடுகின்றன. கனவின் போது ஜடமாய்க் கண்டவை விழிப்பின் போது மாயமாய் மறைந்து விடுகின்றன. எனவே, கனவு என்பதையும் விழிப்பு என்பதையும் ஒப்பிட்டு நோக்கினால் கனவு ஓர் மாயை என்று கூறலாம். இப்போது உலகக் கல்வியின்படி காலத்தை நோக்கினால் காலத்தை மனிதன் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று வகையாய்ப் பிரித்துச் செயல்படுகிறான். இதேபோல் இடத்தையும் தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்று மூன்று பிரிவுகளாய்ப் பிரித்துக்கொண்டு மனிதன் செயல் படுகிறான். இக்கல்வி உண்மையிலேயே மயக்கக் கல்வியாய் இருக்கிறது. எப்படியென்றால் காலம் வரைவிலக்கணத்தை ஏற்காது என்பதை விஞ்ஞானம் சமீப காலத்தில்தான் கண்டறிந்தது. குர்ஆன் 1410 வருடங்களின் முன்பே இதை விளக்கியிருக்கிறது. காலம் என்பதை கடிகாரத்தின் மூலம் வினாடி, நிமிடம், மணி என்றும், சூரியனையும் பூமியின் சுழற்சியையும் அடிப்படையாய் கொண்டு இரவு, பகல், நாள்,வாரம், மாதம், வருடமென்றும் நாம் பிரித்துக் கொண்டிருக்கிறோம். சூரியனும், சந்திரனும் உருவாக்கப் படுவதற்கு முன்பும் காலம் இருந்து கொண்டுதான் இருந்தது. அவை அழிந்தபின்பும் காலம் இருந்து கொண்டுதான் இருக்கும். அப்போது சிருஷ்டி என்பது இல்லாதிருப்பதால் இறந்தகாலம், எதிர்காலம் இருக்கமுடியாது. நிகழ்காலம் மட்டுமேயிருக்கும். காலவேறுபாடு என்பது சூரியன், பூமி போன்ற மற்றும் கிரகங்களினால்தான் ஏற்படுகிறது. எமது ஒரு நாள் இருபத்தி நான்கு மணித்தியாலங்களாய் இருக்கும்போது வியாழன் கிரகத்தில் ஒருநாள் ஒன்பது மணித்தியாலமும் ஐம்பது நிமிடமுமாய் இருக்கிறது. எனவே, நிலையாய் உள்ள

ஒரேயொருகாலம் நாம் வாழும் இடத்துக்கு ஏற்றபடி மாறுபடுவது போல் தென்பட்டாலும் காலம் எப்போதும் இருந்ததுபோல என்றும் நிகழ்காலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் காலத்துக்கு ஆதி, அந்தம், தோற்றம், மறைவு எதுவுமே கிடையாது. என்றும் இருந்ததுபோலவே இருந்து கொண்டிருக்கிறது.

இன்றைய விஞ்ஞானம் இறந்தகாலமும் எதிர்காலமும் இல்லை என்பதையும், காலத்துக்கு வரைவிலக்கணம் கிடையாது என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆயினும் நிகழ்காலம் மட்டுமே உண்டென்பதை இன்னும் விஞ்ஞானம் ஏற்றுக்கொண்டதாய்த் தெரியவில்லை. ஆனால் ஆரிபுகள் நிகழ்காலம் மட்டுமே உண்டென்பதை ஆணித்தரமாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானமும் இவ்வுண்மையை சமீபகாலத்தில் ஏற்றுக்கொள்ளலாம் என்று நம்புகிறேன். விஞ்ஞானம் வளரும் குழந்தைக்கு ஒப்பானது. உண்மையை நோக்கினால் ஏகவியாபகமான காலத்தில்தான் சர்வ பேரண்டமும் தோன்றி மறைவதாய் இருப்பதால் காலமே சர்வ பேரண்டத்துக்கும் மூலாதாரமாய், தாத்தாய், வுஜுூதுவாய் இருக்கிறது. இந்தக் காலம் மனித அறிவில் எவ்வகையிலும் அமையவே அமையாது. ஆகையால்தான் இன்றைய விஞ்ஞானம் காலம் வரைவிலக்கணத்தைக் கடந்தது என்று தீர்ப்புக்கட்டியுள்ளது. இந்தக் காலம் என்பதுதான் சர்வபேரண்டத்துக்கும் உயிரான "அல்லாஹ்" என்ற தாத்தாகவும் உள்ளது.



*ஹதீஸ்*

*நீங்கள் காலத்தைத் திட்டவேண்டாம். திடனாக காலமாகிறது அல்லாஹ் தானாகவே இருக்கிறது.*

*ஆதாரம் : த.்.வீலாதுன் நஜ்மிய்யா.*

*ஹதீஸ்*

*திராட்சைப்பழத்தைக் கண்ணியம் வாய்ந்ததென்று கூறாதீர்கள். ஐயோ! காலத்தின் கேடேயென்றும் கூறாதீர்கள். ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ்வே காலாமாயிருக்கிறதென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)*
*ஆதாரம் : புஹாரி, முஸ்லிம், அபூதாவுத்*

அல்லாஹ்வே காலமாய் இருக்கின்றான் என்பதை மறந்து விட வேண்டாம். இப்போது இடத்தைக் கவனத்திற்கெடுப்போம்.

1. தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்பதை உலகக் கல்வியின்படி நாம் ஏற்று இருக்கின்றோம். அதாவது இடத்தை மனிதன் மூன்று வகையாய்ப் பிரித்துக்கொண்டு வாழுகிறான்.

2. தன்னிலையும், படர்க்கையும் உண்டேயன்றி முன்னிலை என்பது அவசியம் அல்ல என்பது ஒரு சில அறிஞர்களின் வாதமாகும். படர்க்கை என்பதும் முன்னிலைதான் என்பது இவர்கள் வாதம். முதலாம் வகுப்பாருக்கும் இவர்களுக்கு மிடையில் அவ்வளவு பேதமில்லை.

3. படர்க்கை, முன்னிலை ஆகிய இரண்டும் "ஹுறூர்" வெறும் மயக்கு என்பதும், தன்மை மட்டுமே உண்டு என்பதும் ஆரிபீன்களின் ஆதாரத்தோடு உள்ள வாதமாகும். இதை விளக்க மிக நீண்டநேரம் தேவை. மிகச்சுருக்கமாகத் தருகிறேன். நான் இருக்கிறேன் என்று உணரும் உணர்வு இருவகையானது. ஒன்று

பொய்யான பாதிலாக இருக்கிறது. மற்றொன்று "அல்லாஹ்" என்ற (உண்மையான றூஹு) காலம் தன்னில் தானே உணர்ந்து கொண்டிருக்கும் நான் நான் என்ற தன்னுணர்வாகும். சிருஷ்டி கொண்டுள்ள நான் என்பது பாதில் என்ற ஷிர்க்காயும், றூஹு உணரும் நான் உண்மையான நானாகவும் இருக்கிறது. பாதிலான நானை (அனாநிய்யத்தை) அழித்து உண்மையான நானைத் தரிப்படுத்துவதே விலாயத்தாய் இருக்கிறது. இதற்காகவே கலிமாவும் வேதமும் அருளப்பட்டிருக்கிறது.

இறைவன் தன்னை நான் இருக்கிறேன் என்று உணரும் தன் உணர்வையே சர்வஆலங்களுக்கும் தரிபடும் இடமாயக் கொண்டிருக்கிறான். ஆகவே, ஜடம் என்ற இடம் நான் என்ற இறை உணர்வில் உள்ளதேயன்றி ஓர் தனி வுஜூதல்ல. எனவே உலகு அவன் சூரத்தாயும், பேரண்டத்துக்கு அவனே றூஹுவாகவும் இருக்கிறான். இந்தத் தன்னுணர்வின் மறுபெயர்தான் நூர் என்பது. எனவே நான் என்று உணரும் தன் உணர்வைத் தவிர (தன்மையைத் தவிர) முன்னிலை, படர்க்கை கிடையவே கிடையாதுதான். உண்மை இதுதான். மறக்க வேண்டாம்.

இப்போது ஜடம் என்றால் என்ன? என்பதை நோக்குவோம். ஜடம் (பௌதீகம்-ஸ்தூலம்) நீளம், அகலம், கனம் ஆகிய முப்பண்புகளை உடையது எதுவோ அதுவே ஜடம் எனப்படும். ஜடம் என்பதை மனிதன் அவனுடைய எல்லா புலன் உறுப்புக்கள் வாயிலாகவும் அறிகின்றான் திண்மம், திரவம், வாயு என்ற மூன்றும் ஜடத்தின் மூன்று நிலைகளாகும். இறைவன் ஜடமல்லாதவன் என்பது ஆரிபீன்களின் ஆதாரத்தோடுள்ள உறுதியான தீர்ப்பாகும். ஜடம் அல்லாஹ் அல்லாததாய் இருப்பதால் அதை அல்லாஹ் என்று கூறுவது தவறு என்பது பாமர மனிதனின் (முஷ்ரிக்கீன்) விளக்கமாகும். ஆனால் ஜடம் என்பது பொருளல்லாத வெறும் சூறத்தாய் இருப்பதால் (நிழலைப் போல் அல்லது கண்ணாடியில் காணும் விம்பத்தைப்போல் இருப்பதால்) ஜடத்தை அல்லாஹ் என்று கூறக்கூடாதென்பது



ஆரிபுகளின் வாதம். அதாவது ஜடமாய், முப்பரிமாண முடையதாய்த் தென்படுவது கனவைப் போன்ற ஓர் மயக்குக்காட்சி யென்பது ஆரிபீன்களுடைய தீர்ப்பாகும். இன்றைய விஞ்ஞானம் இவ்வுண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறது. இடமும் திசையும் கிடையாதென்பது விஞ்ஞானிகளின் வாதம். சூறத்தான ஜடம் தரிபட்டிருக்க இடமாயும் காலமாயும் இருப்பதற்கு அறிவைக் கடந்ததாய் நான் இருக்கிறேன் என்ற உணர்வுடையதாய் இருக்கும். வுஜூது அல்லது தாத்து அல்லது அல்லாஹ் என்ற முழுமுதற்காரணம் என்பது இருந்தே ஆகவேண்டும் என்பது ஆரிபுகளுடைய தீர்ப்பாகும். எனவே இவ்விஷயத்தில் ஆரிபுகளும் விஞ்ஞானிகளும் ஒத்திருக்கிறார்கள். ஆகவே தோற்றும் சூறத்து ஹுறூர் என்பதும், இந்த பிரபஞ்சமான சூறத்துக்குத் தாத்தாய், வுஜூதாய் புத்தியில் எட்டாதவனாய் இருப்பவனே அல்லாஹ் என்பது நிரூபணமாகிறது. இவ்விஷயத்தை நிரூபணம் செய்ய குர்ஆனில் 1/3 பகுதியையே ஆதாரம் தரலாம். 57:3ஆம் ஆயத்து ஒன்றே ஆதாரத்துக்கு போதுமானது.

மனிதராகிய நாம் எமக்குள்ள புலன்களுக்கு அமைவாகவே உலகை அனுபவிக்கின்றோம். எமது புலன் உறுப்புக்கள் வேறு தன்மையில் அமைக்கப்பட்டிருந்தால் இப்போது நாம் காணும் உலகு வேறோர் உலகாய்த் தென்படலாம். எனவே உலகின் (பௌதீகத்தின், ஜடத்தின்) உண்மையை அறிந்து கொண்டோம் என்று நாம் தீர்ப்புக்கட்ட முடியாது. நாம் காணும் ஜடம் என்பது வெறும் நிழல் போன்ற தோற்றப்பாடே என்பதையும், ஜடம் முப்பரிமாணமுடையதாய்த் தென்படுவது புலன்களின் மயக்கு என்பதையும் நாம் ஊன்றி உணரவேண்டும். மிகச்சுருக்கமாய்த் தந்த விபரப்படி இனந் தெரியாத மனித அறிவில் பிடிபடாத அனுமான அறிவினால் ஓரளவு அறியக்கூடிய ஏதோ ஓர் ஏகமான மூலாதாரத்தின் தோற்றப்பாடே பேரண்டம் என்பதையும், பேரண்டத்தை புலனால் அறியலாமென்பதையும், பேரண்டத்துக்கு முழுமுதற்காரணமாய் இருக்கும் தாத்தை, வுஜூதை எவ்வகையிலும் புலனால் அறியமுடியாதென்பதையும் வாசகநேயர்கள் ஏற்கத்தான் வேண்டும்.

இப்போது காத்தான்குடி ஏ. அப்துல் றஊபுடைய கூற்றை நோக்குவோம். இவர் தாத்தைக் கண்ணால் காணமுடியாது என்றும், அதைத் தொட்டுணரலாமென்றும் கூறுகிறார். ஐயோ! பாவம் "பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி" என்ற எனது நூலில் இவருடைய உளநோய்க்கு நான் நல்ல மருந்து கொடுத்திருந்தேன். அவர் அம்மருந்தை அருந்தவே இல்லை போலும், இப்போதாவது மருந்து சாப்பிடுவாரா! விரும்பினால் சாப்பிடட்டும்!

வுஜூது என்பதை முறையாய் விளங்கிக்கொள்ள வேண்டும். வுஜூது அல்லது தாத்து என்றால் மூலாதாரம் (சிருஷ்டிக்கு மூலாதாரம்) என்பதே அர்த்தம். இவ்வாதாரம் மூன்று வகை.

1. வாஜிபுல் வுஜூது :- கண்டிப்பாய் நிச்சயமாய் என்றும் அழியாமல் நிலையாய் இருக்கக்கூடிய ஏதோ ஏகமானது (ஒன்று) என்பதே அதன் பொருள். ஒன்று என்று இலக்கத்தில் கூறுவது குற்றமாயினும் நீங்கள் விளங்கிக்கொள்வதற்காக ஒன்று என்று கூறினேன். இதற்கு எதிரிடை கிடையாது. இதனுடன் பிறிதொன்று இல்லாதிருப்பதால் இதில் மாறுதலோ, அழிவோ, குறைவு நிறைவோ ஏற்படாது. எல்லா வரைவிலக்கணங்களையும் இது கடந்தது. இது என்றும் இருந்தபடியே இருந்துகொண்டிருக்கும். இதற்கு இயக்கமுண்டா இல்லையா என்பது கூட அறிவில் பிடிபடாது. இதுமட்டுமல்லாமல், அதை அறிய அதனுடன் வேறு எதுவுமே கிடையாது. இதுவே வுஜூது தாத்து என்பது, இதை இலகுவாய் மனிதன் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக "அஹதுன், சமதுன்" என்ற நாமங்கள் குர்ஆனில் தரப்பட்டுள்ளன (பாதின் என்பது இதுவே)

2. மும்கினுல் வுஜூது :- இந்த வுஜூதுக்கு மனித அறிவிடத்தில் உண்மையும் உண்டு, இன்மையும் உண்டு. இந்த வுஜூதுக்கு வாஜிபுல் வுஜூது, ஆதாரமய் இருப்பதால் இதை ஆதேயம் என்று கூறலாம். சர்வபேரண்டமாய் எமக்கு காட்சியளிப்பது இந்த மும்கினுல் வுஜூதுதான். விஞ்ஞானம் கண்டறிந்த மண், தண்ணீர், காற்று, நெருப்பு, தங்கம், வெள்ளி, றேடியம், போன்ற நூற்றுக்கணக்கான மூலப்பொருட்கள் (தற்காலிக தாத்துக்கள்) எல்லாமே இந்த மும்கினுல் வுஜூதுவில் அடங்கும் லாஹிர் என்பது இதுவே.



3. மும்தனில் வுஜூது :- இது மனிதக் கற்பனையால் உருவான வெறும் பொய்யான (பாதிலாய்) இருக்கிறது. அதாவது சிருஷ்டியும் அல்லாஹ் என்ற தாத்தைப் போன்ற தாத்துத்தான் என்று நம்புவது. அதாவது அல்லாஹ் என்ற தாத்துடன் அவனல்லாத தாத்தும் உண்டென்று நம்புவது. இதுவே ஷிர்க் என்பதன் ஆணிவேராகும். இதற்கு எவ்வித ஆதாரங்களுமே கிடையாது, இவ்விபரங்களை உள்ளத்தில் பதித்துக்கொள்க.

நெருப்பென்ற சொல்லினால் உணர்த்தப்படுகின்ற ஏதோ ஓர் இனந்தெரியாத பொருளின் (தாத்தின்) சூறத்தான நிறத்தைக் கண்ணினாலும் அதன் குணமான உஷ்ணத்தை ஸ்பரிச உணர்வினாலும் (தொட்டுணர்வினாலும்) அறிகிறோம். சூறத்தையும் அதன் குணத்தையும் கண்டறிந்த நாம் அதை நெருப்பென்று கூறுகிறோம். இது ஓர் இரவல் வழக்காகும். நாம் கண்டறிந்தது தாத்தின் சூறத்தையும் குணத்தையுமேயன்றி தாத்தையல்ல. சூறத்தையும் குணத்தையும் கண்டறிந்த நாம் அச்சூறத்துடனும் குணத்துடனும் தாத்திருப்பதால் தாத்தையே தொட்டோம் என்று ஏமாந்து விடுகின்றோம்.

தொடுபவன், தொடப்படும் பொருள், தொடுதல் என்னும் செயல் ஆகிய மூன்றும் சிருஷ்டியுலகான மும்கினுல் வுஜூதை நோக்கியதாயும்(தோன்றிமறையும் பேரண்டத்தை நோக்கியதாயும்) அனுமான வாயிலாகவேயன்றி வேறெவ்வகையிலும் தாத்தை அறியமுடியாதென்பது முன்கினுல் வுஜூதுதான் உலகிற்கு ஆதாரமான தாத்தென்ற வுஜூதை நோக்கியதாயும் இருக்கின்றது. சிருஷ்டியுலக மூலப்பொருட்களை தாத்துவாய்க் கொள்வது உலகக்

கல்வியாயும், சிருஷ்டியான தாத்துக்குத் தாத்தாய் இருப்பதே அல்லாஹ் என்று அறிவது ஞானக் கல்வியுமாயிருக்கிறது.

*அல்லாஹ்வை நீங்கள் அறியவேண்டிய முறைப்படி அறிவதில்லையென்று* குர்ஆன் கூறுகிறது. அறிய வேண்டிய முறையென்பது அனுமானவாயிலாய் அறிவதைக் குறிப்பிடுவதாகும். தொட்டறிய வேண்டுமென்பதல்ல. அறிய வேண்டிய முறை என்பதற்கு இன்னுமோர் அர்த்தம் இருக்கிறது. முறைப்படி செயல்பட்டு உணரவேண்டிய முறைப்படி உணர்வதில்லை என்பது அதன் அர்த்தமாகும். இவ்வுணர்தல் ஸ்பரிச உணர்வினால் உணரப்படும் உணர்வல்ல, ஸ்பரிச உணர்வு என்பது ஹைவானியாய் இருக்கிறது. எனவே முறைப்படி செயல்பட விரும்பும் நாம் எமது குறிக்கோளை அடைவதானால் கலிமத்துத்தையிபாவைக் கொண்டேயன்றி அறியமுடியாது. ஆனால் எம் சமூக மக்களால் பெரியார்களாய்க் கணிக்கப்பட்ட ஒரு சிலர்கூட ஞானநுட்பங்களில் இடறிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. இவ்வித இடறல்களில் ஒன்றுதான் தாத்தைக் கண்ணால் காணமுடியாதென்றும் தொட்டுத்தான் உணரவேண்டும் என்றும் கூறுகின்ற கூற்றாகும்.

கலிமாவில் உள்ள “இல்லா” என்ற சொல் இல்லை என்றொழிக்கப்பட்ட சிருஷ்டியை மீண்டும் தரிபடுத்துவதால் இவ்விடத்தில் ஒரு சாராருக்கு ஓர் பெரிய மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அறிவுமயக்கம் அவர்களை அறியாமலே அஞ்ஞான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறது. இது எனது ஆராய்வினாலும் இறை வழிகாட்டலாலும் பெற்றுக்கொண்ட உண்மையாகும். அல்லாஹ்வேயன்றி இல்லாதிருப்பதால் இருப்பவை யாவும் அல்லாஹ்தான் என்றும் தாத்தைத் தொட்டறியாலாமென்றும், எமது முன்னோரில் பலர் கூறினார்கள், எழுதினார்கள். எனினும் கலிமாவிலுள்ள இல்லா (அன்றி,தவிர) என்ற சொல் சிருஷ்டியைத் தரிபடுத்தும் அதேவேளை சிருஷ்டி கர்த்தாவான றப்பையும் தரிபடுத்துவதால் கலிமாவின் உண்மையான சாரம் அல்லாஹ்வே



றப்பாயும் அப்தாயும் இருக்கிறான் என்பதே. இதைப் பெரும்பாலானோர் கூர்ந்து நோக்கவில்லை.

அல்லாஹ், அப்து, றப்பு ஆகிய மூன்று மர்த்தபாக்களைக் கலிமா விபரம் தந்துள்ளது. இதில் அப்து என்பது பௌதீக சூட்சும வெளிப்பாட்டையும், றப்பு என்பது சூட்சுமத்துக்கும் சூட்சுமமான நூறையும் குறிப்பிடுவதாகும். *“எனது றப்பு ஒளிமயமான வனாயிற்றே. நான் அவனை எப்படிப் பார்க்க முடியும்”* என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ் இவ்வுண்மையைச் சுட்டியதேயாகும். இந்தநூர் என்ற ஒளி சூரியஒளி போன்ற பௌதீக ஒளியல்ல. இவ்விரு மர்த்தபாக்களையும் தன்னுட் கொண்டதாய், மனித அறிவு வட்டத்தைக் கடந்ததாய், ஏகமாய், நிலையாய் இருந்து கொண்டிருப்பது எதுவோ அதுவே அல்லாஹ் என்ற தாத்தாகும். இதை விளக்குவதற்காகத்தான் குர்ஆனில் 112ஆவது சூரா அருளப்பட்டிருக்கிறது. இந்த சூறாவில் அல்லாஹ் என்ற நாமத்தை கூறி அதன் வரைவிலக்கணத்தை ஓரளவு விளக்கவே “அஹது” என்ற சொல்லை இறைவன் பாவித்திருக்கிறான். தொட்டறியக்கூடிய சிருஷ்டி (இலாஹு) இல்லை என்னும்போது தொட்டுணரமுடியாத சிருஷ்டிகர்த்தாவும் (இலாஹு) றப்பும் இல்லையென்றாகும். அப்தும் றப்பும் இல்லை என்றொழிக்கப் பட்டால் வுஜுது என்ற தாத்து மட்டும்தானே இருக்கும். இதைத் தொடவும் காணவும் அதனுடன் வேறு எதுதான் இருக்கும். இதுதான் இஸ்லாத்தின் உயிரான தௌஹீதாய் இருக்கிறது. அல்லாஹ் என்ற இடுகுறிப்பெயரால் சூட்டப்பட்ட வுஜுது, தாத்து என்பதன் விபரம் இதுவே.

தாத்தைத் தொடலாம் பார்க்க முடியாதென்ற இந்தக் கூற்றை எமது முன்னோர் ஏன் கூறினார்களென்பதை ஆராய்ந்தால் இதற்குப் பல காரணங்கள் தென்படுகின்றன. எல்லோரும் விளங்கக்கூடிய விபரம் மட்டும் இங்கே தரப்படுகின்றன.

1. சர்வ உலகும் வெறும் ஹுூறுர் என்பதை அறிந்திருந்தும் அந்த ஹுூறுர் என்ற மயக்கத்தில் இருந்தும் விடுபட முடியாமை. இது அனுபவ அறிவின்மையால் ஏற்பட்ட தவறாகும். சூறத்து பொருளல்ல என்பதை தெளிவாய் அறிய விஞ்ஞான விளக்கம் அவசியமாகும். முன்னோரில் பலருக்கு இக்கல்வி கிடைக்காமல் இருந்திருக்கலாம்.

2. தொட்டுணரக்கூடிய ஜடம் (பௌதீகம்) என்பதன் உண்மை. கால வேறுபாட்டின் தன்மை, இடவேறுபாட்டின் தன்மை, மனிதனின் வெளிப்புலன்களின் உட்புலன்களின் தன்மைகளைப் பற்றிய விஞ்ஞான அறிவும், அனுமான அறிவும் இவர்களிடம் இல்லாமை.

3. தாத்தைத் தொடலாம், காணமுடியாதென்போர் ஒளித்திரையிலிருந்த மஜ்தூபுகளாய் இருந்திருக்கலாம். மஸ்த்துக்களின் போதைகளினாலும் இவ்வித மயக்க வார்த்தைகள் வெளிவந்திருக்கலாம்.

4. முன்னோர் சொன்ன உண்மையான விஷயங்களை திரிவுபடுத்தி அவர்களின் விரோதிகள் இடைச்செருகல்களை அவர்களுடைய நூற்களில் புகுத்தி இருக்கலாம்.

இந்த நான்கு காரணங்களும்தான் தாத்தை தொட்டறியலாம், பார்க்க முடியாதென்ற வாதத்திற்கு வித்தாய் இருக்கின்றன. இவ்விதக் கொள்கையுடையோர் மயக்க அறிவுடையோர் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. இவர்கள் மக்களுக்கு வழிகாட்டக்கூடியவர்களே அல்ல. இன்னோர் ம:்கூல், மன்கூல் என்ற பிரமாணங்களுக்கு அமைவாய் ஓர் விஷயத்தைக் கூறினால் நாம் அதை ஏற்கலாம். பிரமாணங்களுக்கு விரோதமான விளக்கங்களை நாம் மறுப்பதில், எதிர்ப்பதில் எவ்விதப் பிழையுமே கிடையாது. *"நான் குர்ஆனுக்கு மாறாய்க் கூறமாட்டேன். நான் அப்படிக் கூறி இருப்பதாய் நீங்கள்*



*கண்டால் என் சொல்லைவிட்டுவிட்டுக் குர்ஆனையே பின்பற்றுங்கள்"* என்பது றஸுல் (ஸல்) அவர்களுடைய வாக்காகும். நபிமார்களே சிற்சில தவறுகளைச் செய்துள்ளார்களென்று குர்ஆன் கூறுவது உண்மையானால் எம்போன்ற முன்னோர் தவறு செய்யமாட்டார்களென்பதற்கு என்ன ஆதாரம் உண்டு?

எனவே, தாத்தைத் தொடலாம் காணமுடியாதென்ற வாதம் வேதத்துக்கும், அறிவுக்கும் முரணாய் இருக்கிறது. எப்படி யென்றால் மோதிரம் என்ற சூறத்துக்குத் தங்கம் என்ற மூலப்பொருள் தாத்துவாய் இருக்கிறது. மோதிரம் என்பது ஆதேயமாயும், தங்கம் ஆதாரமாயும் இருக்கிறது. நாம் மோதிரத்தைத் தொடும்போது தங்கம் என்ற (பௌதீக) தாத்தைத்தான் தொடுகிறோம், நாம் தொட்ட கண்டறிந்த தங்கமென்ற தாத்து இன்னொரு தாத்துவின் தேவையுடையதாய் இருக்கிறது. இல்லையானால் தங்கமென்ற சூறத்து இருக்கவே இருக்காது. எனவே, மனிதனால் கண்டறியப்பட்ட பௌதீக தாத்தென்பது ஹக்கான தாத்தின் வெறும் சூறத்து மட்டுமே என்பதை நம்மில் பலர் உணர்வதேயில்லை. சர்வ பேரண்டமும் மும்கினுல் வுஜுூதென்ற ஆதேயமாயும், அல்லாஹ் என்ற தாத்து பேரண்டத்துக்கு உயிராயும் இருப்பதால் அதுவே ஆதாரமாகவும் இருக்கிறது. இந்த ஹக்கான தாத்து உண்டென்பதை அனுமான அறிவைக் கொண்டேயன்றி வேறு எவ்வகையிலும் அறிய முடியாதென்பதை நாம் தெளிவாய் விளங்கியறிய வேண்டும். இப்போது ஏ.அப்துல் றஊப் என்பவரின் விஷயத்தை நோக்குவோம்.

இந்த அப்துல் றஊப் என்பவர் தாத்தைத் தொட்டறியலாம் கண்ணால் பார்க்க முடியாதென்று கூறியிருந்தாரே! இவர் காலம் என்ற தாத்தை எங்கேயாவது எப்போதாவது தொட்டுப் பார்த்ததுண்டா? நம்மில் எவராவது காலம் என்ற தாத்தை தொட்டுப் பார்த்திருக்கிறோமா? காலம் வேண்டாம் என்னுடலுக்கும் உங்களுடைய உடலுக்கும் தாத்தாயுள்ள றுூஹுவையாவது இவர் தொட்டுக்காட்டுவாரா? அவராவது அவருடைய தாத்தான

றூஹுவை தொட்டுப்பார்த்ததுண்டா? நல்லடியார்களான மஹான்களின் பெயரைக் கேடயமாகவும், தௌஹீதை லேபலாகவும் கொண்டு கையில் காப்பும், கழுத்தில் பூண் நூலும் போட்டுப் பணம் சேர்த்து வயிறு வளர்க்கும் கஞ்சா ஞானத்திலூறிய அமாவாசைப் பூசாரியார் தான் கூறுகிற விஷயங்கள் தம்முடைய அபிப்பிராயமல்லவென்றும் பெரியோரின் அபிப்பிராயத்தையே நான் எழுதுகிறேன், பேசுகின்றேன் என்றும் கூறுகிறார். பொதுமக்களின் கேள்விகளில் மாட்டிக்கொண்டால் தப்ப முடியாதென்பதை இந்த பூசாரியார் தெளிவாய் அறிந்து கொண்டமையால் தான் பெரியோர்களைக் கேடயமாய் அமைத்துக்கொண்டிருக்கின்றார். கிணற்றாழம் பார்க்கக் குரங்கு வாலைக் கருவியாய்க் கொள்வதுபோல் குத்துபுகளான நல்லடியார்களின் அறிவை எடை போட இந்தப் பூசாரியார் கஞ்சா மஸ்த்துவையும் அமாவாசை அறிவையும் கருவியாய்க் கொண்டிருக்கிறார். எமது மூதாதையர் எவ்வழியில் சென்றார்களோ அவ்வழியே எமக்குப் போதுமென்று முஷ்ரிக்கீன்கள் கூறியது போலவே இவரும் கூறிக்கொண்டிருக் கிறார். இவர் எவ்வகுப்பில் உள்ளவர் என்பதை எடைபோடுவது வாசக நேயர்களின் கடமையாகும்.

மனித அறிவு வட்டத்தையும், உள்ளுணர்தலையும் கடந்ததாய் இருக்கும் (கடவுளை) தாத்தைத் தொட்டுப்பார்க்கலாம் காணமுடியாதென்று கூறுகிற இந்த கப்புகனார் சித்த சுவாதீனமற்ற ஓர் உளநோயாளியாய், போதையில் ஊறிய மயக்கமுடையவராய் இருக்கிறார் என்பது எனது அபிப்பிராயமாகும். மின்சாரத்தைத் தொட்டுணர்வால் அறியலாம், கண்ணால் காண முடியாதுதான். ஆகையால் எமது பூசாரியார் கூறுகிற தாத்தென்ற அல்லாஹ்வை நாம் மின்சாரம் என்றுதான் கணிக்க வேண்டியிருக்கிறது. 7:7, 7:143, 57:3 போன்ற குர்ஆன் வசனங்களுக்கு இந்த பரமார்த்த குருவான பூசாரியார் என்ன பொருட்களைக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை.



தாத்தைத் (வுஜூதை) தொட்டுணரலாமென்று கூறுவோர், தாங்கள் விளக்கமளிப்பது தௌஹீதுதான் என்று கூறிக் கொண்டாலும் இவர்களுடைய வாதங்கள் ஷிர்க்காகவும் குப்ர் ஆகவும் அமைந்திருக்கின்றன எப்படியென்றால் தாத்தைத் தொட்டுணரலாம் என்னும்போது பல குற்றங்கள் ஏற்படுகின்றன.

அவையாவன:-

1. தாத்தைத் தொட்டறியலாமென்ற இவ்வாதம் ம∴கூல், மன்கூல் ஆகிய மூலப்பிரமாணங்களுக்கு விரோதமாய் அமைவதால் இவர் குர்ஆன் ஹதீஸை மறுக்கும் காபிராய் இருக்கிறார். இவர் சுய மூளையின்றி இரவல் மூளையுடன் இயங்கும் பின்பற்றல்வாதியாவர். இவரின் கூற்றுப்படி இவர் லாஹிரை ஏற்றவராயும் பாதினை மறுத்தவராயும் அமைவதால் இவரை நாம் ஒர் காபீர் என்று கூற நேரிடுகிறது.

2. தாத்தைத் தொடலாமென்பவர் அல்லாஹ்வை ஜடப்பொருளாய்க் கற்பனை பண்ணுகிறார். எனவே இவர் இஸ்லாத்தின் அடிப்படையைக் கூட அறியாத மூடராயும், காபிராயும் இருக்கிறார் என்று கூற நேரிடுகிறது.

3. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் இறைவனைக் கண்ட பொருளாய்க் கண்டது மட்டுமன்றி, அதை (சிருஷ்டியை) வணங்கலாமென்று ஒப்புக் கொண்டவருமாகிறார். (அதாவது இவர் விக்ரக வணக்கத்தை ஆதரிப்பவராகிறார்.) விக்கிரக வணக்கத்தை ஆதரிப்போர் காபிர்கள்தான்.

4. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் மறுபிறவியை ஒப்புக்கொண்டவராகிறார். இந்தக் கொள்கை இஸ்லாத்துக்கு முற்றும் முரணானது. மறுபிறவியை ஏற்பவர் ஓர் இந்துவே அன்றி முஸ்லிமாய் இருக்க முடியாது.

5. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் தாத்தென்ற அல்லாஹ் விகாரப்பட்டும், கெட்டழிந்தும்தான் பிரபஞ்சமாய் மாறி இருக்கின்றான் என்று ஒப்புக்கொண்டவராகிறார். இது இந்துக்களில் ஓர் பகுதியினரின் கொள்கையாகும். இது சுத்தமான ஷிர்க்காய் அமைகிறது. எனவே இக்கருத்தை ஏற்பவர் முஷ்ரிக்குத்தான்.

6. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் பாத்தினை மறுப்பவராயும் நரக சுவர்க்கங்களை மறுப்பவராயும் இருக்கிறார். (அதாவது தொட்டறிய முடியாதவை தாத்தல்ல என்று நம்புவராகிறார்.) எனவே இவர் தன்னை ஓர் விசுவாசி என்று உரிமை பாராட்ட முடியாது. இவர் ஓர் முஷ்ரீக்கு என்றே கணிக்கப்படுவார்.

7. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் இந்துக்களில் ஒரு பிரிவினரான துவிதவாதிகளில் உள்ளவராயிருக்கிறார். ஆகையால், இவர் இஸ்லாத்தின் விரோதிகளில் பித்அத் வாதிகளில் ஒருவராய் இருக்கிறாரென்று கூற நேரிடுகிறது.

8. தாத்தைத் தொட்டறியலாமென்பவர் தௌஹீதென்ற ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு விபரம் தெரியாது பாமர மக்களை வழிகெடுப்பதோடு, இஸ்லாத்தின் தௌஹீதுக்கெதிரான பித்அத்தை விற்று வயிறு வளர்க்கும் ஓநாய்க்கொப்பான உள்ளமுடைய பரமார்த்த குருவாகவும் இருக்கிறார். இவரை ஓர் வழிகெட்ட முர்த்தத் என்று கூறுவதில் எவ்வித தவறுமே கிடையாது.

இன்னும் எவ்வளவோ கூறிக் கொண்டிருக்கலாம். அறிவுடையோருக்கு இவ்வளவே போதுமானதாகும். இவ்வளவு தூரம் இஸ்லாத்தை விட்டு விலகிச் சென்ற ஒரு வழிகேடன் தாத்தைத் தொட்டறிய முடியாதென்று கூறுவோரை வழிகெட்டவர்களென்று கூறினால் இவர் சித்த சுவாதீனமற்ற ஓர் பித்தனாய்த்தான் இருக்க வேண்டும்.



தாத்து, வுஜூது, ஹக்கு, அல்லாஹ் ஆகிய சொற்களை ஓரளவு சிந்தனைக்கு எடுத்துப் பாருங்கள். அல்லாஹ் என்பது இடுகுறிப்பெயராய் இருக்கிறது. மனித அறிவு வட்டத்தைக் கடந்து இருக்கிற இடத்தில், திசையில், இலக்கத்தில் கட்டுண்ணாத, இனம் தெரியாத அதையன்றிப் பிறிதொன்றில்லாமல் ஏகமாய் உள்ள மூலாதாரத்துக்கு மட்டுமே அல்லாஹ் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இது மனிதனால் இடப்பட்ட பெயரென்றும் இறைவன் தனக்குத் தானே சூட்டிக்கொண்ட பெயரென்றும் பலவிதமான அபிப்பிராய பேதங்களுண்டு. இவ்விடயம் எப்படியும் இருக்கட்டும். இவ்விஷயம் இப்போது இங்கு அவசியம் இல்லை.

அல்லாஹ் என்ற பெயர் அவனுடைய அனைத்து மர்த்தபாக்களையும் (மனித அறிவில் அமைந்த, அமையாத எல்லா நிலைமைகளையும்) ஒன்றுசேர்த்துக் கொண்ட பெயராகும். இதற்கதிகமான விபரம் இப்போது அவசியமில்லை. பௌதீக, சூட்சும அல்லது நாம் அறிந்த, அறியாத பிரபஞ்சங்கள் யாவிலுமுள்ள சகல நாமங்களும் அல்லாஹ் என்ற நாமத்தில் பொதிந்துள்ளன. சர்வ பிரபஞ்சமும் (சர்வ சிருஷ்டிகளும்) இந்த அல்லாஹ் என்ற அஸ்மாவில் பொதிந்துள்ள நாமங்களின் சூறத்துக்களே. இந்த அல்லாஹ் என்ற நாமத்தால் சூட்டப்படும் மூலாதாரத்தை விளக்குவதற்காகவே 112ஆம் சூறாவில் "அஹதுன்" என்ற நாமம் தரப்பட்டிருக்கிறது. இந்த மூலாதாரப் பொருள் உண்டென்பதை எவ்வித சக்குச் சந்தேகமும் இல்லாமல் மனிதன் அனுமான அறிவின் வாயிலாய் அறிந்து கொள்ளமுடியும்.

தாத்து, வுஜூது என்ற சொற்கள் ஆத்மீகத் துறையிலுள்ள கலைச்சொற்களாய் இருக்கின்றன. இச்சொற்கள் "அமா" என்ற மனித அறிவுக்கெட்டாத நிலையை மட்டும் குறிப்பிட்டுக் காட்டுபவையாகும். தாத்து, வுஜூது, ஹக்கு என்றால் அஸ்மா, சிபத்து என்ற எவ்வித வேறுபாடுமில்லாமல் மனித அறிவு வட்டத்தைக் கடந்ததாய் இருக்கிறதென்பதே அதன் அர்த்தமாகும். எனவே, ஓர் பொருளை (ஜடத்தை) தொட்டுக்காட்டி இது

அல்லாஹ்தான் என்றால் இது குப்றுவாய் இருக்கிறது. இதிலேற்படும் குற்றம் இறைவனைக் கண்டப்படுத்தியது மட்டும்தான். கிறிஸ்தவர்களின் நிலைமை இதுதான். இவ்வகையினரோடு சம்பந்தங்கொள்ள எமக்குரிமையுண்டு. இதற்காதாரம் குர்ஆன் 5:5.

ஆனால் ஜடம் என்ற பொருளை நோக்கி இது அல்லாஹ் என்ற தாத்தேதான் என்றும், தாத்தைக் கண்ணால் காண முடியாதென்றும், தொட்டுத்தான் அறிய வேண்டுமென்றும் ஒருவர் கூறுவாரேயானால் நாம் அவரை காபீர், முஷ்ரிக் என்றெல்லாம் கூறுவதோடு இவர் இஸ்லாத்தைக் கெடுக்க வெளியாகியுள்ள தஜ்ஜாலின் கோஷ்டியிலுள்ளவர். இவரைத் பித்அத்வாதி என்று கூறுவதே பொருத்தமானது. இன்னோர் இணை கற்பிக்கும் முஷ்ரிக்குகளாய் இருப்பதால் இவர்களுடன் எவ்வித சம்பந்தமும் கொள்ள முஸ்லிம்கள், மூமின்களுக்கு உரிமை கிடையாது. இதற்காதாரம் குர்ஆன் 2:221.

தாத்தைத் தொட்டறியலாம் பார்க்கமுடியாதென்று கூறுவோர் இஸ்லாத்தில்தான் நாங்கள் இருக்கிறோம் என்று கூறிக்கொள்ளட்டும். நமக்கொன்றும் கவலையில்லை. ஆனால், கொள்கையளவில் அவர்கள் இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமான முஷ்ரிக்குகளின் கொள்கையில் ஊறியவர்கள் என்பதை மறுக்கமுடியாது. அனேக ஆதாரங்களைத் தரமுடியும். நான் சுருக்கத்தைக் கருதி அவற்றை இங்கு எழுதவில்லை.



### காத்தான்குடியைச் சேர்ந்த ஏ. அப்துல் றஊப் அவர்களுக்கு எனது விஷேட வேண்டுகோள்:

1. தாத்தைத் தொட்டுணரலாம், கண்ணால் காணமுடியா தென்று நீங்கள் உங்கள் "நனவாகும் ஓர் கனவு" என்ற நூலில் கூறியிருக்கிறீர்கள். நீங்கள் கூறுவது உண்மையென்றால், மூஸா (அலை) அவர்களும் பிர்ஔனும் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் போல் ஓர் ஒப்பந்தம் செய்யவேண்டியது அவசியமாகிறது. அதாவது நாம் இருவரும் செயல் விளக்கம் காட்டி மக்களை உண்மையின் பக்கம் திருப்பவேண்டி இருப்பதால் மக்களை ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஓர் நாளில் கூடச் செய்வோம். அவர்கள் முன்னிலையில் நீங்கள் கூறுகிற தாத்தை தொட்டுக் காட்டுங்கள். தொடப்படும் தாத்தை கண்ணால் காண முடியாததென்று நீங்கள் கூறினாலும் நீங்கள் தொட்டுக் காட்டும் தாத்தை எங்களால் பார்க்க முடியுமென்பதை நான் நிரூபணம் செய்து காட்டுகிறேன். வேண்டுமானால் நீங்கள் தொட்டுக்காட்டும் தாத்தை நான் கமராவைக் கொண்டு போட்டோவை எடுத்துக் காட்டுகிறேன். இவ்விஷயத்துக்கு நீங்கள் முன்வருவீர்களா? இல்லையென்றால் நீங்கள் மக்களை வழிகெடுக்கும் ஏமாற்றுப் பேர்வழிதான் என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

2. நீங்கள் கூறுவதுதான் உண்மையென்று உங்களுடைய அறிவுக்குப்பட்டால் உங்களுடைய கூற்றை நிரூபணம் செய்யக்கூடிய ஒரு நூலை எழுதி வெளியிடுங்கள். ஆனால்

அந்த இமாம், இந்த இமாம் எழுதியதென்று கூறிக்கொண்டு இஸ்லாத்தின் கொள்கைக்கு விரோதமான கிதாபுகள், புத்தகங்களை ஆதாரம் காட்டாமல் குர்ஆன் ஹதீஸ்களையும் ம∴கூல் என்ற ஆராய்ந்துணரும் அறிவையும் ஆதாரம் காட்டுங்கள். உலகக் கல்விகளில் நீங்கள் கற்றறிந்த எந்தக் கல்வியைக் கொண்டேனும் நிரூபித்துக் காட்டுங்கள். நீங்கள் ஆண்மகனாய் இருந்தால் உங்கள் கூற்றை புத்தகரூபத்தில் நிரூபணம் செய்து காட்டுங்கள். உங்களால் இப்படிச் செய்ய முடியாது என்றால் நீங்கள் ஓர் பித்அத் வாதி என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

3. நீங்கள் கூறும் கூற்றை எள்ளளவும் சிந்தனை செய்யாமல் யாரோ பெரியார் சொன்னார் என்று நம்பிக்கைகொண்டு அச்சொல்லை விடாப்பிடியாய் - குரங்குப்பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். தான் கற்றறிந்ததை உண்மை தானென்று உணராதவரையில் அக்கல்வியை மக்களிடத்தில் பிரசாரம் செய்ய முற்படுபவர் புகழ் விரும்பும் போலியேயன்றி ஞான விளக்கம் தரக்கூடிய ஆலிமே அல்லவென்பதை நீங்கள் உணரவேண்டும். அல்லாஹ்வுக்கு ஏழு வயதென்றும், ஹிராக்குகையில் தலையில் கையை வைத்துக்கொண்டு இறைவன் படுத்தானனென்றும் கூறி புரட்சியை உருவாக்கினீர்கள். ஆனால் உங்கள் கூற்றுக்கு இதுகாலவரை நீங்கள் காட்டிய ஆதாரங்கள் குணங்குடி மஸ்தான் பாட்டும், உங்கள் வழிகாட்டிகளான மேதைகளின் புத்தகங்களிலுள்ள அறிவுக்கு விரோதமான எழுத்துக்களும்தான். உங்களுடைய இமாமை நீங்கள் பின்பற்றுங்கள். எமக்கொன்றும் கவலையில்லை. ஆனால், என்னுடைய இமாம் குர்ஆனாகவும், சாட்சி ஹதீஸாகவும், நீதிபதி எனது அறிவாகவும் இருப்பதால் உங்கள் கூற்றை ம∴கூல், மன்கூல் என்ற பிரமாணங்களுக்கமைவாய் நிரூபணம் செய்து காட்டுங்கள். உங்களால் முடியாதென்றால் நீங்கள் தீனுல் இஸ்லாத்தை விட்டு விலகிய ஓர் முர்த்தத்தே என்பதையும் மக்களை வழிகெடுக்கும் ஷைத்தானின் வாகனமாய் இருக்கின்றீர்களென்பதையும், தொடும் பொருளை பார்க்க முடியாதென்றும் கூறுவதால் நீங்கள் சித்த சுவாதீனமற்ற ஓர் உளநோயாளி யென்பதையும் வயிறு வளர்ப்பதற்காக நல்லடியார்களின் பெயரை வைத்துக்கொண்டு செயல்படு கிறீர்களென்பதையும், பேராசையும் பொறாமையும் பிடித்த சிதறிய சிந்தனையுடைய பின்பற்றல் வாதியென்பதையும் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களென்பதே அதன் அர்த்தமாகும். எனவே தாத்தைத் தொட்டுக்காட்ட முன் வாருங்கள். முடியாதென்றால் உங்கள் நிரூபணத்தைப் புத்தக ரூபமாய் வெளியிடுங்கள். நிச்சயமாக இந்த இரண்டில் ஒன்றைச் செய்துகாட்டும் நாளை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.



4. உங்கள் நூலில் சிருஷ்டியை ம∴கூல் என்ற அறிவினால்தான் அறியலாம் என்று கூறியிருந்தீர்கள். புலனுறுப்புக்களை ஊடகமாய்க் கொண்டறியும் அறிவையும், ஆராயும் அனுமான அறிவையும் ஒன்று சேர்த்துக் கொண்டதே ம∴கூல் என்பது. உங்கள் கருத்துப்படி சிருஷ்டியைக் கண்ணால் பார்க்க முடியாதென்று கூறுகிறீர்கள். மனிதனுடைய வெளிப்புலங்களும், உட்புலங்களும் ஸ்பரிஸமென்ற உணர்விலேயே கட்டுண்டவையென்பது உங்களுக்கு தெரியாத ஓர் விஷயம். ஸ்பரிஸம் ஹைவானி, ஷெய்த்தானியோடு தொடர்புடையது என்பதும், மலக்கானி, றஹ்மானி என்பவை நானென்றுணரும் றூஹோடு தொடர்புடையவையென்பதும் நீங்கள் அறியாத விஷயம்தான். எனவே, சிருஷ்டியைப் புலன்களால் காணமுடியாதென்றும், ம∴கூல் என்ற அறிவினால்தான் அறியவேண்டுமென்றும் வாதிடும் உங்களுக்கு

உங்களுடைய ஐந்து புலனன்கள் வாயிலாகவும் சிருஷ்டியைக் காட்டித்தரவேண்டியது எனது கடமையாகும். ஆதலால் இதற்காக ஓர் நாளை ஒதுக்கி என்னிடம் வந்தால் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியையும் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியையும் என்னால் காண்பித்துத் தரமுடியும். எனவே உங்கள் வாதத்தை நீங்கள் நிரூபணம் செய்து காட்ட வேண்டிய நாளை நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

நன்றி



Estd 19-07-1979

# இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பேரவை
## ISLAMIC SPIRITUAL MOVEMENT

Meera Mosque Road,
BT/ KATTANKUDI - 6.
(Sri Lanka)

02. 09. 1981

அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஞானமேதா எம். எஸ். அப்துல்லாஹ் மௌலவி அவர்களுக்கு
"அஸ்ஸலாமு அலைக்கும்"

[illegible] திகதி வெள்ளிக் கிழமை நடைபெற்ற "ஞானச்சுரங்கம்" வெளியீட்டு விழாவுக்குத் தாங்கள் அழைத்த போதிலும் [illegible] உடன் இங்கு வந்து ஞான உரை நிகழ்த்தி சஞ்சிகையை வெளியிட்டும் வைத்தீர்கள். அதற்காக பேரவை சார்பிலும் ஞானவழி நடக்கும் நல்லடியார்கள் சார்பிலும் பெருமனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், செப்டம்பர் மாதப் பத்திரிகைக்கு தங்களுடைய மேலான கட்டுரை ஒன்றை எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் திங்கட்கிழமை 7ம் திகதிக்கு முன் அனுப்பினால் பெரிய உதவியாக இருக்கும்.

ஞானச் சுரங்கத்தை வெளியூர்களில் விநியோகம் செய்வதற்கு M.I. அப்துல்லாஹ் [illegible] அவர்களை நியமித்துள்ளோம். அவர்கள் [illegible] கொடுக்க முடியுமென்றால் விற்பனை செய்யும் [illegible] தேவையாயின் அறியத் தருமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வஸ்ஸலாம்

தங்களன்புள்ள
[illegible]

Estd. 19-07-1979

# இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பேரவை
## ISLAMIC SPIRITUAL MOVEMENT

Meera Mosque Road,
BT/ KATTANKUDI - 6.
(Sri Lanka)

[illegible]

05/01/1981

அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக!

அன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய ஞானமேதை M.S.M. அப்துல்லாஹ் அவர்களுக்கு! அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்!

நாங்களனைவரும் அல்லாஹ்வின் அருளால நல்ல சுகமாக வாழுகின்றோம். தாங்களும், தங்களின் குடும்பத்தாரும், தங்களுக்குப் பக்கபலமாக இருக்கின்ற சகோதரர்களும் சுகமாகவும், சுபீட்சமாகவும் வாழ அல்லாஹ் அருள்வானாக!

எமது இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பேரவையில் இதுவரை 211 அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளார்கள். இவர்கள் யாவரும் தமது விருப்பத்தின் படி காரியாலயத்துக்கு வந்து சேர்ந்தவர்களேயன்றி, எமது முயற்சியால் அவர்களைத் தேடிச் சென்று சேர்த்தவர்களல்ல. அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்காக நாம் முயற்சி செய்திருந்தோமானால் இந்தாண்டு முடிவின்போது பத்தாயிரம் பேர்களையாவது சேர்க்க முடியும் (இன்ஷா அல்லாஹ்).

செய்கு நூரி மௌலானா அவர்கள் கொள்கையைப் பொறுத்த மட்டில் 'அல் கலிமதுத் தய்யிபா' புக்கு நாம் கொண்டுள்ள பொருளைத்தான் அவர்களும் கூறுகிறார்கள். அதாவது ஒன்பது இன்மையும் அல்ல என்பதும், சர்வ சிருஷ்டிகளும் அந்த வுஜூதுடைய தஜல்லியாத்துகள் வெளிப்பாடுகள் என்பதும், இவைகள் என்று கூறப்படுபவைகளோ, யாவும் பொதுவாக சிருஷ்டிகளோ அந்த மெய்ப்பொருளான வுஜூதுக்கு வேறானதல்ல என்பதும் தான் அவர்களுடைய கொள்கையும், கோட்பாடும். ஆயினும் தாங்கள் இதுக்கு அவர் வந்த நேரம் தாங்கள் எழுதிய நூலைப் பார்த்து இதில் தவறான கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளதென்றும், இவைகள் திருக்குர்ஆனை எதிர்க்கக் கூடியது அவற்றையுள்ளவை யென்றும் தமது முரீதீன்களிடம் கூறி, அந்தப் புத்தகத்தைப் பார்க்க வேண்டாம் எனவும் [illegible] செய்துமிருக்கின்றார். புனிதமான அறிஞர் அவர் அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணமென்று நான் ஆராய்ந்த பொழுது, அதில் சில மேம்பட்டவர் இருக்கிறார் என்று அவர் நினைக்கின்றார் போலும். மேலும், நாம் உருவாக்கிய இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பேரவையையும் அவர் எதிர்க்கின்றாராம். காரணமென்னவென்று அவருடைய முரீதீன்களிடம் நான் கேட்டபோது, இப் பேரவையை உருவாக்குவதற்கு அவரிடம் ஆலோசனை கேட்கவில்லையாம். மேலும் அவர் உருவாக்கிய "ஹிஸ்புல்லா சபை" என்ற பெயரை இந்தச் சபைக்கு வைக்கவில்லையாம். ஒரு செய்குடைய மனநிலை இவ்வாறு இருப்பதையிட்டு எனது மனம் பெரிதும் வேதனைப்படுகின்றது.

இதுகாலவரை எவரும் இனி ஏற்சனைக்க [illegible] க்கையில் தாங்கள் பெரிய தொரு நூலை உருவாக்கி பலருக்கு [illegible] முறையில் மறுக்க முடியாத ஆதாரங்களைக் காட்டி ஞானக் கல்வியைப் பரப்புவதற்கு முன் வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இக் கல்வியைப் பரப்புவதற்காக தாங்கள் [illegible]





முயற்சிகளுக்கும் எமது பேரவை ஆதரவாயிருக்குமென்பதை மகிழ்ச்சியுடன் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

எமது பேரவை வளர்ச்சிக்காக நாங்கள் செய்ய வேண்டிய உதவிகளும் நிறையவுள்ளன. அவற்றில் முதன்மையாக தங்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்ட தங்களின் ஆதரவாளர்களை எமது பேரவையின் அங்கத்தவர்களாகச் சேர்க்க வேண்டும். இச்சந்தர்ப்பமாகவும், இஞ்ஞானக் கலையை இலங்கையில் பரவலாக்கும் நிறைவேறவும் தங்களுடன் கலந்துரையாட விரும்புகின்றோம். இன்ஷா அல்லாஹ் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் எமது பேரவை சார்பில் தங்களைச் சந்திக்க வருவோம். இத்துடன் 25 அங்கத்துவ விண்ணப்பப் பத்திரம் வருகின்றது. தங்களின் ஆதரவாளர்களிடம் கொடுத்து நிரப்பி, அங்கத்தவர்களாய்ச் சேர்த்து, எமது பேரவை வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தாங்களாரிலும் மெய்ஞ்ஞானத்தைப் பரப்புவதற்கு செய்யும் முயற்சிகளுக்கு, அதற்கு உண்மை நேர்மை [illegible] வழியில் செயல்பட வேண்டும். இதுவுமின்றும் தங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது இன்ஷா அல்லாஹ்!

மேலும், தங்களின் ஆதரவாளர்கள் அனைவரையும் விசாரித்ததாகச் சொல்லவும். மற்றவை பின். நன்றி!

வஸ்ஸலாம்.

தலைவர்:-
மௌலவி A. அப்துர் ரவூப் மிஸ்பாஹி.

செயலாளர்
[illegible]

## ஞானச்சுரங்கம்

பேரின்ப அமுத இதழ்
அகஸ்ட் 1981 ஷவ்வால் 1401 இதில் பிரசுரமானது.

### பாராட்டுகின்றோம்

மருதமுனையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மதிப்புக்குரிய ஞானமேதை ஈமானின் உண்மையை நீ அறிவாயா? நூலாசிரியர் ஜனாப் M. S. M. அப்துல்லாஹ் பயில்வான் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

விஞ்ஞானம் விரிந்து, மெய்ஞ்ஞானம் மறைந்து, இல்லை உலமாக்களால் மறைக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் தவ்ஹீத் என்று சொல்லப்படுகின்ற ஏகத்துவ, அத்வைதக் கொள்கையையும், இஸ்லாத்தின் மூலமந்திரமான, லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமானின் சரியான விளக்கத்தையும் யுக்திப் பிரமமாணங்கள் மூலமும், சுருதிப் பிரமாணங்கள் மூலமும் தெள்ளதிற் புலனாக மிகவும் துணிச்சலுடன் அந்நூலில் அவர்கள் விளக்கியிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

இதுவரை ஈழத்து அறிஞர்களிலெவரும் இலகு தமிழில் இவ்வளவு விரிவாகவும், தெளிவாகவும் “தவ்ஹீத்” பற்றி எழுதவே இல்லை ஈழத்து அறிஞர்களில் ஒருவரான அறிஞர் சித்திலெப்பை அஸ்றாறுல் ஆலம் என்ற நூலை எழுதியிருந்தாலும் கலிமாவின் விளக்கம் பயில்வான் அவர்களின் நூலில் விளக்கப்பட்டுள்ளது போல் அந்நூலில் கூறப்படவில்லை. அறபு மத்றசாக்களில் பல வருடம் கல்வி பயின்று மௌலவி தராதரப்பத்திரம் பெற்றும், கிணற்றுத்தவளைகள் போல் ஒன்றுமே தெரியாமல் நாட்டில் நடமாடும் சிலர், அன்னாரின் நன்நூலை இழித்துரைத்த போதினும் அந்நூல் ‘தவ்ஹீத்’ என்னவென்றும், ‘ஷீர்க்’ என்றால் என்னவென்றும் தெளிவாக விளக்குவதை எந்தவொரு அல்லாமாவாலும் மறுக்க முடியாது. இவ்வரும் பணியை மக்களுக்கீந்த அன்னாரைப் பாராட்டுகின்றோம்.

வளர்க அவர்பணி!
மிளிர்க மெய்ஞ்ஞானம்!

இஸ்லாமிய மெஞ்ஞானப் பேரவை — - ஆசிரியர் -
காத்தான்குடி